
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16-31 ஆகஸ்டு '92
ரூ.2.50
மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

மருத்துவக் கல்லூரி தாரைவார்ப்பு

# உடையாரின் உடன்கட்டை




படிப்பகம்

www.padippakam.com

# சுபமங்களா - கோமல் சுவாமிநாதனின் முற்போக்கு முகத்திரை கிழிந்தது

விஜயா பதிப்பக வாசகர் வட்டம் சார்பாக 'சுபமங்களா' வாசகர் சந்திப்பு கோவை திவ்யோதயா அரங்கில் 19.7.92 அன்று நடைபெற்றது. அப்பொழுது கோவை ம.க.இ.க. தோழர்கள் 'சுபமங்களா' மற்றும் கோமல் சுவாமிநாதனின் 'இடதுசாரி' வேடத்தையும் பார்ப்பனீய சதிவேலையையும் அம்பலப்படுத்தி கேள்வி - பதில் பாணியில் பிரசுரம் வெளியிட்டு அரங்கு வாசலில் விநியோகித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கோவை ஞானி பேசுகையில் ம.க.இ.க.-வின் பிரசுரத்திற்கு பதில் சொல்ல வேண்டும்; பார்ப்பனீயம் பற்றி உங்கள் (கோமல் சுவாமிநாதன்) வரையறை என்ன என்று கேட்டார். கோமல் சுவாமிநாதன் தனது உரையின்போது பிரசுரத்திலிருந்த கேள்வி - பதிலை முழுமையாக படித்து காட்டிவிட்டு ''இதை நரகலாக ஒதுக்கித் தள்ளுகிறேன்; பார்ப்பனீயம் என்று பேசுவது இப்போது குஷ்பூவைப் போல பேஷனாகிவிட்டது; இது என்னைப் பாதிப்பதும் இல்லை; இதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கப் போவதுமில்லை'' என்றார். ஆனால் பதில் சொல்லாமல் இருக்கமுடியாமல் அங்கலாய்த்தார்.

''சுபமங்களாவை இடதுசாரி இலக்கியப் பத்திரிகை என்று முத்திரை குத்திக் கொள்ளவில்லை; இலக்கிய பத்திரிகை என்றுகூட சொல்லவில்லை'' என்றார். ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ் நிதிநிறுவனத்தால் நடத்தப்படும் பத்திரிகைதான் என ஒப்புக் கொண்டார்.

''கோமல் சுவாமிநாதன் என்ற தனிநபரால் எவ்வாறு இடதுசாரி இயக்கங்களை சீர்குலைக்க முடியும்? நான் சீர்குலைவு செய்தவனும் இல்லை; என்னால் சீர்குலைவு செய்யவும் முடியாது. 50, 55 ஆண்டுகளாக இருக்கும் இயக்கங்களை என்னால் எப்படி பலவீனப்படுத்த முடியும்? என்னுடைய ஆன்மாவையே சந்தேகிக்கிறார்கள்'' ''என்னிடம் சாதி-மதவாத, அடிப்படைவாதக் கருத்துக்களுக்கு இடமில்லை...'' ''ஜனநாயக அமைப்புகள் - கருத்துக்களுக்கு (பரந்த தளம்) Broad Platform அமைத்துக் கொடுக்கிறேன்'' - என்று பீற்றிக்கொண்டார். ''இடதுசாரிகள் மிகமிக மோசமாக சின்னாபின்னப் படுத்தப் பட்டிருக்கின்றார்கள். Cannibalism -நரமாமிசம் உண்ணும் போக்கு இருக்கிறது'' என்று ஆத்திரம் பொங்கச் சாடினார்.

மேலும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலை மறைமுகமாக ஆதரித்து நடத்தப்படுவதுதான் 'சுபமங்களா' என்ற நமது விமர்சனத்தை நிரூபிக்கும் வண்ணமும், தானே தனது முற்போக்கு வேடத்தை திரைகிழித்துக் கொள்ளும் வண்ணமும் பேசினார். ஜெயா கும்பலின் 'கட்அவுட்' கலாச்சாரத்தை சாடிப் பேசிய ஞானிக்கு பதிலளித்த போது ஜெயா கும்பலுக்கு வக்காலத்து வாங்கினார். ''எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை ஓட்டுப் போட்டு ஆட்சிக்கு கொண்டு வந்தவர்களே மக்கள்தான். பிறகு இதற்கே முரண்பாடாக இப்படியொரு அரசியல் சூழல், நிலைமை இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் (செய்தித் தொடர்பு சாதனங்கள்) Network-தான். அதுதான் எதை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறது என்றார்.

இறுதியாக பத்திரிகையின் நிதி நிலையை விளக்கிவிட்டு, ''பார்ப்பன பாசிச ஜெயா கும்பலின் ஆதரவு பத்திரிகையல்ல; சாதி மதவாத அடிப்படைவாதப் பத்திரிகையல்ல; இடதுசாரி இயக்கங்களை சீர்குலைக்கும் பத்திரிகையல்ல என்று நம்புகிறவர்கள் சந்தா கொடுத்து ஆதரவளியுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்து உரையை முடித்தார்.

ம.க.இ.க.-வின் பிரசுரம் பாவம், கோமல் சுவாமிநாதனை இப்படி முக்காடு போட்டு அழவைத்துவிட்டது!

பலவண்ண திரிபவாதிகள் முற்போக்கு கடைவிரித்து புதிய சிந்தனையாளர்களை -இளம் தலைமுறையினரை குழப்புகிறார்கள்; எனவே இதுபோன்றவர்களை அம்பலப்படுத்தி மூட்டைக் கட்டுவிக்கும்வரை புரட்சியாளர்கள் ஓயமாட்டார்கள்.

தகவல்:- *ம.க.இ.க., கோவை*

---

*அண்ணாமலை நகர்:*

# போலீசு நடத்திய குண்டு வெடிப்பு

கடந்த 1-15 ஜூலை '92 இதழில் ''போலீசு - கிரிமினல் அரசியல்வாதி சமூக விரோத கூட்டு'' என்ற கட்டுரையில் சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசு நிலையத்தின் கொலை, கற்பழிப்பு சம்பவம் பற்றிய செய்தி எழுதியிருந்தோம். இதழ் அச்சாகிக் கொண்டிருந்த கடைசி நேரத்தில் அதே போலீசு நிலையத்தில் குண்டு வெடித்த செய்தி கிடைத்ததும் படத்தை வைத்து ''கொட்டடிக் கொலை, கற்பழிப்புக்கு பதிலடி'' என அடிக்குறிப்பு எழுதினோம். ஆனால் பிறகு கிடைத்த செய்திகள் - கணிப்புகள் அடிப்படையில் போலீசுதான் இக் குண்டு வெடிப்பு நாடகத்தை நிகழ்த்தியுள்ளது என அறிய முடிகிறது.

இக் கொலை, கற்பழிப்பு சம்பவம் 'ஜெ' ஆட்சிக்கு பெரிய அளவில் அவப்பெயர் சம்பாதித்துக் கொடுத்தது. இதனால் ஆத்திர முற்றிருக்கும் 'ஜெ' கும்பலை சாந்தப்படுத்துவதற்காக - குண்டு வெடிப்புகள், தீவிரவாதிகளின் வன்முறைகள் மத்தியிலும், இக்கட்டான நிலையிலும் கடினப்பட்டு பணியாற்றுவதாக காட்டி 'ஜெ'யின் கண்டிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக - போலீசே குண்டு வைத்துக் கொண்டது என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்க நிறைய வாய்ப்புகள் உண்டு.

ஏனெனில் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடும் தனிநபர்களும் அமைப்புகளும் தங்கள் பெயருடன் நோக்கத்தையும் வெளிப்படுத்தும் வண்ணம் ஏதாவது முழக்கத் தாள்களை விட்டுச் செல்வார்கள். அப்படியேதும் இந் நிகழ்ச்சியில் இல்லை. சரி, ஆத்திரமுற்ற பகுதி இளைஞர்கள் இந்த நாட்டு வெடிக்குண்டை வெடிக்கச் செய்திருக்கலாம் என்றாலும் குண்டு வெடிப்பிற்குப் பிறகு போலீசு, நடவடிக்கையை கிடப்பில் போட்டுவிட்டது அதையும் பொய்யாக்கி விடுகிறது. போலீசு இதை செய்யவில்லையென்றால் மற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களைப் போல 'கேஸை' முடிப்பதற்காக தனது வேட்டையை தீவிரமாக்கி குற்றவாளிகளைப் பிடிக்கும் அல்லது ஏதாவது கதையையாவது ஜோடிக்கும். ஆனால் இச் சம்பவத்திற்குப் பிறகு அப்படி தீவிர நடவடிக்கையேதுமில்லை. பாட்டாளி மக்கள் கட்சியினர், சி.பி.ஐ.(எம்) கட்சியினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது அவ்வளவுதான்! மேலும் 'ஜெ'யை மகிழ்ச்சியில் ஆழ்த்தி - திருப்திப்படுத்தி தனது சமூக விரோத கிரிமினல் நடவடிக்கைகளுக்கு எல்லாம் பாதுகாப்பு தேடிக் கொள்வதே தமிழகப் போலீசின் நடவடிக்கையாக இருக்கையில் இக் குண்டு நாடகத்தையும் போலீசே செய்திருக்க அதிக வாய்ப்புகளுண்டு.

எனவே அண்ணாமலை நகர் போலீசு நிலைய குண்டு வெடிப்பு போலீசின் நாடகமாக இருக்கையில் அதை ''கொலை, கற்பழிப்புக்குப் பதிலடி'' என்று சொல்லமுடியாது. கடைசி நேரத்தில், முழுத் தகவலும் கிடைக்காத நேரத்தில் பரவசப்பட்டு அவ்வாறு அடிக்குறிப்பு எழுதியதை எண்ணி வருந்துகிறோம். இனி தவறு நிகழாமல் எச்சரிக்கையுடன் செயல்படுவோம்.

— ஆசிரியர் குழு

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே!

அமைப்பு பணிகள் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக கடந்த இரு இதழ்களையும் வெளியிட இயலவில்லை. மேலும் கடந்த இதழில் வந்த பங்கு சந்தை ஊழல் தொடர்பான கட்டுரையின் தொடர்ச்சி இடப்பற்றாக்குறை காரணமாக இவ்விதழில் இடம்பெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். — *ஆசிரியர் குழு*

படிப்பகம்

www.padippakam.com

ுதிய
ஜனநாயகம்

ார்க்சிய - லெனினிய
ரசியல் ஏடு

ழாம் ஆண்டு

7 - 19

ஜூலை - 15 ஆகஸ்ட் '92

ள்நாடு:
னி இதழ்: ரூ.2.50
ண்டு சந்தா: ரூ.60

வளிநாடுகள்
ான் அஞ்சலில்)
ண்டு சந்தா: US $ 15

டைப்புகள் அனுப்பவும்
ற்றும்
னைத்துத் தொடர்புக்கும்

ரா.சண்முகராஜ்,
,சிரியர், புதிய ஜனநாயகம்,
சாமியார் தோட்டம்,
,லந்தூர் சாலை,
சதாப்பேட்டை,
சன்னை - 600 015.

# கயமையின் அரசாங்கம்

நரசிம்மராவ் தலைமையிலான ஆட்சி "கயமையின் அரசாங்கம்" என்கிற பெயரை மிகக் குறுகிய காலத்திலேயே பெற்றுவிட்டது. அந்த அளவுக்கு நாளும் அதன் லஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் அம்பலமாகின்றன. அவற்றை மூடிமறைப்பதற்கும், நெருக்கடிகளைச் சமாளித்துத் தப்பித்துக் கொள்வதற்குமான முயற்சிகளே இந்த ஆட்சியின் பிரதான வேலை என்றாகிவிட்டது. பங்குச் சந்தை - வங்கி மோசடி வழக்குகளை விசாரித்துவரும் மத்தியப் புலனாய்வுக் குழு (சி.பி.ஐ) இணை இயக்குநர் கே.மாதவன், "தானே முன்வந்து ஓய்வு பெறும்" கோரிக்கையை முன்வைக்கும்படியும், விடுப்பில் போகும்படியும், இந்த வழக்குகள் விசாரணையில் இருந்து விடுவிக்கும்படி கோரவும் காங்கிரசு அரசு நிர்பந்தித்திருக்கிறது. ஸ்விஸ் நிறுவனத்திடம் இருந்து 600 கோடி ரூபாய்க்கு மின்சார ரயில் என்ஜின்கள் வாங்கியதில் நடந்த ஊழல் இரகசியங்களை வெளிப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் நிதித்துறையின் இரண்டு அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளனர். இந்த இரண்டு சம்பவங்களுமே இந்த அரசின் முன்னோடியான ராஜீவ் காட்டிய வழியிலேயே லஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளை மூடிமறைக்க முயலுவதைக் காட்டுகின்றன.

நிதித்துறை நிபுணர்களே பிரமித்துப்போகும் அளவு பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு, பல வகையிலும் பங்குச் சந்தை - வங்கி மோசடிகள் நடந்துள்ளன. போலியான கடன் பத்திரங்கள், போலியான காசோலைகள், போலியான பங்கு பத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அரசுடமை வங்கிகளில் இருந்து கோடி கோடியாகக் கையாடல் செய்துள்ளனர். கடன் பத்திரங்களைப் பரிமாற்றம் செய்வதிலும், அதற்கான கழிவிலும் மோசடி - கையாடல் செய்துள்ளனர். எவ்விதக் கணக்கும் இல்லாமலேயே, நிதி ஈட்டு ஆதாரங்கள் இல்லாமலேயே வங்கிப் பணத்தை எடுத்து பங்குச் சந்தையில் சூதாடக் கொடுத்துள்ளனர். செயற்கையாகப் பங்குகளின் விலையை ஏற்றிப் பங்குதாரர்களிடம் இருந்து கொள்ளையடித்தனர். மொத்தம் 30 ஆயிரம் கோடி ரூபாய் வரை மோசடிகள் நடந்திருப்பதாக இப்போதைக்குத் தெரிகிறது. உயர் அதிகாரிகளின் பிள்ளைகள் வேலை பார்க்கும் 4 அந்நிய வங்கிகள் மட்டும் கடன் பத்திரப் பரிமாற்றங்கள் மூலம் 700 கோடி ரூபாய் கொள்ளையடித்தன. பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் என்ற பெயரில் தனியார் துறைக்கு விற்கப்படும் அரசுடமைத் தொழில் நிறுவனங்களின் பங்குகளை சந்தைக்கு விடாமலேயே அடிமாட்டு விலைக்கு வாங்கிக் குவித்தனர். அதன் மூலம் அந்த நிறுவனங்களைத் தாமே கைப்பற்றிக் கொள்ள முயன்றனர். இப்படிக் கொள்ளையிட்ட பெருந்தொகையை அந்நிய நாடுகளுக்குக் கடத்திக்கொண்டும் போய்விட்டனர்.

இவ்வளவு மோசடிகளிலும் வங்கி அதிகாரிகள், பங்குச் சந்தைத் தரகர்கள் மட்டுமல்ல, பெரும் தரகு அதிகார முதலாளிகள், அரசு - குறிப்பாக நிதித்துறை அதிகாரிகள், மந்திரிகள் உட்பட அரசியல் தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கான ஆதாரங்கள் சி.பி.ஐ. இடம் சிக்கிவிட்டது. ஆனால் அந்த இரகசியங்கள் வெளியாகிவிடக் கூடாது என்பதற்காக சி.பி.ஐ. இணை இயக்குநர் கே.மாதவனுக்குக் கடும் நெருக்கடி கொடுக்கிறது காங்கிரசு அரசு. இந்த மோசடியில் பங்கேற்றுள்ள ஆந்திரா வங்கி, பெங்களூர் ஃபேர்குரோத் கம்பெனிகளை சோதனையிட ஆந்திரா, கர்நாடகாவுக்குள் நுழையவே அந்தந்த மாநில அரசுகள் சி.பி.ஐ.-க்குத் தடை விதித்துள்ளன. இப்படிப்பட்ட நிர்பந்தங்களால் இந்த வழக்குகளை விசாரிப்பதில் இருந்து ஓடிவிட்டால் போதும் என்ற நிலைக்கு மாதவன் தள்ளப்பட்டுள்ளார். அவருக்கும் இந்த வழக்குகளில் முக்கியக் குற்றவாளி அர்சத் மேத்தா போன்றவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் பதவி உயர்வு கோரி அரசை "பிளாக்மெயில்" செய்வதாக மாதவன் மீது அவதூறு செய்யும் காங்கிரசு தனது விசுவாசியான சர்மாவிடம் இந்த வழக்குகளை ஒப்படைத்துள்ளது.

அரசு அதிகாரிகளோ, மந்திரிகள் உட்பட காங்கிரசுப் புள்ளிகளோ யாரும் இந்த மோசடி வழக்குகளில் சம்பந்தப்படவில்லை என்று அரசு திரும்பத் திரும்ப மறுக்கிறது. ஆனால் இந்த மோசடி விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் வெளியாகி மந்திரி சிதம்பரமும், திட்டக் கமிசன் உறுப்பினர் வி.கிருஷ்ணமூர்த்தியும் பதவிவிலக நேர்ந்துள்ளது. 2.5 லட்சம் ரூபாய் முதலீடு செய்து, சிதம்பரமும் அவரது மனைவியும் 37 கோடி ரூபாய் மதிப்புடைய பங்குகளை வாங்கினர். மோசடிக் கம்பெனியான ஃபேர்குரோத்தின் இயக்குநர்களில் ஒருவர்தான் கிருஷ்ணமூர்த்தி. இப்படி அடுக்கடுக்கான இரகசியங்கள் வெளிவருகின்றன. இந்த வழக்குகளை விசாரிக்க ரிசவர் வங்கி நியமித்திருக்கும் கமிட்டியின் தலைவர் ஜானகிராமனே மோசடியில் சம்பந்தப்பட்டிருக்கிறார். நாடாளுமன்ற விசாரணைக் குழுவும் கூட உண்மையை முழுமையாக வெளிக் கொண்டுவர முடியாது; ஏனெனில் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களுமே இந்த மோசடியில் ஆதாயம் அடைந்துள்ளனர். இரத்தம் உறிஞ்சும் அட்டைகளாக சமுதாயத்தை ஒட்டிக் கொண்டுள்ள இந்தக் கயவாளிகளைத் தீயிட்டு வீழ்த்துவோம்.

## துரோகிகள் விடுதலைவிழா கொண்டாடுவதா?

ஆகஸ்டு 9-ந் தேதியில் இருந்து "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் நினைவாக ஆகஸ்டு புரட்சிப் பொன் விழாவை ஓராண்டுக்கு வெகு சிறப்பாகக் கொண்டாடுவதில் காங்கிரசு இறங்கியிருக்கிறது. ஆகஸ்டு புரட்சியின் துரோகிகள் என்று காங்கிரசின் அவதூறுக்கு இலக்காகிவரும் இரு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கூட வெட்கமின்றி இந்த விழாவில் கலந்து கொள்கின்றன. விடுதலை விழா கொண்டாடுவதற்குக் கொஞ்சமும் அருகதை அற்ற துரோகிகளின் வழிவந்தவர்கள் தாம் இந்தக் காங்கிரசுக் கயவாளிகள். "வெள்ளையனே வெளியேறு" தீர்மானம் நிறைவேற்றிவிட்டு அடுத்த நாளே காலனிய அரசிடம் இயக்கத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டு "சிறையில் விருந்துண்ண"ப் போய்விட்டார்கள் காங்கிரசுத் தலைவர்கள். தேசபக்தர்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தாம் காலனிய ஆட்சியைக் கலங்கடித்தன. அதுவும் வன்முறைக்குத் திரும்பிவிட்ட காரணத்தைக் கூறி இயக்கத்தை நிறுத்துவதாக அறிவித்தனர். பிறகு, ஏகாதிபத்தியத்துடன் இரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, நாட்டைப் பிளந்து, அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்டு இன்னமும் ஏகாதிபத்திய நலன்களுக்கு ஊழியஞ் செய்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# ரஜினி:
# கவர்ச்சி அரசியலின் அடுத்த நாயகனா?

பிரபல சினிமா நடிகர் ரஜினி காந்த் தமிழ்நாட்டு அரசியலில் குதிப்பாரா? இல்லையா? குதித்தால் நிற்க முடியுமா? இல்லை கால் முறிந்துபோகுமா?

இந்த ஊகம், வதந்தி - கிசுகிசு, கணிப்பு ஆகியவை தமிழ்நாட்டு அரசியலின் முக்கியமான, காரசாரமான விவாதப் பொருளாக 'மாறி இருக்கிறது.

இது வீண் புரளியும் வதந்தியும்தான் என்று பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த ரஜினி காந்த், தென்னிந்தியத் திரைப்படத் துறையினர் ஜெயலலிதாவுக்குத் தரும் பாராட்டு விழாவில் தனது நிலையைத் தெளிவுபடுத்திவிடுவதாகச் சொன்னார். ஆனால் அந்த விழாவில் ரஜினியின் பேச்சு தனது நிலையைத் தெளிவுபடுத்துவதற்குப் பதில், மேலும் குழப்புவதாகவே இருந்தது.

''அரசியலுக்குப் போனால் மன நிம்மதி போய்விடும். நிம்மதியை இழக்க நான் விரும்பவில்லை'' என்று பேசிய ரஜினி தொடர்ந்து, ''ராஜீவ் பிரதமராவார் என்று முன்கூட்டி கூறமுடிந்ததில்லை. சஞ்சய் இறந்ததால் ராஜீவ் அரசியலுக்கு வந்தார். அரசியலில் இருந்து விலகி இருந்த நரசிம்மராவ் பிரதமரானதும் முன்கூட்டிக் கூறமுடியாத நிகழ்ச்சிதான். நான் நேற்று பஸ் கண்டக்டர். இன்று சூப்பர் ஸ்டார். நாளை என்ன என்று யாருக்குத் தொரியும்? எல்லாம் கடவுள் செயல். ஆனால் கடவுள் என் தலையில் அரசியல் என்று எழுதிவிடக் கூடாது என்பது எனது விருப்பம்'' எனப் பேசி முடித்தார்.

உடனடியாகவே ரஜினி காந்த் அரசியலில் குதித்துவிடுவார், அதை அந்த விழாவிலேயே அறிவிப்பார் என்று எதிர்பார்த்த ரஜினி ரசிகர்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றம் தான். இருந்தாலும் 'ஹீரோத்தன'மான 'வில்லனா'க இருந்து 'வில்லத்தன'மான 'ஹீரோ'வாக மாறியவர் ரஜினி. அப்படி மாறி அரசியலில் குதிப்பார், சினிமாவில் வருவதைப் போலவே அரசியலில் எதிரிகளைப் பந்தாடுவார் என்று ரஜினி ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். எப்படியாவது ரஜினியைத் தமிழ்நாட்டு முதலமைச்சராக்கிவிடுவது என்ற லட்சியத்துக்காக தொடர்ந்து பாடுபடுகின்றனர்.

ரஜினி ரசிகர்களின் இந்த இலட்சிய வெறிக்குத் தொடர்ந்து தோள் கொடுக்கின்றன, தமிழ்வாரக் கிசுகிசுப் பத்திரிகைகள். ''ஆகஸ்டில் அதிரடி அரசியலில் குதிக்கிறார் ரஜினி! - முஸ்தீபுகள்! முயற்சிகள்!'' ''எங்கிட்டே மோதாதே! 'ஜெ'வுக்கு ரஜினி இறுதி எச்சரிக்கை. வெடிக்கும் மவுன யுத்தங்கள்'' ''ஜெவுக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் கை கோர்க்கின்றனர். சிவப்பு சூரியனாகிறார் ரஜினி. ரெட் ஆலர்ட்'' ''ஜெ.வின் அடுத்த மூவ்... ரஜினியைக் கொல்ல பயங்கர சதித் திட்டம்! - குலை நடுங்க வைக்கும் 'ஹாண்ட்ஸ் அப்' தகவல்கள்'' ''ஜெயலலிதாவுக்கு எதிராக அரசியலா? ரஜினியின் பரபரப்பு பேட்டி!'' ''அண்ணாமலை VS அடிமைப் பெண்'' ''ரஜினி புதுக் கட்சி, கொடி முடிவானது''

இப்படிக் கிசுகிசு - வதந்தித் தலைப்புப் போட்டு காசு பறிக்கும் அதே சமயம் ரஜினி ரசிகர்களைச் சூடேற்றுகின்றன, இந்தப் பத்திரிகைகள். இவ்வாறு எழுதுவதற்குச் சில காரணங்களை இந்தப் பத்திரிகைகள் கூறுகின்றன. அவை:

ஜெயாவின் போயஸ் தோட்டப் பகுதியிலேதான் ரஜினி குடியிருக்கிறார். ஜெயாவுக்குப் பாதுகாப்பு என்கிற பெயரில் தினமும் ரஜினி சோதனையிடப்படுவது, பல மணி நேரம் காக்க வைக்கப்படுவது, ரஜினி ரசிகர்கள் விரட்டப்படுவது ஆகியவற்றால் அவர் ஆத்திரமடைந்துள்ளார். ''நேற்று கருணாநிதி, இன்று ஜெயலலிதா, நாளை ரஜினி காந்த்'' என்றும் ''நேற்று மனிதன், இன்று தளபதி, நாளை மன்னன்'' என்றும் ரஜினி ரசிகர்கள் போட்ட சுவரொட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. ரஜினிக்கு எதிராகத்தான் சுவரொட்டித் தடைச் சட்டமே வந்தது. மன்னன், அண்ணாமலை ஆகிய படங்களில் ஜெயாவுக்கு எதிரான அரசியல் வசனம் பேசி ரஜினி சாடியுள்ளார். மதுரை அ.தி.மு.க. மாநாட்டின்போது அண்ணாமலை படத்தைத் திரையிட வேண்டாம் என்று கொட்டகைக்காரர்கள் மிரட்டப்பட்டனர். அண்ணாமலை சினிமாவைத் தடை செய்யவும் முயற்சி நடக்கிறது.

ரஜினி காந்த் வடிவத்தில் இன்னொரு அரசியல் போட்டியாளரை தி.மு.க. விரும்பவில்லை என்றாலும், ஜெயலலிதாவைப் பலவீனப்படுத்துவதற்காக ரஜினி ரசிகர்களை உசுப்பிவிடும் வேலையையும் அக்கட்சி செய்கிறது. மேலும் அரசியல் அனாதைகளாகிவிட்ட முன்னாள் மந்திரிகள் வீரப்பனும், திருநாவுக்கரசும் ரஜினியை அரசியலுக்கு இழுக்க முயலுகின்றனர்.

அண்ணாமலை சினிமாவை தடை செய்வதாக வதந்தி பரவியதைக் கேட்டு மதுரை மாவட்டத்தில் இரண்டு இளைஞர்கள் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார்களாம். ரஜினி காதிலே கடுக்கண் போட்டாலும், கையிலே காப்புப் போட்டாலும், கருப்புச் சட்டை போட்டாலும் அப்படியே காப்பியடிக்கும் வெறிபிடித்த ரசிகர் கும்பலை வைத்திருக்கிறார். கட்சியையும் ஆட்சியையும் நடத்துவது என்பதன் முழு அர்த்தத்தையும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கூற முடியாது.

தீய பழக்கங்களே இல்லாத ஒழுக்க

**ரஜினி ரசிகர்கள் என்னதான் ஆசைபட்டாலும் இன்னமும் சினிமா மூலமாகவே கோடிகோடியாக சொத்து சேர்க்க முடியும்: அதற்குள்ளாகவே அரசியலில் புகுந்து இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க முயலுவது கைகூடுமா என்ற ஊசலாட்டத்தில் ரஜினி இருக்கிறார் என்பதுதான் உண்மை.**





படிப்பகம்

www.padippakam.com

யான், ஏழைப் பங்காளன், அநீதியை முறியடிக்கும் வீரன், சூரன் என்றெல்லாம் எம்.ஜி.ஆர். பற்றி அவரது ரசிகர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அந்த மாதிரியான மகா மனிதனுக்குரிய (Superman) குணங்கள் - கவர்ச்சி எதையும் ரஜினி ரசிகர்கள் எதிர்பார்க்கவில்லை. ரஜினி ஒரு பெரிய நட்சத்திரம் (Super Star) என்கிற கவர்ச்சி மட்டுமே போதுமானதாக உள்ளது.

சஞ்சய், ராஜீவ் காந்திகள் அரசியலுக்குள் நுழைந்ததும் ''நான் எந்த இசத்தையும் சார்ந்தவன் அல்ல'' என்று அறிவித்தனர். அதாவது சித்தாந்தமற்ற, ஒழுக்கநியதியற்ற (Amoralism) அரசியல் - பண்பாட்டை அவர்கள் பிரகடனப்படுத்தினர். உண்மையில் இது முதலாளித்துவ அரசியலின் - பண்பாட்டின் இழிந்த, இறுதியான கழிசடை - பொறுக்கி அரசியல் - பண்பாடு. இதன் தொடர்ச்சியாக அரசியலுக்கு மக்களை - ஓட்டுக்களை ஈர்க்கக்கூடிய கவர்ச்சி - பிரபலம் (Charisma and Populism) மட்டுமே போதுமானது. எம்.ஜி.ஆர். தொடங்கி ஜெயலலிதா மூ.க.ஸ்டாலின் வரை இந்த வகையிலான அரசியல் பண்பாட்டிலே ஊறியவர்கள்தான்.

இத்தகைய கவர்ச்சி - பிரபலம் நிறைந்த தங்கள் அபிமான நடிகர் தமிழகத்தின் அதிகபட்ச புகழும் அதிகாரமும் என்கிற சமூக - அரசியல் தகுதியை (Status) பெறுவது அவருக்கும் தங்களுக்கும் பெருமையானது என்றுதான் ரஜினி ரசிகர்கள் கருதுகின்றனர். ரஜினிக்கும் ரஜினி ரசிகர்களுக்கும் ஜெயா ஆட்சி தரும் தொல்லை, இன்னொருவர் புகழ் - கவர்ச்சியைச் சிறிதும் சகித்துக் கொள்ளாத 'ஜெ'யின் ஆணவம் - அகங்காரம் இவைதான் - இருவருக்கும் இடையிலான மோதலாக சித்தரிக்கப்படுகிறது. இது பார்ப்பன - பாசிச ஜெயாக் கும்பலின் பொதுக் குணமாக இருந்து தமிழக மக்களை அடக்கி ஒடுக்குகிறது எனபதாகக் கூட அவர்கள் பார்க்கவில்லை.

ரஜினி ரசிகர் என்ன ஆசைப்பட்டாலும் இன்னமும் சினிமா மூலமாகவே கோடிகோடியாகச் சொத்துச் சேர்க்க முடியும்; அதற்குள்ளாகவே அரசியலில் புகுந்து இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க முயலுவது கை கூடுமா என்ற ஊசலாட்டத்தில் ரஜினி இருக்கிறார் என்பதுதான் உண்மை. ரஜினி தமிழ்நாட்டில் நிலைகொண்டு பணமும் புகழும் சேர்த்தபோது அவரை வளைத்துப் போட்டுக் கொண்டு அவரது ஏராளமான சொத்துக்களை நிர்வகிக்கும் ஒரு பார்ப்பன கும்பல்தான் ரஜினியை நடத்துகிறது. இந்த வகையில் ஜெயாவுக்கும் ரஜினிக்கும் அதிக வேறுபாடு இல்லை.

ஆகவே இன்றைய இளைஞர்களை சித்தாந்தமற்ற அரசியல், ஒழுக்க நியதியற்ற பண்பாடு ஆகியவற்றில் இருந்து மீட்க வேண்டிய கடினமான கடமை இருக்கிறது. ஒரு புரட்சிகரமான சித்தாந்தம், முற்போக்கான ஒழுக்க நியதியுடன் கூடிய அரசியல் - பண்பாட்டில் வார்த்தெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் ஜெயலலிதா, ரஜினி போன்ற மாயைகளில் இருந்து இளைஞர்களை மீட்க முடியாது.

● அஜித்

# மருத்துவக் கல்லூரி கொள்ளையில் உடையாரின் உடன்கட்டை ஜெயலலிதா

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் - ஊழியர்கள் போராட்டம் சென்னையில் வெடித்துக் கிளம்பி தமிழகமெங்கும் படர்ந்துள்ளது. சென்னை போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தமிழக அரசு தனியாருக்கு - சாராய உடையாருக்கு தாரைவார்த்துக் கொடுத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சாராய உடையார், ஒரு தனியார் அறக்கட்டளை பெயரில் இம் மருத்துவக் கல்லூரியை தொடங்கினார். தனது உற்ற நண்பர் உடையாருக்கு எம்.ஜி.ஆர்., விதிமுறைகளையெல்லாம் மீறியும், பல ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிக்க நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்தும் கல்லூரி தொடங்க உதவி செய்தார். கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் உடையாரிடமிருந்து இக்கல்லூரியைக் கைப்பற்றி அரசுக்குச் சொந்தமாக்கினார். இதில் கருணாநிதியின் நோக்கம் வேறாக இருந்தாலும் மாணவர்கள் தனியார் கொள்ளையிலிருந்து விடுபட்டனர்.

ராமச்சந்திரா கல்லூரியை அரசுக்குச் சொந்தமாக்கியதை எதிர்த்து உடையார் அப்பொழுதே வழக்கு தொடர்ந்தார். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். உடையாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் இவ்வழக்கிற்கு உயிர் கொடுக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தனி அமர்வு நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்து ராமச்சந்திரா கல்லூரியை மீண்டும் உடையாருக்கு ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்துள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பு சரியானது என்றும் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய முடியாது என்றும் 'ஜெ'' கும்பல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த ஜூலை 22 முதல் ஊர்வலம்-ஆர்ப்பாட்டம், மனிதச் சங்கிலி, உண்ணாவிரதம், சாலை மறியல், முற்றுகை என பல வழிகளில் தமது கண்டனக் குரலை எழுப்பி வருகின்றனர். உடையாரும், அவர் தொழில் நண்பர் எத்திராஜ் முதலியாரும் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்க வந்தபொழுது முற்றுகையிட்ட மாணவர்கள் மீது போலீசு காட்டுமிராண்டித்தனமாக தடியடி நடத்தியது. போலீசுடன் உடையாரின் ரௌடிக் கும்பலும் சேர்ந்து கொண்டு தாக்கியது. மாணவிகளை ஆபாசமாகத் திட்டியும், வயிற்றில் ஏறிமிதித்தும், வேனில் ஏறுவதற்கு முன்பே வேனை எடுத்து அல்லாடவிட்டு துன்புறுத்தியும் போலீசு வெறியாட்டம் போட்டது. நூற்றுக்கணக்கில் போராடும் மாணவர்களை கைது செய்து பீதியூட்டுகிறது. சிறையிலும், மைதானத்திலும் மந்தைகளைப் போல் அடைத்து கேவலப்படுத்துகிறது. தமிழக அரசு செயலாளர்கள் - அதிகாரிகள் மாணவர்களை நேரிடையாகவே மிரட்டுகிறார்கள்.

சென்னை, மதுரை, நெல்லை, தஞ்சையிலுள்ள அரசு மருத்துவக்கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், சாலைமறியலில் ஈடுபட்டும் தமது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்தனர். மருத்துவ துறையல்லாத பிற கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர். பீதியடைந்த அரசு, மருத்துவக் கல்லூரிகளை இழுத்துமூடி விடுதியிலிருந்த மாணவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி போராட்டத்தை ஒடுக்கத் திட்டமிட்டது. ஆனால் விடுதியிலிருந்து தூக்கியெறியப்பட்ட மாணவர்கள் வெளியில் தங்கி போராட்டத்தை தொடர்கின்றனர்.

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியின் மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள், ஊழியர்களும் அரசு முடிவை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். இதுவன்றி அரசு மருத்துவமனையின் உதவி மருத்துவர்கள் - ஊழியர்கள் கடந்த 3-ந் தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ததோடு காலவரையற்ற வேலைநிறுத்தம் செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

அரசு உதவி மருத்துவச் சங்கத்தின் வேலைநிறுத்தப் போராட்ட அறிவிப்பு வந்ததும் அரசு உடனடி எதிர் நடவடிக்கையில் இறங்கியது. நல்வாழ்வுத்துறை அமைச்சர் முத்துச்சாமி, 'மருத்துவர்களைச் சந்தித்து பேச சுற்றுப்பயணம்' என பறந்தோடினார். ஆனால் மருத்துவர்களின் முற்றுகைப் போராட்டத்திற்குப் பின்னே மூக்குடைபட்டு திரும்பினார். ''உதவி மருத்துவர்கள்

*கல்வியமைச்சர் அரங்கநாயகம் ஆர்.எஸ்.எஸ்.-ன் நச்சுக் கருத்தை கக்கி மாணவர் போராட்டத்தை மதச்சாயம் பூசி திசைதிருப்ப முயலுகிறார்.*

படிப்பகம்

www.padippakam.com



**குமுறும் எரிமலை: சாலைமறியலில் ஈடுபட்டுள்ள ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மாணவர்கள்.**

வேலை நிறுத்தம் செய்தால், வேறு மருத்துவர்களை அரசு நியமிக்கும்'' என முத்துச்சாமி மிரட்டிக் கொண்டே பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கிறார். புதிய மருத்துவர்கள் நியமனத்திற்கான ஆள் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் அரசு இறங்கியுள்ளது. இது போராடும் மருத்துவர்களின் வேலைபறிக்கும் - உரிமை பறிக்கும் மறைமுக மிரட்டலன்றி வேறல்ல.

இன்னொருபுறம் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் ஆர்.எஸ்.எஸ்.-ன் நச்சுக் கருத்தைக் கக்கி மாணவர் போரட்டத்தை மதச்சாயம் பூசி திசைதிருப்ப முயல்கிறார். சென்னையில் விசுவ இந்து பரிசத் நடத்தும் பள்ளி ஒன்றின் கட்டிடத் திறப்பு விழாவில் பேசிய அரங்கநாயகம், ''கல்லூரிகளை தனியார் நடத்தக் கூடாது;, அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் சோசலிசம் என்கின்றனர். ஆனால் இப்படிக் கோரிக்கை வைப்பவர்கள் ஏன் வேலூர் கிறிஸ்துவ மெடிக்கல் கல்லூரி பற்றி பேசுவதில்லை? அப்படி ஒரு திராணி ஏன் இல்லை'' என்றார் மேலும், மைனாரிட்டியினர் சலுகையில் நுழையச் சட்டம் இல்லை என்கிறபோது மற்றவர்களை - பெரும்பான்மையினரை தடுக்க அ.தி.மு.க. அரசு முன்வராது. ஆனால், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து மாணவர்சளை தூண்டிவிடுகின்றனர் சிலர்'' என்றார். இதே இந்து மதவெறிக் கருத்தை பல்வேறு மேடைகளிலும் கக்கினார். மாணவர் போராட்டத்திற்கு மதச்சாயம் பூசி இழிவுபடுத்தும் அரங்கநாயகத்திற்கு மாணவர்கள் எப்படி பதிலடி கொடுத்தாலும் தகும்.

மருத்துவக் கல்லூரி தாரைவார்ப்புக்கு எதிரான போராட்டத்தில் தி.மு.க.-வும் பா.ம.க.-வும் தத்தம் பங்கிற்கு போராட்டத்தை அறிவித்து களத்தில் குதித்துள்ளன. கருணாநிதியும், ராமதாசும் தனியார்மயமாக்கும் கொள்கைக்கு எதிரானவர்களல்ல என்பது மட்டுமல்ல அதற்கு எதிரான ஆக்கப்பூர்வமான தீர்வு அவர்களிடம் எதுவும் இல்லை. 'மார்க்சிஸ்டுகள்' தலைமையிலான மாணவர் அமைப்பு (SFI), மாணவர் போராட்டத்தை வழிநடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவர்கள் மேற்கு வங்கத்தில் அரசு நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுப்பதைப் பற்றி மாணவர்கள் திருப்பிக் கேட்டால் இவர்கள் முகத்தை மறைத்துக் கொள்ள எந்த பொந்தைத் தேடுவார்களோ; தெரியவில்லை. தமிழக அளவில் அமைப்பு இருந்தும் மாணவர்களை ஒருங்கிணைத்து அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதில் போலிக்கம்யூனிஸ்டுகள் அக்கறையின்றியே உள்ளனர். ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் எரிகிற வீட்டில் பிடுங்குகிறவரை ஆதாயம் என்கிற முறையிலேயே இப்பிரச்சினையில் தலையை நுழைக்கின்றன.

தமிழக அரசு மட்டுமல்ல ஆந்திராவிலும் காங்கிரசு அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க தனியாருக்கு அண்மையில் அனுமதியளித்துள்ளது. ஜூலை மாத இரண்டாவது வாரத்தில் மத்திய அரசும் மருத்துவப் பல்கலைக் கழகங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் அறிவிப்பை வெளியிட்டது. காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கையின் தனியார் மயமாக்கலின் ஒரு அங்கம் தான் கல்வியையும் தனியாருக்கு தாரை வார்த்து வியாபாரமாக்குவதாகும்!

''பெருகிவரும் மாணவர்கள் தேவைக்கு ஏற்ப அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடமில்லை; மேலும் கல்லூரிகள் தொடங்க அரசிடம் நிதியுமில்லை; எனவே தனியார்கள் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதிப்பதில் தவறில்லை'' என்று மத்திய அமைச்சர் பொடேதார் கூறியுள்ளார். இதே கருத்தை முன்வைத்து தமிழகத்தில் அ.தி.மு.க., ஆர்.எஸ்.எஸ். கும்பல் முதல் ஜூனியர் விகடன் பத்திரிகை வரை தனியாருக்கு தாரைவார்க்தப்பட்டதை வக்காலத்து வாங்குகின்றன. இன்னும் ஒரு படி மேலேபோய் சுயநிதிக் கல்லூரிகள் 'சீட்டு'க்கு 8 லட்சம் 10 லட்சம் என்று வாங்குவதை ''கல்லூரியை நிர்வகிக்க அரசு மானியம் ஒதுக்காத பட்சத்தில் அவர்கள் வேறு என்ன செய்வார்கள்'' என்று வக்காலத்து வாங்கவும் செய்கிறார்கள். தனியாரின் கொள்ளைக்கு வழியமைத்துக் கொடுத்து கூடச் சேர்ந்து சுருட்டுகிறதை மறைக்கத்தான் இப்படி ஒப்பாரி வைக்கிறார்கள்.

கல்லூரி தனியாருக்குச் சென்றால் நன்கொடை கொள்ளையால் சாதாரண மாணவர்கள் சேரமுடியாமல் போகும். தகுதி, ஒதுக்கீடுகளில் எல்லாம் முறைகேடு நடக்கும். மருத்துவ ஊழியர்கள் கூடுதலானவர்கள் என பலர் வெளியேற்றப்படுவர். மாணவர்களும் ஊழியர்களும் சுதந்திரமாக செயல்பட முடியாது. வேண்டப்படாதவர்கள் எளிதாக பழிவாங்கப்படுவார்கள். கல்வி வியாபாரமாக்கப்பட்டு கடைச் சரக்காக்கப்படும். இது போன்ற சுயநிதிக் கல்லூரிகளில் படித்து முடித்துவரும் மருத்துவர்கள் தரம் சீர்கெடும். இதன் விளைவால் மக்கள் உயிரோடு மருத்துவர்கள் விளையாடும் நிலை ஏற்படும். மேலும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளில் சாமானிய மக்கள் சிகிச்சை பெற முடியாத வண்ணம் கட்டணங்கள் உயரும். ராமச்சந்திரா மருத்துவமனையை மேட்டுக்குடி கும்பல் மட்டுமே சிகிச்சை பெறும் வண்ணம், அமெரிக்காவில் எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்ற புரூக்ளின் மருத்துவ மனையைப் போல நவீனப்படுத்துவதே உடையாரின் திட்டம்! எனவே மாணவர்கள் - மருத்துவர்கள் - ஊழியர்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரின் கடமை.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த உடன் மாணவர்களை ''வன்முறையாளர்கள்'' என்று வானொளியில் இழிவாகப் பேசினார். போலீசும் மாணவர்களை சமூக விரோதிகளாகப் பாவித்து தாக்குதலை தீவிரப்படுத்தியது. பேருந்து கட்டண உயர்வுக்கு எதிரான மாணவர் போராட்டம் காட்டுமிராண்டித்தனமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. மதுரை சட்ட கல்லூரி மாணவர்கள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள், திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் என பல கல்லூரி மாணவர்கள் சிறுசிறு பிரச்சினைகளுக்குக்கூட போலீசால் பாய்ந்து குதறப்பட்டனர். போலீசின் சித்திரவதை, பொய்வழக்கு, மண்டை உடைப்பு, ரௌடிக் கும்பலைக் கொண்டு தாக்குதல் அனைத்தும் மாணவர்கள் மீது ஏவப்பட்டன. இத்தகைய அடக்குமுறையின் தொடர்ச்சியே தற்போது மருத்துவக் கல்லூரி மாணவர் போராட்டத்தின் மீது அ.தி.மு.க. கும்பல் தொடுத்து வருவன ஆகும்.

இதேபோல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து முதலாளிகளுக்கும் சாராய முதலைகளுக்கும் அரசு சொத்தை தாரைவார்த்தும், அரசு சலுகைகளை வாரியிறைத்தும் கூட்டுக் கொள்ளையடித்து வருகிறார் ஜெயலலிதா. அதுவும் குறிப்பாக சாராய உடையாருக்கு பின்னிமில் விவகாரத்தில் வலது கையாகச் செயல்பட்டார்; 'பார்' கடைகளுடன் சீமைச் சாராயக் கடைகளை இரட்டிப்பாக்கி சேவை புரிந்தார்: தற்போது ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தாரைவார்த்துக் கொடுத்துள்ளார். இந்த 'உடையாரின் உடன்கட்டை' ஆட்சியை, மாணவர் - மக்கள் விரோத பாசிச ஆட்சியை, ஊழல் ஆட்சியை, தமிழின விரோத பார்ப்பனீய ஆட்சியை தொடர அனுமதித்தால் தமிழ்நாடே சுடுகாடாகும். எனவே போராடும் மாணவர்கள்- ஊழியர்கள் இவ்வாட்சியை அகற்றுவதற்கான போராட்டத்தில் உழைக்கும் மக்களுடன் கரம் இணைக்க வேண்டும். ● சுப்பு

படிப்பகம்

www.padippakam.com



● ராமர் கோயில் கட்ட அடித்தளம் நிறுவப்பட்டது
● சட்டமும் நீதியும் செல்லாக்காசாகியது.

# இந்து மதவெறி பாசிசத்தின் தாக்குதல்

அயோத்தியிலுள்ள பாபர் மசூதி நுழைவாயில் அருகே, தாவாவுக்குட்பட்ட நிலப்பகுதியில் ராமர் கோயில் கட்ட கடந்த ஜூலையில் அஸ்திவாரம் அமைத்ததன் மூலம் இந்துவெறி பாசிஸ்டுகள் மீண்டும் தமது வெற்றியைப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். இது, பாரதீய ஜனதா மற்றும் அதன் கூட்டு அமைப்புகள் தவிர நாட்டிலுள்ள அனைத்து ஓட்டுக் கட்சிகளும் பேசி வரும் மதச்சார்பின்மை, சட்டத்தின் ஆட்சி, தேசியம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள பெருந்தோல்வியை மீண்டும் நிரூபித்துள்ளது.

### சரிவை ஈடுகட்ட மீண்டும் கரசேவை

அயோத்தி விவகாரத்தை இப்போது இந்து வெறியர்கள் கிளறிவிடுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பாரதீய ஜனதா மற்றும் அதன் கூட்டணி அமைப்புகளுக்கு அண்மைக்காலமாக தோல்வியும் சரிவும் அதிகரித்து வருகிறது. கடந்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதா வென்ற டெல்லி தொகுதி தற்போதைய இடைத் தேர்தலில் பறிபோய்விட்டது. அதன் உத்திரப்பிரதேச ராமராஜ்ஜியத்தில் ஊழலும் ஒடுக்குமுறையும் பெருகியுள்ளதோடு, கட்சிக்குள்ளேயே கோஷ்டி சண்டைகள் புழுத்து நாறுகிறது. மத்தியப் பிரதேச அரசோ, பிலாயில் நிராயுதபாணிகளான தொழிலாளிகளைச் சுட்டுக் கொன்று, நர்மதா அணைக்கட்டுத் திட்டத்தை எதிர்க்கும் பழங்குடி மக்கள் மீது அடக்குமுறையை ஏவி பேயாட்டம் போடும் பாசிச குண்டாந்தடி ஆட்சியாக அம்பலப்பட்டு நிற்கிறது. எல்லாவற்றையும்விட காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து பாரதீய ஜனதா துவக்கிய சுதேசி இயக்கம் பிசுபிசுத்துப் போய்விட்டது.

மேலும், எரியும் பிரச்சினையாக கருதப்பட்ட அயோத்தி விவகாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அண்மைக்காலமாக பங்குச் சந்தை மோசடி விவகாரம் முன்னணிக்கு வந்துவிட்டது. போபர்ஸ் விவகாரம் மீண்டும் புகையத் தொடங்கிவிட்டது. எனவேதான், தமது தோல்வியையும் சரிவையும் சரிக்கட்டவும், மீண்டும் அயோத்தி விவகாரத்தை முன்னணிக்குக் கொண்டுவந்து ஆதாயமடையும் நோக்கத்துடன்தான், இந்துவெறியர்கள் அயோத்தியில் மீண்டும் கரசேவையைத் துவக்கியுள்ளனர்.

### மசூதியை இடிக்க தொலைநோக்குத் திட்டம்

இந்துவெறியர்களின் தலைமைக் குருபீடமான ஆர்.எஸ்.எஸ். வகுத்தளித்த திட்டப்படி, அயோத்தியில் ஜூலை 9-ந் தேதியன்று ராமர் கோயிலுக்கான அஸ்திவாரம் அமைக்கும் பணி துவக்கப்பட்டது. விசுவ இந்து பரிஷத், பஜ்ராங்தளம் ஆகிய இந்துவெறி குண்டர் படையினர், மகந்துகளையும் - சாமியார்களையும் முன்னிறுத்தி 'கரசேவை'யைத் துவக்கினர். இதற்காக கங்கைக் கரையில் கஞ்சா புகைத்துக் கொண்டு யாசகம் கேட்டுத் திரிந்துக் கொண்டிருக்கும் சாமியார்கள் நூற்றுக்கணக்கில் அயோத்திக்கு பிடித்து வரப்பட்டனர். மூன்றுவேளை சோறும் கஞ்சா போதையும் கிடைத்த பரவசத்தில் இந்தச் சாமியார்கள் ''ஜெய் சிறீராம்'' என்று கோஷமிட்டுக் கொண்டு ஆடினர். சிலர் அனுமானைப் போல வேடமிட்டுக் கொண்டு கூத்தாடினர். இந்துவெறியர்களின் கதாநாயகியும் ஆபாசப் பெண் பேச்சாளர்களான உமாபாரதியும், ரிதம்பராவும் நேரில் வந்து கரசேவர்களை உற்சாகமூட்டினர். அடுத்த சில நாட்களில் துர்காவாஹினி எனும் மகளிர் அமைப்பினர் சரயு ஆற்றிலிருந்து புனித நீரைக் கொண்டுவந்தும், கான்கிரீட் கலவைச் சட்டிகளைச் சுமந்தும் கரசேவையில் ஈடுபட்டனர். வேறுசிலர் ஜெய் ஜெய் ராம் என்று பாடல்களைப் பாடி நடனமாடினர். கட்டுமானப் பணி நடந்து கொண்டிருந்தபோது திடீரென ஒருநாள் மழை பெய்தது. வருண பகவான் வாழ்த்து கூறுவதாக எண்ணி ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த கரசேவகர்கள் சகதியில் விழுந்து புரண்டு ஆரவாரம் செய்து கூத்தாடினர். அப்போது மழையில் நனைந்த குரங்கு ஒன்று ஒதுங்க இடம் தேடி பாபர் மசூதி மாடத்தின் மீதேறி ஓடியது. அதைப் பார்த்ததும் அனுமான் அருள் வழங்குவதாகக்கூறி உற்சாகத்துடன் ஆடினர்.

தோற்றத்தில் இவையெல்லாம் கேலிக் கூத்துக்களாக இருந்தாலும், திட்டமிட்டபடியே கான்கிரீட் அஸ்திவாரம் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வந்தது. முதற்கட்டமாக சிங்கதுவார் எனும் முகப்புப் பகுதியையும் அதையடுத்து நிருத்தியகிரகம் எனும் இடைப் பகுதியையும் கட்டியமைப்பது; மூன்றாவது கட்டமாக பாபர் மசூதியைத் தகர்த்து கர்ப்ப கிரகத்தை (கடவுள் சிலை உள்ள பகுதியை) நிறுவுவது - ஏனெனில் மசூதியின் உள்ளே இந்துவெறியர்கள் திருட்டுத்தனமாக வைத்த ராமர் சிலை உள்ளது - இந்த திட்டத்துடன்தான் இந்துவெறியர்கள் இப்போது கரசேவையில் ஈடுபட்டனர். அதன்படியே இப்போது முகப்புப் பகுதிக்கான கான்கிரீட் அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது.

மசூதி எதிரே சாமியார்களை முன்னிறுத்தி சட்டத்தை மீறி கரசேவை: இந்துவெறி பாசிச அட்டூழியம்



படிப்பகம்

www.padippakam.com

### இந்துவெறியர்களுக்கு அரசு எந்திரம் உடந்தை

முதலாவதாக, தற்போது கான்கிரீட் அடித்தளம் போடப்பட்டுள்ள இடம் தாவாவுக்குட்பட்ட நிலப்பகுதியாகும். அங்கு நிரந்தரமாக எந்த கட்டிடமும் எழுப்பக்கூடாது என்பது கோர்ட் உத்திரவு. இரண்டாவதாக, உ.பி. அரசு கையகப்படுத்தியுள்ள இந்த நிலத்தை மூன்றாவது நபருக்கு நேரடியாகவோ குத்தகையாகவோ கொடுக்கக்கூடாது என்று கோர்ட் உத்திரவிட்டுள்ளது. இவற்றையெல்லாம் மீறித்தான் ''ராமஜென்மபூமி முக்தி நியாஸ்'' என்ற அமைப்புக்கு நிலத்தைத் தாரைவார்த்துக் கொடுத்து, கான்கிரீட் அடித்தளம் அமைக்க உ.பி.யின் பாரதீய ஜனதா அரசு கைகட்டிச் சேவகம் செய்துள்ளது.

116 அடி நீளமும் 138 அடி அகலமும் 30 அடி ஆழமும் 6 அடி உயரமும் கொண்டதாக அஸ்திவாரம் அமைக்கப்பட்ட போதிலும் அது அயோத்திக்கு வரும் யாத்ரீகர்கள் பக்திப் பாடல் இசைப்பதற்கான மேடை என்ற உ.பி. முதல்வர் கல்யாண்சிங் கூசாமல் புளுகினார். கோர்ட் உத்திரவை மீறி கட்டிடம் எழுப்பப்படுவதை தேசிய முன்னணி, 'இடதுசாரி' கட்சிகள் நாடாளுமன்றத்தில் ஆட்சேபித்தபோது, ''உத்திரவை செயல்படுத்துமாறு மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்துள்ளோம்; அவர் சாதுக்களிடம் பேசி வருகிறார்'' என்றார் உ.பி.முதல்வர். மறுபுறம், இந்துவெறியர்களோ ''எந்த சக்தியாலும் எங்களைத் தடுத்து நிறுத்த முடியாது; கோர்ட் உத்திரவை மீறி கோயில் கட்டியே தீருவோம்'' என்று கொக்கரித்தனர். ஒருவார காலத்திற்குப் பின்னரும் உ.பி. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததை சுட்டிக்காட்டியபோது, ''கோர்ட் உத்திரவை செயல்படுத்தினால் சட்டம் - ஒழுங்கு நிலைமை மோசமடையும். சாமியார்கள் உத்திரவை மீறுவார்கள்; சாதுக்களை நான் சுட்டுக்கொல்ல மாட்டேன்'' என்று 'பிளாக்மெயில்' செய்தார் உ.பி. முதல்வர்.

**கட்டுமானப் பணி நடக்கும் இடத்திற்குள் அதிகாரிகளோ, போலீசோ யாருமே நுழைய முடியவில்லை. சட்டமோ, நீதியோ அங்கு செல்லுபடியாகவில்லை. இந்தியாவின் சுயாதிபத்திய உரிமை அங்கு கந்தலாகி கிழிந்து தொங்கியது.**

முதல்வர் மட்டுமல்; உத்திரப் பிரதேச நீதித்துறையும் அதிகார வர்க்கமும் போலீசும் இந்து வெறியர்களுக்கு சாதகமாகவே நடந்து கொண்டன. முதலில் அலகாபாத் கோர்ட்டில் கட்டிடம் எழுப்புவதை தடுத்து நிறுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனுக்களை அது நிராகரித்தது. பின்னர் மீண்டும் உச்சநீதிமன்றத்திலும், அலகாபாத் உயர் நீதி மன்றத்திலும் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, நீதிபதிகள் குழு (பெஞ்ச்)தான் கட்டிடம் கட்டத் தடை விதித்தது. இந்த உத்திரவைக் கூட மிகவும் தாமதப்படுத்தி, இந்துவெறியர்களின் கட்டுமானப் பணி முடியும் தருவாயில்தான் அறிவித்தது.

மேலும், மசூதி எதிரே கட்டப்படுவது அஸ்திவாரமா அல்லது மேடையா என்று கூட அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. ஏனெனில் கட்டுமானப் பணி நடக்கும் இடத்திற்குள் அதிகாரிகளோ போலீசோ யாருமே நுழைய முடியவில்லை. சட்டமோ, நீதியோ அங்கு செல்லுபடியாகவில்லை. அது இந்து வெறியர்களின் தனி சமஸ்தானமாகவே காட்சியளித்தது. இந்தியாவின் சுயாதிபத்திய உரிமை அங்கு கந்தலாகி கிழிந்து தொங்கியது. இது என்ன வகை ''தேசியம்'' என்பது தேசிய ஒருமைப்பாடு கூச்சல் போடும் பாரதீய ஜனதாவுக்கே வெளிச்சம்!

### காங்கிரசின் கள்ளக்கூட்டு

இவ்வளவு அட்டூழியங்கள் நடந்த போதிலும் மத்தியிலுள்ள காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையுமின்றி வேடிக்கை பார்த்தது. அப்படி ஏதாவது செய்தால் அது சிறுபான்மை காங்கிரசு அரசுக்கு ஆபத்தாகிவிடும்; இந்து ஓட்டுக்களை இழக்க நேரிடும் என்று அது அஞ்சியது. ''கோர்ட் உத்திரவை மீறுவோரை தடுக்க வேண்டியது உ.பி. மாநில அரசின் வேலை'' என்று தட்டிக் கழித்தார் பிரதமர் நரசிம்மராவ். நிலைமையை நேரில் சென்று ஆய்வு செய்வதாகக் கூறி அயோத்திக்குச் சென்ற மத்திய உள்துறை அமைச்சர் சவாண், பயபக்தியோடு சாமி கும்பிட்டு வந்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. இந்துவெறியர்களின் நடவடிக்கைகளை எதிர்த்து, துணை ராணுவப்படைகளை அயோத்திக்கு அனுப்பி உ.பி. அரசை கலைக்கப் போவதைப் போல மத்திய அரசு ''பாவ்லா'' காட்டியது. மற்றபடி நடவடிக்கை ரீதியாக அது சிறு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை. கடைசியில், அயோத்தியில் அடித்தளக் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நேரத்தில்தான் பிரதமர் சாமியார்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இன்னும் மூன்று மாத காலத்திற்குள் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதாக பிரதமர் உறுதியளித்த பின்னரே ஜூலை 24 அன்று இந்து வெறியர்கள் கட்டுமான வேலையை நிறுத்திக் கொள்ள உடன்பட்டனர்.

இந்துவெறியர்களுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு கண்டதை மாபெரும் வெற்றியாக தேசிய பத்திரிகைகள் சித்தரிக்கின்றன. ஆனால் ராமர் கோயிலுக்கு கான்கிரீட் அடித்தளம் அமைத்த பிறகுதான் உடன்பாடு ஏற்பட்டது. இந்த அடித்தளம் நன்றாக உலர்ந்து உறுதிப்பட்டால்தான் அதன்மீது கட்டிடம் எழுப்பமுடியும். அதற்கு குறைந்தது ஒருமாத கால அவகாசம் தேவை. எனவேதான் இந்துவெறியர்கள் தமது கரசேவையைத் தற்காலிகமாக நிறுத்த முன்வந்தனர். அடித்தளம் உறுதிப்பட்டதும் மீண்டும் இந்துவெறியர்கள் கரசேவையில் இறங்குவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

### இந்து வெறியர்களுடன் இணக்கமான உடன்பாடு

மேலும் சாமியார் - மகந்துகளுடன் பிரதமர் கண்டுள்ள உடன்பாடு மோசடியானது மட்டுமல்ல; இந்துவெறி பாசிசத்துக்கு விட்டுக் கொடுத்து கள்ளக்கூட்டு சேர்ந்து கொள்வதுமாகும். ஜூலை 23-ந் தேதியன்று சாமியார்களுடன் பிரதமர் என்ன பேசினார்? என்ன உடன்பாடு ஏற்பட்டது என்று வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஜூலை 27 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர், முந்தைய அரசுகளின் முயற்சிகளைப் பரிசீலித்து பேச்சுவார்த்தை மூலம் மூன்று மாதங்களுக்குள் சுமுகமான தீர்வுகாணப் போவதாக அறிவித்தார். பல்வேறு கோர்ட்டுகளில் அயோத்தி பிரச்சினை பற்றிய தீராத வழக்குகளைத் தொகுத்து ஒரு தனி நீதி மன்றத்தில் பரிசீலனை செய்து தீர்வு காண்பது; இந்த தீர்ப்பு அனைவரையும் கட்

**ராமர் கோயில் கட்ட அடித்தளம் அமைத்த மகிழ்ச்சியில் நடனமாடும் பெண்கள்: இந்துவெறியாட்டம்**



படிப்பகம்

www.padippakam.com

# அயோத்தியில் கரசேவை நாடெங்கும் நரபலி

*அயோத்தியில் இந்து வெறியர் ள் கோயில் கட்ட அஸ்திவாரம் மட்டும் அமைக்கவில்லை. மீண்டும் நாடெங்கும் தெவெறிப் படுகொலைகளைக் கட்ட பிழ்த்து விட்டுள்ளனர்.*

*கடந்த ஜூலை 19 அன்று கேரளா பின் தலைநகர் திருவனந்தபுரம் அருகி லுள்ள பூந்துராவில் ஆர்.எஸ்.எஸ். குண் டர்கள் உடற்பயிற்சி செய்து கொண்டிருந் போது எங்கிருந்தோ ஒரு கல் வந்து விழுந்ததாகவும் முஸ்லிம்கள் தாக்கினர் என்றும் இந்துவெறியர்கள் புரளி கிளப்பி னர். அதைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் ஈட்டி, கத்தி, இரும்புத் தடிக ளுடன் முஸ்லிம்கள் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கினர் இந்த மோதல் விரைவி லேயே வல்லக்கடவு, பருத்திக்குழி ஆகிய பகுதிகளுக்கும் பரவியது. இஸ்லா மிய சேவா சங்கம் என்ற பெயரில் மத வாத தற்காப்புக் குழுவை நிறுவியுள்ள முஸ்லிம்கள் எதிர்த்தாக்குதல் நடத்தத் தொடங்கியதும், இந்து வெறியர்கள் மேலும் ஆத்திரமடைந்து முஸ்லிம் குடியி ருப்புகளைச் சூறையாடி தீயிட்டுக் கொளுத்தினர். தப்பியோடியவர்களை மிருகத்தனமாகத் தாக்கினர். ஆர்.எஸ். எஸ். குண்டர்களின் வெறியாட்டத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் படுகாய மடைந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட வீடு கள் சாம்பலாயின.*

*மகாராஷ்டிராவிலுள்ள நாசிக் அரு கிலுள்ள மாலகோன் நகரில் ஜூலை 19 அன்று பாபர் மசூதியைக் காப்பாற்றக் கோரி முஸ்லிம்கள் அமைதியான ஊர்வ லம் நடத்தினர். இதனால் ஆத்திரமடைந்த இந்து வெறியர்கள் ஊர்வலத்தின் மீது திடீ ரென தாக்குதல் நடத்தியதோடு, முஸ்லிம் குடியிருப்புகளில் புகுந்து பலரைக் கத்தி யால் குத்தியும் இரும்புத் தடியால் தாக்கி யும் வெறியாட்டம் போட்டனர். இந்துவெ றியர்களின் தாக்குதலில் இருவர் பலியாகி னர். 20-க்கும் மேற்பட்டோர் படுகாயம டைந்தனர்.*

*எப்போதெல்லாம் இந்துவெறியர் கள் அயோத்தி விவகாரத்தைக் கிளறி விடுகிறார்களோ, அப்போதெல்லாம் கல வரமும், படுகொலைகளும் நடப்பது வாடிக்கையாகிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், அயோத்தி என்பது வெறு மனே வழிபாட்டுத்தல பிரச்சினை அல்ல; அது மதவெறியின் 'சின்னம்'.*

ப்படுத்துவதாக இருக்கும் என்றார்.

இதன்மூலம் அயோத்தி விவகாரம் ன்பது ஏதோ நிர்வாகப் பிரச்சினை போல ம், தனி நீதிமன்றத்தின் மூலம் தீர்வுகாண டியும் என்றும் கூசாமல் புளுகுகிறார். ஏற் னவே கோர்ட் தீர்ப்பை துச்சமாக மதித்து டப்பாரை சேவை நடத்தும் இந்துவெறியர் ர், நரசிம்மராவ் அமைக்கும் நீதிமன்றத் ன் தீர்ப்பை ஏற்றுக் கொள்வார்கள் என்ப கு என்ன உத்திரவாதம்? அதைவிட இந் வெறியர்களின் கொட்டத்தை ஒரு கோர்ட் ப்பு அடக்கிவிடுமா என்பதுதான் கள்வி.

புதிய தீர்ப்பை ஏற்பார்களா என்பது ருபுறமிருக்க, தற்போது தாவாவுக்குட் ட்ட நிலத்தில் நிரந்தர கட்டிடம் எதுவும் ழுப்பக்கூடாது என்கிற கோர்ட் தீர்ப்பை ந்துவெறியர்கள் ஏற்றார்களா, இல்லையா ன்பதை பிரதமர் இன்னமும் தெளிவாக்க ல்லை. கோர்ட் உத்திரவை மீறி தற்போது றுவப்பட்டுள்ள அஸ்திவாரத்தை இடிப் தா அல்லது அதன்மீது கோயில் கட்ட அனு திப்பதா என்பதையும் அவர் தெளிவாக்க ல்லை. ஆனாலும், ''நான் உண்மையாகப் பசுகிறேன். எந்த வகையிலும் எந்த பேர ம் நடக்கவில்லை; அதில் எனக்கு நம்பிக் கயுமில்லை'' என்று எங்கப்பன் குதிருக் ள் இல்லை என்கிறார் நரசிம்மராவ். உண் மயில் இந்து வெறியர்களின் அட்டூழியங் ளை அங்கீகரித்து, தற்காலிகமாக பிரச்சி னயை ஆறப்போடுவது என்பதுதான் பிர மர் கண்டுள்ள உடன்பாடு. எனவேதான் இது எங்களுக்குக் கிடைத்த மாபெரும் வற்றி'' என்று இந்துவெறியர்கள் கூத்தாடு ன்றனர்.

## இந்துவெறி பாசிசத்தை அங்கீகரிப்பதே காங்கிரசின் கொள்கை

காங்கிரசுக் கயவாளிகள் இந்துவெறி கர்களுடன் இணக்கமாக உடன்பாடு கொள் தும் அவர்களது அட்டூழியங்களை அங்கீ ரிப்பதும் இப்போது முதன் முறையாக நடப்பதல்ல. எப்போதெல்லாம் இந்துவெறி யர்கள் அயோத்தி விவகாரத்தைக் கிளறி விட்டு நிர்பந்தம் கொடுக்கிறார்களோ அப் போதெல்லாம் காங்கிரசு கட்சி பணிந்து போய் அதை அங்கீகரிப்பதுதான் வாடிக்கை யாக உள்ளது. முதலில் அயோத்தியிலுள்ள பாபர் மசூதிக்குள் இந்துவெறியர்கள் திருட் டுத்தனமாக வைத்த ராமன் சிலையை வழி பட பூட்டைத் திறந்துவிட்டார் ராஜீவ். அதை சாதகமாக்கிக் கொண்டு இந்துவெறியர்கள் அடுத்தகட்டக் கிளர்ச்சியில் இறங்கினர். காங்கிரசு பணிந்துபோய், தாவாவுக்குட் பட்ட நிலத்தில் மசூதி எதிரே செங்கல் பூசை நடத்த அனுமதித்தது. பின்னர் உ.பி.யில் இந் துவெறியர்கள் ஆட்சியைக் கைப்பற்றி தாவாவுக்குட்பட்ட நிலத்தை சட்டவிரோத மாக அபகரித்துக் கொண்டு, கட்டுமான வேலைகளில் ஈடுபடத் தொடங்கினர். அக் டோபர் '91-ல் ராமர் கோயில் கட்ட இந்து வெறியர்கள் சுற்றுச்சுவர் எழுப்பினர். அப் போதும் காங்கிரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மார்ச் '92-ல் தாவாவுக்குட் பட்ட நிலத்தை உ.பி. அரசு ராமஜென்மபூமி முக்தி நியாஸ் என்ற அமைப்புக்கு தாரை வார்த்துக் கொடுத்தது. அதே நேரத்தில், சக் ஷிகோபால் கோயில், சங்கத் மோட்ச கோயில் முதலான சிறிய கோயில்கள் இடிக் கப்பட்டன. இவை பெரிய அளவில் ராமர் கோயில் கட்டுவதற்கான தடைகளை அகற் றும் நடவடிக்கைதான் என்று அறிந்தும்கூட காங்கிரசு அரசு கைகட்டி நின்றது. எதிர்க்கட் சிகளின் கண்டனத்துக்குப் பிறகு தேசிய ஒரு மைப்பாட்டுக் கவுன்சிலைக் கூட்டி, ஒரு குழுவை அயோத்திக்கு அனுப்பி நிலை மையை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்ப தாக பிரதமர் வாக்களித்தார். தூதுக்குழு அறிக்கை சமர்ப்பித்த பிறகும்கூட இன்று வரை நடவடிக்கை எடுக்காமல் தனது வாக் குறுதியைக் காற்றில் பறக்கவிட்டார். இப் போது இந்து வெறியர்கள் சட்டவிரோதமாக கோயில் கட்ட அடித்தளம் அமைத்த பின்ன ரும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பேச் சுவார்த்தை - உடன்பாடு மூலம் தீர்வு காணப் போவதாக மீண்டும் வாக்குறுதி அளிக்கிறார். போதாக் குறைக்கு ராமர் கோயில் கட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்துவெறியர்கள் இப்போது லட்சுமணன் கோயில் கட்டுவதையும் காங்கிரசு அங்கீக ரித்துள்ளது. அது தாவாவுக்குட்பட்ட நிலப்ப குதியில் இல்லை; எனவே அங்கு கோயில் கட்டுவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை என்கிறது காங்கிரசு.

## ஜெர்மனிக்கு நாஜிக்கள் இந்தியாவுக்கு பாரதீய ஜனதா

ஐரோப்பாவை விழுங்க நாஜிக்கள் போர்ப் பிரகடனம் செய்தபோது, நாஜிக்க ளுக்கு விட்டுக்கொடுத்து சாந்தப்படுத்தி போரைத் தள்ளிப் போட முயன்றார் அன் றைய பிரிட்டிஷ் பிரதமர் சேம்பர்லைன். நாஜிக்களுடன் சேம்பர்லைன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டுக்கும் இந்துவெறியர் களுடன் நரசிம்மராவ் கண்டுள்ள உடன்பாட் டுக்கும் அதிகம் வித்தியாசமில்லை. சேம்பர் லைனின் ஒப்பந்தம் பிரிட்டனை உலகப் போரில் தள்ளிவிட்டது. நரசிம்மராவின் ஒப் பந்தம் நாட்டை இந்துவெறி பாசிஸ்டுகளின் காலடியில் தள்ளிவிட்டுள்ளது.

இந்து மதவெறிப் பாசிசம் வேகமாகப் பற்றிப் படர்ந்துவரும் வேளையில், மதச்சார் பின்மை பற்றி வாய்கிழியப் பேசும் ஓட்டுக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் கண்டனம் எழுப்புவது, சிறுபான்மை முஸ்லிம்கள் ஊர் வலம் நடத்தினால் ஆதரவு தெரிவிப்பது என்பதைத் தவிர வேறொன்றும் செய்வ தில்லை. எனவேதான் எதிர்ப்பே இல்லா மல், நாடு தழுவிய அளவில் அயோத்தி விவகாரத்தை ஒரு இயக்கமாக இந்து வெறி யர்கள் நடத்திக் கொட்டமடிக்கின்றனர். இந்து வெறி பாசிசத்தை நாடாளுமன்றக் கண்டனங்கள் மூலமோ, நீதிமன்றத் தீர்ப்பு கள் மூலமோ ஒருக்காலும் தடுத்துவிட முடி யாது. இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரா கக் களத்தில் இறங்கி எதிர்த் தாக்குதல் தொடுக்காமல் அதை முறியடிக்கவும் முடி யாது.

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com




● *மாவோ புரட்சிக்காகத் தன் குழந்தையைக் கூட தியாகம் செய்தாராமே, உண்மையா?*

*— அஜித்தா, திருச்சி.*

★ உண்மைதான். நீண்ட பயணம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? போர்களின் வரலாற்றில் முதன்மையானதும், சாதனையாகவும் அமைந்தது மாவோவின் தலைமையில் சீன செஞ்சேனை மேற்கொண்ட நீண்ட பயணம். சீனாவின் தென் கிழக்கே உள்ளது ஜுய்சின் மலைப் பிராந்தியம். அங்கே உள்நாட்டு எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்ட செஞ்சேனை அந்த முற்றுகையைத் தகர்த்துக் கொண்டு வெளியேறி, வடக்கில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு எதிரியை சந்திப்பதற்காக நீண்ட பயணத்தை மேற்கொண்டது. 7,500 மைல்கள். உலகிலேயே அபாயகரமான காடுகள் நிறைந்த 18 பனிமலைகளையும் 24 ஆறுகளையும், 11 மாநிலங்களையும், 62 நகரங்களையும் கடந்து சென்றது. நாள்தோறும் ஒரு மோதல் வீதம் வழிநெடுக போர் புரிந்து கொண்டே நகர்ந்தது. 10 யுத்தப் பிரபுக்களின் படைகளையும், 10 லட்சம் பேரைக் கொண்ட கோமிங்டான் படையையும் முறியடித்தது.

லட்சக்கணக்கானோர் மேற்கொண்ட அந்த நீண்ட பயணத்தின் முடிவு வெற்றிகரமாக அமைந்தபோது எஞ்சியவர்கள் சில ஆயிரம் பேரே. பெரும்பான்மையினர் வழியில் நடந்த போர்களினாலும், விபத்துக்களினாலும், நோயினாலும் மாண்டுபோயினர். புரட்சிப் பணியைத் தொடர்வத்றகாக வழியிலேயே பலர் விட்டு வைக்கப்பட்டனர். இன்னும் பலர் செஞ்சேனையின் நீண்ட பயணம் தொடர்வதற்குச் "சுமை"யாகக் கருதப்பட்டுக் கைவிடப்பட்டனர். அவ்வாறுதான் வழியிலேயே விடப்பட்ட மாவோவின் மனைவியும், குழந்தையும் என்ன ஆனார்கள் என்பது தெரியாமலேயே போய்விட்டது. கொரியப் போரிலே பங்கேற்ற மாவோவின் இன்னொரு மகன் போரிலேயே கொல்லப்பட்டார். மற்றொரு மகன் இப்போது சீன உணவு விடுதியில் தொழிலாளியாக இருக்கிறார்.

● *1960 - 61 கால கட்டங்களில் சி.பி.ஐ, சி.பி.எம். ஒரு அணியாய் இருந்தபோது புரட்சிக்குத் தயாராகி அது அரசால் ஒடுக்கப்பட்டது உண்மையா?*

*— க.இராமதாஸ், மாதிரிமங்கலம்.*

★ உண்மையல்ல. இந்த இரண்டு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஒருபோதும் புரட்சிக்குத் தயாராக இருந்ததில்லை. 1946 - 48 காலகட்டத்தில் ஆந்திர மாநிலத் தலைமை தெலுங்கானா உழவர் பேரெழுச்சியை நடத்தியது. அதைக் காட்டிக் கொடுத்து துரோகமிழைத்தது டாங்கே கும்பல். 1967இல் நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியை மாவட்டத் தலைமையில் இருந்தவர்கள் நடத்தினர். அதன் மீது போலீசை ஏவிப் படுகொலை நடத்தி அடக்கியது ஜோதிபாசு கும்பல். இதற்கிடையே 1948இல் புரட்சிக்கு அறைகூவல் விட்டது ரணதிவே கும்பல். ஆனால் அது தற்கொலையாகவும், குறைப்பிரசவமாகவும் முடிந்தது. அதாவது "தெலுங்கானா உழவர் பேரெழுச்சி மேற்கொண்ட மாவோவின் பாதை தவறானது; நாடு முழுவதும் புரட்சிக்குத் தயாராக உள்ளது; எனவே நகர்ப்புறங்களில் பொது வேலை நிறுத்தங்கள், பொது எழுச்சிகள் நடத்தி உடனடியாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்" என்று அப்போதைய கட்சிப் பொதுச் செயலாளர் ரணதிவே அறைகூவல் விட்டார். இதன் விளைவாக, நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை நரவேட்டையாடினார் "இரும்பு மனிதன்" வல்லபாய் பட்டேல். புரட்சி தோல்வியில் முடிந்தது என்று சுயவிமர்சனம் செய்து கொண்டு பதவி இறங்கினார், ரணதிவே. அப்போது தலைமறைவாக இருந்ததைக் காட்டித்தான் இப்போதும் புரட்சிவேடம் போட்டு அணிகளை ஏய்த்து வருகிறது சி.பி.ஐ., சி.பி.எம். தலைமைகள். காலிப் பெருங்காய டப்பாக்கள் பழைய வாசத்திலேயே பிழைக்கின்றன. ஆகவே உண்மை இதுதான்: சி.பி.ஐ. தலைமையான டாங்கேயும் அவரது வாரிசுகளும் காந்தி, நேரு, இந்திரா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மூலம் சமுதாய மாற்றத்துக்குப் "பாடுபடுகின்றனர்". சி.பி.எம். தலைமையான நம்பூதிரிபாடு, ஜோதிபாசு கும்பலைப் பொறுத்தவரை தொழிற்சங்க வாதமே கதி என்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற, மந்திரி நாற்காலி சுகமே இலட்சியம் என்றும் இருக்கின்றனர்.

● *1947 ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இந்தியாவில் புரட்சி வெடித்துப் பரவாததற்குக் காரணம் மக்களா, ஆளும் அரசியல்வாதிகளா, பணக்காரர்களா, அல்லது (சி.பி.ஐ, சி.பி.எம்.) கம்யூனிஸ்டுக்காரர்களா?*

*— க.இராமதாஸ், மாதிரிமங்கலம்.*

★ சரியான தருணத்திற்கு சரியான முழக்கமும் வழிகாட்டுதலும் தலைமையும் இருந்தால் புரட்சி வெடித்துப் பரவாததற்கு மக்கள் காரணமாக இருப்பதில்லை. அந்த நிலையில் ஆளும் அரசியல்வாதிகளும் பணக்காரர்களும் கூட புரட்சி வெடித்துப் பரவுவதைத் தடுத்துவிட முடியாது; அல்லது தற்காலிகமானதொரு தடையைத்தான் ஏற்படுத்த முடியும். இரண்டு போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மட்டுமல்ல மார்க்சிய - லெனினியக் கட்சியின் தலைமையும் கூட யதார்த்த நிலைமைக்குப் பொருத்தமான, சரியான அரசியல் முழக்கமும், வழிகாட்டுதலும் முன்வைக்கத் தவறியதால் புரட்சி வெடிக்கவும் முன்னேறிப் பரவவும் தடையாக இருந்திருக்கின்றன.

அதோடு 1947 ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இந்தியாவில் புரட்சி வெடித்துப் பரவாமல் இருக்கிறது என்பதும் சரியல்ல. 1967 நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியின் மூலம் வெடித்த புரட்சி மிகக் குறுகிய காலத்திலேயே நாட்டின் பல மாநிலங்களையும் பற்றிப்பரவியது. தலைமையின் 'இடது' தீவிரவாதத் தவறுகளினால் பின்னடைவையும் தேக்கத்தையும் அடைந்தபோதும் அது மீண்டும் தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு புத்துயிர் பெற்று முன்னேறுகிறது.

● *புதிய ஜனநாயகத்தில் முற்போக்கு மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது விமர்சனங்கள் வருவது தோழமைபூர்வமானது இல்லை. அரங்கத்துக்குள் விவாதிக்க வேண்டியதை இப்படி அம்பலத்தில் (பு.ஜ-வில்) வெளியிடுவது சரியில்லை என்று கூறுகிறார்கள். உங்கள் பதில் என்ன?*

*— முத்து, திருச்சி.*

★ "அரைவேக்காடு". "குழுதம் அரசு". "அதை நிரூபிக்க முடியுமா?" "இதற்கென்ன ஆதாரம்?" என்றெல்லாம் முற்போக்கு மாணவர் சங்கப் பத்திரிகையில் 'புதிய ஜனநாயக'த்தைத் திட்டியும், சவால் விட்டும் அவர்கள் எழுதினார்கள். நாமோ அப்படி எழுதாது, பொறுப்பான பதிலும், விமர்சனங்களும்தான் எழுதுகிறோம். அவ்வாறு நம்மைத் திட்டி, சவால் விட்டார்கள் என்கிற ஆத்திரத்துக்காகவோ, அவர்கள் கூறுவதுபோல அவர்களது அமைப்பைச் சீர்குலைத்திடவோ அல்ல; பகிரங்கமான அரசியல் - சித்தாந்த விவாதம் இன்றைய நிலையில் அவசியமானது; தோழமை உறவைக் கெடுத்துவிடக்கூடியதல்ல; மார்க்சிய லெனினிய அடிப்படையிலானதுதான் என்கிற காரணங்களால் பகிரங்க விவாதத்தில் - விமர்சனத்தில் ஈடுபடுகிறோம். மாமேதை லெனின் நடைமுறைப்படுத்தியதும், நமக்குக் கற்றுக் கொடுத்ததும் இதைத்தான்.

நன்றாகக் கவனியுங்கள்; நமது விமர்சனங்கள் தோழமைபூர்வமானவை அல்ல என்று ·மு.மா.ச.-வினர் கூறவில்லை. அவ்வாறு அவர்களால் கூறவும் முடியாது; ஏனென்றால் நமது விமர்சனங்கள் தோழமையானவையாகத்தான் உள்ளன. அதற்கு மாறாக நாம் பகி



படிப்பகம்

www.padippakam.com

ரங்கமாக விமர்சிப்பதையே தோழமைபூர்வமானது இல்லை என்கிறார்கள்.

இன்று ஒரே தலைமையைக் கொண்ட மையப்படுத்தப்பட்ட புரட்சிகரக் கட்சி ஒன்றில்லை. பிளவுபட்ட புரட்சிகரக் குழுக்கள் நீண்டகாலம் நீடித்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தனித் தலைமையையும், மையத்தையும், பல்வேறு பிரச்சினைகளில் மாறுபட்ட நிலைப்பாடுகளையும் முழக்கங்களையும் முன்வைத்து மக்களிடையே பணியாற்றுகின்றன. ஆகவே புரட்சிகரக் குழுக்களுக்கிடையிலான மாறுபட்ட நிலைப்பாடுகளையும் செயல்பாடுகளையும் பகிரங்கமாக விமர்சிப்பதும், விவாதிப்பது தவிர்க்க முடியாததும் அவசியமானதும் ஆகும். இல்லையானால் புரட்சிகர அணிகளிடையேயும் மக்கள் மத்தியிலும் குழப்பம்தான் விளையும். உதாரணமாக முற்போக்கு மாணவர் சங்கம் காவிரி நீர் பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைத்ததும் இடைக்காலத் தீர்ப்பும் ஆளும் வர்க்கக் கட்சிகளின் சதி, அதை அமுலாக்கக்கூடாது என்கின்றது; நாமோ அப்படிக் கருதவில்லை. நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு நியாயம் வழங்குவதாகும், அதை அமுலாக்க வேண்டும் என்கிறோம். அவர்களோ, இட ஒதுக்கீடு பிரச்சினையில் மண்டல் பரிந்துரையை ஆதரிக்காதவர்கள் மக்கள் எதிரிகள் என்கிறார்கள்; நாமோ இட ஒதுக்கீட்டை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாத மேல்சாதியினரிடையே அரசு பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான சண்டை என்கிறோம். அவர்களோ ''சுதந்திரத் தமிழ்நாடு'' என்கிற முழக்கத்தை முன்வைத்து இயக்கம் நடத்துகிறார்கள்; நாமோ ''பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை'' முழக்கத்தை முன்வைத்து இயக்கம் நடத்துகிறோம் இவற்றில் எல்லாம் அவரவர் நிலைப்பாடுகளையும் செயல்பாடுகளையும் மக்களிடையே எடுத்துச் செல்லும்போது மாறுபாட்டைப் பகிரங்கமாக விளக்குவதும் விமர்சிப்பதும் அவசியமில்லையா? அம்பலத்துக்கு அவரவர் நிலைப்பாடு, அரங்கத்திற்குள் மட்டும் விவாதம் - விமர்சனம் என்பது அணிகளை மட்டுமல்ல, மக்களையும் குழப்பாதா? இது இன்னொரு வகை சமரசம்-சந்தர்ப்பவாதம் தானே தவிர தோழமையானதல்ல; மக்களுக்குப் பொறுப்பானதும் அல்ல. மக்களே புரட்சிகரக் குழுக்களுக்கிடையிலான மாறுபாடுகள் என்னென்ன என்று விளக்கும்படி கோருகிறார்கள் என்பதுதான் உண்மை.

## மாவோ மகனையே தியாகம் செய்தாரா? போலிக் கம்யூனிஸ்டுகள் புரட்சிக்குத் தயாராகி ஒடுக்கப்பட்டதா? புரட்சி வெடிக்காததற்கு என்ன காரணம்? பகிரங்க விமர்சனம் தோழமையைப் பாதிக்குமா?

● *(புதிய ஜனநாயகமும் பார்ப்பனத் தலைமையைக் கொண்டது என்கிற) வி.சின்னதுரையின் கேள்விக்கு (16 மே-15 ஜூன் '92) இதழில் தாங்கள் நேரடியாகப் பதிலளிக்காமல் சுற்றி வளைத்து அதுவும் ம.ஜ.இ.க.-வை வசைபாட வேண்டும் என்ற எண்ணத்தோடு பதிலளித்துள்ளீர்கள். மேலும் அரசியல் - சித்தாந்த ரீதியில் நிலைப்பாடுகளை மறுக்கவோ, எங்களது விமர்சனங்களுக்கு முகங்கொடுக்கவோ துணியாதவர்கள் தங்களது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க இப்படி அவதூறு செய்கிறார்கள் (ம.ஜ.இ.க.) என நேர்மையற்ற முறையில் (தாயகம், உண்மை வாயிலாக அறிகிறோம் என்ற பின்னும்) பதிலளித்துள்ளீர்கள். மேலும் ம.ஜ.இ.க.-வின் விமர்சனம் அரசியல் - சித்தாந்த ரீதியாகவும், நேர்மையான முறையிலும் இருக்குமேயொழிய \தனிநபர் பண்புகளையோ, பார்ப்பனத் தலைமை என்றோ இருக்காது. அப்படி எங்காவது பேசியதற்கு ஆதாரம் உண்டா? இப்படி ஆதாரமற்ற முறையில் அவதூறு செய்வது தாங்கள்தான் என்பது இதன்மூலம் தெரிகிறது. மேலும் தாங்கள்தான் அரசியல் சித்தாந்த விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இப்படித் தங்களது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.*

*மேலும் ''இந்த அமைப்புக்குள் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு எதுவும் கிடையாது. இன்ன சாதிப் பிறப்புடையவர்கள்தான் தலைமைக்கு வரலாம் அல்லது வரக்கூடாது என்ற விதி எதுவும் இந்த அமைப்பில் கிடையாது. எங்கள் மீது அவதூறு பொழியும் அந்த அமைப்புகளில் அப்படி விதி இருக்கிறதா? இல்லை அப்படி விதியின்றியே செயல்படுத்துகிறார்களா என்பது தெரியாது'' என்று கூறியுள்ளீர்கள். எங்களது அமைப்பில் (ம.ஜ.இ.க.) அப்படி விதியும் இல்லை. விதியின்றி செயல்படுத்துவதும் இல்லை என்பது தங்களுக்குத் தெரியாததுபோல் கூறியுள்ளீர்கள். மேற்கூறிய தங்களின் பதில்தான் பகுத்தறிவற்றவர்களை உருவாக்கும் என நினைக்கிறேன்.*

*— செ.செல்வராஜ், ம.ஜ.இ.க., சேலம்*

★ பு.ஜ.-வும் பார்ப்பனத் தலைமையைக் கொண்டது என்று தாயகம், உண்மை வாயிலாகத்தான் வி.சின்னதுரை அறிய வந்ததாகக் குறிப்பிட்டிருந்தார் என்பது உண்மையே. அந்த ஏடுகள் இப்படி அவதூறு செய்வதில் வியப்புக்குரியது எதுவும் இல்லை. ஆனால் புரட்சியாளர்கள் என்று கூறிக் கொள்ளும் வேறு சிலரும் இப்படி அவதூறு செய்கின்றனர். ஆகவே இவர்களுக்கும் சேர்த்துப் பதில் அளிப்பது அவசியமானதும், சரியானதும் என்றே கருதுகிறோம். சின்னதுரையின் கேள்விக்கு நாம் நேரடியாகத்தான் பதில் எழுதியுள்ளோம்; சுற்றிவளைக்கவில்லை. அதேபோல உள்ளதைத்தான் எழுதினோமே தவிர வீண்பழி எதுவும், யார்மீதும் சுமத்தவில்லை ''பு.ஜ.-வும் பார்ப்பனத் தலைமையைக் கொண்டது'' என்று தாம் அவதூறு பரப்பவில்லை; அப்படி பரப்பியதற்கு ஆதாரம் உண்டா என்று இப்போது மாற்றுக் குழுக்கள் கேட்கின்றனர். அப்படி நேரில் கேட்பவர்களிடம் குறிப்பாகவே சுட்டிக்காட்டியிருக்கிறோம் அதற்கு அவர்கள் அது தனிநபர்களின் கருத்துதான் என்றும் அமைப்புத் தீர்மானம் போட்டதாக ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டனர். வதந்திகளையும் அவதூறுகளையும் பரப்புபவர்கள் தீர்மானம் போட்டும், ஆதாரம் வைத்துக் கொண்டும் செய்வதில்லை. மேலும் அப்படி அவதூறு செய்யும் நபர்களையும், இடங்களையும் குறிப்பிட்டுப் பத்திரிகையில் எழுதுவது சரியல்ல என்பதாலேயே இங்கே தவிர்க்கிறோம்.

அரசியல் சித்தாந்த விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் நாம்தான் நமது கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளோம் என்று ம.ஜ.இ.க-வின் செல்வராஜ் எழுதுகிறார். ம.ஜ.இ.க.-வின் அரசியல் தலைமையின் விமர்சனங்களுக்கு நாம் பதிலளித்து அவர்களது ஆவணத்தையும் சேர்த்து நாமே அச்சிட்டு வெளியிட்டும், விமர்சித்தும் ஆண்டுக்கணக்கில் ஆகிறது. இன்னமும் அவர்களிடம் இருந்து பதிலேதும் கிடையாது. அப்படி இருக்கும்போது விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க முடியாதவர்கள் யார் என்று வாசகர்களே அறிவர். ●

## தவறுக்கு வருந்துகிறோம்

''புதிய ஜனநாயகம்'' 1-15 ஜூலை '92 இதழ் கேள்வி பதில் பகுதி(பக்.21)யில் ஸ்டாலின் மீதான அவதூறுகளுக்குப் பதிலளித்துள்ளோம். அதில் ஸ்டாலினுக்கு அடுத்த நிலையிலுள்ள தோழர் எஸ்.எம்.கிரோவை, டிராட்ஸ்கி - ஜினோவிவ் கும்பல் படுகொலை செய்தது என்பதற்கு பதில் ''தோழர் பெரியாவை அக்கும்பல் படுகொலை செய்தது'' என்று தவறாகக் குறிப்பிட்டு விட்டோம். அத்தவறுக்கு வருந்தி சுயவிமர்சனம் ஏற்கிறோம். கேள்வியாளர் குறிப்பிட்டதைப் போல லெனின்கிராடு கட்சித் தலைவர் செர்கெய்கிரோவை, ஸ்டாலின் படுகொலை செய்ததாகக் கூறுவது தவறானது. டிராட்ஸ்கி - ஜினோவிவ் கும்பலில் ஒருவன்தான் அத்தோழரை சுட்டுக் கொன்றான். கொலைகாரன் அதே இடத்தில் கைது செய்யப்பட்டதோடு அவன் ஜினோவிவால் ஏவிவிடப்பட்டவன் என்பதும் 1936 மாஸ்கோ வழக்கு விசாரணையில் நிரூபிக்கப்பட்டது. ஜினோவிவ் முதலில் குற்றத்தை மறுத்தாலும் பின்னர் ஆணித்தரமான ஆதாரங்களை முன்வைத்த போது சர்வதேச பிரமுகர்களும் பத்திரிகையாளர்களும் குழுமியிருந்த நீதிமன்றத்திலேயே குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

படிப்பகம்

www.padippakam.com

# வரிக் கொள்ளைக்கு எதிராக லாரி உரிமையாளர் போராட்டம்

இந்தியா முழுவதும் கடந்த ஜூலை 1-ந் தேதி முதல் லாரி உரிமையாளர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம், ஒருவார காலத்திற்கு சரக்கு போக்குவரத்தை அடியோடு பாதித்து ஆட்சியாளர்களைப் பீதியடையச் செய்துள்ளது. கர்நாடகம் முதலான சில மாநில அரசுகள் இப் போராட்டத்தை சட்டவிரோதமாக அறிவித்தும், அத்தியாவசிய பணித்துறை சட்டத்தின் கீழ் தடைவிதித்தும், முன்னணியாளர்களைக் கைது செய்தும்கூட போராட்டத்தை அடக்கி விட முடியவில்லை. ஜூலை 8-ம் தேதியோடு போராட்டத்தை தற்காலிகமாக முடித்துக் கொண்ட லாரி உரிமையாளர்கள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்த கட்டப் போராட்டத்தை துவக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

12 லட்சம் லாரி உரிமையாளர்கள் பங்கேற்ற இப்போராட்டத்திற்கு காரணம் என்ன? முதலாவதாக, சில மாநிலங்களில் லாரிகளில் சரக்குகளைக் கொண்டு செல்லும் போது எல்லையிலுள்ள சுங்கச் சாவடியில் சரக்குவரி (ஆக்ராய்) வசூலிக்கப்படுகிறது. இது 70 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் கொண்டுவந்த வரிவசூல் முறை. ஆனாலும் இன்றைய ஆட்சியாளர்களின் பகற்கொள்ளைக்காக இந்த வரி இன்னமும் தொடர்கிறது. உதாரணமாக, மகாராஷ்டிராவில் மட்டும் ஆண்டுக்கு சரக்கு வரி மூலம் 925 கோடி ரூபாய் வருவாயாகக் கிடைக்கிறது. அரியானா, மே.வங்கம் முதலான ஏழு மாநில அரசுகளுக்கு ஏறத்தாழ 25% வருவாய் சரக்கு வரி மூலம் கிடைக்கிறது. இந்தியாவின் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குள் செல்வதற்கு வரி வசூல் செய்வதே அநியாயமானது. அதைவிட சரக்கு போக்குவரத்தில் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத அரசு, சரக்கு வரி மூலம் சட்டபூர்வ வழிப்பறி செய்வது அக்கிரமமானது. இந்த வரியை லாரி உரிமையாளர்கள் கட்டினாலும் அதனால் அவர்களுக்கு முழுமையாக பாதிப்பில்லை. சரக்கை வாங்கும் சாமானிய மக்களின் மீதுதான் அந்த வரி கடைசியில் சுமத்தப்படுகிறது.

பிரச்சினை என்னவென்றால், சுங்கச் சாவடிகளிலுள்ள அதிகாரிகள் சரக்குகளின் மதிப்பை தன்னிச்சையாக குறித்து தாறுமாறாக வரி வசூலிப்பது. சுங்கச் சாவடிகளில் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியிருப்பதால் ஏற்படும் தாமதம், அதிகாரிகளுக்கு மாமூல் முதலானவற்றால் லாரி உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே முன்கூட்டியே சரக்கு வரி கட்டும் திட்டமோ அல்லது மாற்றுத் திட்டமோ கொண்டுவந்து காலதாமதத்தையும் நட்டத்தையும் தவிர்க்க வேண்டும் என்பது அவர்களின் நீண்டகாலக் கோரிக்கை. முன்பு இந்திரா பிரதமராக இருந்தபோது இந்த வரியை ரத்து செய்யுமாறு மாநில அரசுகளுக்கு உத்திரவிட்டார். தமிழ்நாடு உள்ளிட்ட ஒருசில மாநிலங்களில் மட்டுமே இந்தவரி ரத்து செய்யப்பட்டது. பெரும்பாலான மாநிலங்களில் இந்த வரிக்கொள்ளை இன்னும் தொடர்கிறது.தமிழகம் போன்ற சில மாநிலங்களில் சரக்கு வரி ரத்து செய்யப்பட்டிருந்தாலும், சரக்குகளை வாங்கும் சாமானிய மக்களிடமிருந்து கூடுதல் விற்பனை வரி போட்டு அதை ஈடு செய்துவிடுகிறது.

இரண்டாவதாக, நுழைவு வரிக் கொள்ளை. புதிய சாலை அல்லது பாலம் கட்டும்போது அச்செலவை ஈடுகட்ட அவ்வழியே செல்லும் வாகனங்களிடம் வரி வசூலிப்பதை மொகலாயர்கள் உருவாக்கினர். ஆனால், புதிய பாலமோ, சாலையோ அமைக்காத போதிலும் ஊருக்குள் நுழையும் வாகனங்களிடம் கட்டாய வரி வசூலிப்பதை இன்றைய ஆட்சியாளர்கள் நுழைவு வரியாக விரிவுபடுத்தியுள்ளனர். உதாரணமாக, பம்பாய் நகருக்குள் நுழைய 100 ரூபாய் வரி செலுத்தினாலும் குறிப்பிட்ட நேரம் வரைதான் அந்நகரில் இருக்கலாம். சரக்கை ஏற்றி இறக்கிவரும்போது காலதாமதமாகி அதிகாரிகள் பிடித்துவிட்டால் மீண்டும் நுழைவு வரி செலுத்திய இடத்திற்கு வந்து அபராதம் செலுத்தி மறு அனுமதி வாங்கிய பிறகே லாரியை நகர்த்த முடியும். அல்லது அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும்.

இவை தவிர, சட்டபூர்வ வழிப்பறிக் கொள்ளையர்களான போலீசாரின் அட்டகாசம் நாடெங்கும் உச்சகட்டத்தில் இருக்கிறது. இன்சூரன்சு, மோட்டார் வாகனவரி, சாலை வரி, தகுதிச் சான்றிதழ், ஓட்டுனர் உரிமம், ஓவர்லோடு - இப்படி ஏதாவது ஒன்றில் குறை உள்ளதாகக்கூறி மாமூல் கறப்பது சர்வ சாதாரணமாகி விட்டது. சென்னையிலிருந்து பம்பாய் செல்வதற்குள் ஒரு தடவைக்கு ஏறத்தாழ ரூ.2,000 இந்தக் கொள்ளையர்களுக்கு கொட்டியழ வேண்டியிருக்கிறது என்கிறார் ஒரு லாரி உரிமையாளர்.

அடுத்து, வளைகுடாப் போரைக் காட்டி டீசல் விலை ஏற்றம் செய்த அரசு, போர் முடிந்த பின்னரும் விலையைக் குறைக்கவில்லை. மாறாக மேலும் உயர்த்தியுள்ளது. இதே போல டயர் விலைகள் தாறுமாறாக உயர்ந்த போதிலும் அதைக் கட்டுப்படுத்த அரசு முன் வரவில்லை. வட மாநிலங்களில் லாரிகளை வழிமறித்துக் கொள்ளையடிக்கும் மாஃபியா கும்பல்களின் அட்டூழியம் தீவிரமாகிவிட்டது. அதைத் தடுப்பதற்கும் லாரிகளுக்கு பாதுகாப்பளிக்கவும் அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இவை தவிர மாநில அளவில் பர்மிட் வாங்கவும் அனைத்து மாநில பர்மிட் வாங்கவும் படாதபாடுபட வேண்டியிருக்கிறது.

இவற்றைத் தீர்க்கக் கோரியே லாரி உரிமையாளர்கள் தமது 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டத்தில் இறங்கினர். போராட்டம் மூன்றாவது நாளைத் தாண்டியபோது பெட்ரோலியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரி உரிமையாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதே நேரத்தில் பம்பாய் சிறுவியாபாரிகள் கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யக் கோரி கடையடைப்புப் போராட்டம் நடத்தியதால் பிரச்சினை மேலும் தீவிரமடைந்தது. அதன் பிறகே மத்திய அமைச்சர் ஜெகதீஷ் டைட்லர் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தார். மத்திய உள்துறை அமைச்சர் சவாண், மாநில முதல்வர்களைக் கூட்டி பேச்சுவார்த்தை நடத்தி ஒரு கமிட்டி அமைத்து கோரிக்கைகளைப்

பம்பாய்: அரசின் வரிக்கொள்ளைக்கு எதிராக லாரி உரிமையாளர்களின் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்






படிப்பகம்

www.padippakam.com

பரிசீலிப்பதாகக் கூறினார். கடைசியில், மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள யூனியன் பிரதேசங்களில் மட்டுமே சரக்குவரி நீக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகளோ அதை நீக்க மறுக்கின்றன. இதனால் மாநில அரசுகளின் வருவாய் பெருமளவில் குறைந்துவிடும் என்று அவை நியாய வாதங்களை அடுக்குகின்றன.

ஆனால் இப்படியொரு வரிவசூலிக்க மத்திய - மாநில அரசுகளுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது. சினிமா பார்க்கிறவனிடம் கேளிக்கை வரிபோட்டு பிடுங்குவதைப் போல அநியாயமான பகற்கொள்ளைதான் நுழைவு வரியும் சரக்கு வரியும். நகராட்சி அதிகாரிகள் மற்றும் போலீசாரின் வழிப்பறிக்கு வழியில்லாமல் போய்விடும் என்பதாலேயே அவர்கள் போராட்டத்தை கடுமையாக எதிர்க்கின்றனர்.

அரசின் அநியாய வரி விதிப்புக்கும் பகற்கொள்ளைக்கும் எதிராக லாரி உரிமையாளர்கள் நடத்திய போராட்டம் நியாயமானதாக இருந்தாலும், அது மக்களை பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்துவிட்டது. சரக்கு போக்குவரத்து தடைப்பட்டதன் விளைவாக சென்னையில் பச்சைமிளகாய் கிலோ 30 ரூபாய்க்கும் தக்காளி கிலோ 20 ரூபாய்க்கும் உயர்ந்து சாமானிய மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இதைக்காட்டி மத்திய - மாநில அரசுகள் மக்களது தார்மீக ஆதரவும் போராட்டத்திற்கு கிடைக்காமல் செய்துவிட்டன.

எனவே, மக்களைப் பாதிக்காத வகையில் அத்தியாவசியச் சரக்குப் போக்குவரத்தை இயக்கும் அதே சமயம் அரசாங்கத்துக்கான சரக்கு போக்குவரத்தை முடக்குவதாக போராட்டத்தை நடத்த லாரி உரிமையாளர்கள் முன்வர வேண்டும். அரசின் அநியாய வரிக் கொள்ளைக்கு எதிராக மட்டுமல்ல; அது மீண்டும் வேறு வழியில் மக்கள் மீது சுமத்தப்படுவதற்கு எதிராகவும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இன்றைய போராட்ட ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் நாளைய வெற்றியைச் சாதிக்கவும் இது அவசியம்.

● *பாலன்*


**பார்ப்பன – பாசிச கும்பலின் ஆடம்பர – ஊழல் – ஊதாரி ஆட்சியை அகற்றிட அணிதிரள்வோம்!**

*புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி(RSYF)யின் புதிய வெளியீடு*

விலை: ரூ.2.00

*நூலை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ.2.50 மதிப்புடைய அஞ்சல்தலைகளை* (STAMPS) புதிய ஜனநாயகம் முகவரிக்கு அனுப்புவும்.


# சி.பா. ஜெயலலிதாவின் சித்தப்பா

தமிழகத்தில் கல்வி நிறுவனங்கள், உயர் ஆய்வு மையங்கள், பல்கலைக் கழகங்கள் எல்லாம் தகுதியற்றவர்கள் தலைமையில் சிக்கி சீரழிந்து வருகின்றன. இதற்கு ஒரு உதாரணம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம். முந்தைய தி.மு.க. ஆட்சியில் கல்வி அமைச்சர் அன்பழகனின் சாதிக்காரர் என்ற ஒரே தகுதியை மட்டுமே கொண்டு ஆட்சியாளர்களின் காலைப் பிடித்து பதவிக்கு வந்தவர்தான் தற்போதைய துணைவேந்தர் சி.பாலசுப்பிரமணியம். இந்த சி.பா., ஊழலிலும் அடக்குமுறையிலும் ஜெயலலிதாவிற்கு சித்தப்பாவாகத் திகழ்கிறார்.

இவர் துணைவேந்தராகப் பொறுப்பேற்ற பின் 200-க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்கள் வெளியிடப்படாமல் முடக்கப்பட்டன. மாறாக, இவருக்கு வேண்டியவர்களின் ஆய்வுகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. ஆய்வு மாணவர்களுக்கு இருக்கை வசதிகூட இல்லை. பல்கலைக் கழக நிதியுதவி ஆணையகத்தில் இருந்து உதவி பெற, புதிய ஆய்வுத் திட்டங்களை மேற்கொள் எந்த நடவடிக்கையும் இல்லை. கருத்தரங்கம், பணிப்பட்டறை எதுவும் நடத்தப்படுவதில்லை. விருந்தகத்தில் ஆய்வாளர்களைத் தங்க அனுமதிப்பதில்லை. ஆனால் சம்பந்தமற்ற காவல்துறை அதிகாரிகள் தங்க தாராள அனுமதி வழங்கப்படுகிறது.

அலுவல் பயணம் என்ற பெயரில் பொய் ஆவணங்கள் தந்து பணம் பெறுவது, நிதி மோசடியில் ஈடுபடுவது, ஆய்வாளர்களின் ஆய்வேடுகளை தனது சொந்த ஆய்வாக வெளியிட்டுப் பணம் பெறுவது சி.பா.வின் வாடிக்கையான ஊழல்! ஒரு சிறு உதாரணமே இவரது அசிங்கமான - கோர முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும். துணைவேந்தர், 'தமிழறிஞர்' என்ற முறையில் இவருக்குக் கிடைக்கும் அன்பளிப்புப் புத்தகங்களையே பல்கலைக் கழக நூலகத்திற்கு விற்று காசாக்கி விடுகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

சி.பா.வின் ஜனநாயக விரோத - ஊழியர் விரோத அடக்கு முறையால் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக பல்கலைக் கழக ஆய்வாளர்களும் பேராசிரியர்களும் வீதியில் நின்று போராடிக் கொண்டுள்ளனர். எட்டு ஆண்டு, பத்து ஆண்டு என்று பணியாற்றி பின்னரும்கூட 700, 800 ரூபாய் சம்பளத்தில் அல்லற்பட்டுக் கொண்டிருந்த தமிழ் ஆய்வாளர்கள் தங்களை நிரந்தரமாக்கக் கோரி போராடிவந்தனர். இப் போராட்டத்தில் சி.பா.வின் அதிகார முறைகேடு, லஞ்ச ஊழல், இலக்கியத் திருட்டுகளையும் அம்பலப்படுத்தினர். போராட்ட நிர்ப்பந்தம் காரணமாக 24 ஆய்வாளர்களை மட்டும் நிரந்தரப் படுத்திவிட்டு போராட்டத்தில் முன்னணியாக செயல்பட்ட 8 ஆய்வாளர்களை பணி நீக்கி பழிவாங்கினார், சி.பா. போராட்டத்திற்கு பல்கலைக் கழக ஆசிரியர் பேரவை உறுதுணையாக நின்றதால் அவர்களையும் வஞ்சகமாகப் பழிவாங்கினார்.

கடந்த 30.6.92 அன்று திடீரென பல்கலைக் கழக உணவு விடுதியில் விலைகளை உயர்த்தியது நியாயமற்றது, தன்னிச்சையானது என எதிர்த்ததற்காக ஆசிரியர் பேரவை தலைவர் டாக்டர் முருகேசன், செயலர் டாக்டர் ரவீந்தரன் ஆகியோரை தற்காலிகப் பணி நீக்கம் செய்தார், சி.பா. இப்பணி நீக்கத்தை எதிர்த்து பேராசிரியர்கள் 2.7.92 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம் செய்கின்றனர். போராட்டத்தில் பல்கலைக் கழகத்தின் முக்கியமான துறையைச் சேர்ந்த ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள் அனைவரும் ஈடுபட்டதால் பல்கலைக் கழக ஆய்வுப் பணிகள் அனைத்தும் முடங்கிவிட்டன. தஞ்சை நகரில் உள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகின்றன.

போராட்டத்தில் இறங்கியுள்ள பேராசிரியர், ஆய்வறிஞர்கள் அனைவருக்கும் விளக்கம் கோரும் கடிதம் அனுப்பியுள்ளார் துணைவேந்தர். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சுவரொட்டி ஒட்டியதற்காக ஆய்வு உதவியாளர்கள் மீதும் நேரடி பழிவாங்கும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளார். மேலும் தன்னை எதிர்ப்பவர்களை பழிவாங்க சாதிய அரசியலைக் கையாள்வது, பதவி தருவதாக ஆசைக்காட்டி ஊழியர்களைப் பிரிப்பது, ஊழலில் பங்கு கொடுத்து கருங்காலிகளை உருவாக்குவது என கீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபடுகிறார்.

துறைத் தலைவர்கள் கூட்டத்தை கூட்டினாலும் எந்த கருத்தையும் சொல்ல அனுமதிப்பதில்லை. பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலும் போதிய அளவு ஆசிரியப் பிரதிநிதிகளை அனுமதிப்பதில்லை. ஆட்சிக் குழு முழுவதும் அதிகார வர்க்கமே நிறைந்திருப்பதால் துணைவேந்தரின் தமிழ்விரோத ஊழியர் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகள், முறைகேடுகள் பற்றியும் ஆசிரியர் போராட்ட கோரிக்கைப் பற்றியும் தமிழக அரசுக்கு பல முறையீடுகள் அனுப்பியும் கண்டு கொள்ளப்படவேயில்லை. தமிழின விரோதி ஜெயாவுக்கு ஆகமக் கல்லூரி பற்றித்தான் கவலைப்பட நேரமிருக்குமேயொழிய தமிழ்ப் பல்கலைக் கழக சீர்கேடுகள் - முறைகேடுகள் பற்றி கவனம் செலுத்த நேரமிருக்காது. பலசரக்குக் கடைக்குக் கூட தலைவராகத் தகுதியற்ற சி.பா. போன்ற அதிகார வர்க்க முட்டாள்களைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக்கினால் தமிழ் வளர்ச்சி சீரழிவதைத் தடுக்க முடியாது. துணைவேந்தர் சி.பா -விடமிருந்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மீட்டு காப்பாற்றுவது அவசியம்.

தகவல்:- *ம.க.இ.க., தஞ்சை*

படிப்பகம்

www.padippakam.com

# வச்சாத்தி ஆதிவாசிகள்மீது வனத்துறை - போலீசு காட்டுமிராண்டித்தனம்

***தினந்தோறும் அதிகரித்துவரும் போலீசு நிலையக் கொட்டடிக் கொலைகள், கற்பழிப்புகளும் இந்த அரசு எந்திரம் முழுவதுமே சமூக விரோத கிரிமினல் - பாசிசமயமாவதையே காட்டுகின்றன.***

ஓர் ஆக்கிரமிப்பு இராணுவத்தைப் போல இங்கே ஒரு கிராமத்து ஆதிவாசி மக்கள் மீது பாய்ந்து அட்டூழியங்கள் புரிந்துள்ளனர் தமிழ்நாட்டுப் போலீசும் வனத்துறையினரும்.

தர்மபுரி மாவட்டம், அரூர் அருகே உள்ளது வாச்சாத்தி கிராமம். 300 ஆதிவாசிக் குடும்பங்கள் விவசாயம் செய்து பிழைக்கின்றனர். ஆனால் அவர்கள் அருகிலுள்ள சித்தேரி மலையில் இருந்து சந்தன மரம் கடத்தி விற்பதாகவும், கிராமத்தைச் சோதனையிடுவதாகவும் சொல்லி ஆண்-பெண் போலீசாருடன் வனத்துறை அலுவலர்கள் கடந்த ஜூன் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் முகாமிட்டனர்.

12 வயதுச் சிறுமி முதல் 50 வயது மூதாட்டி வரை 18 பெண்களை அவர்கள் கும்பல் கும்பலாகக் கற்பழித்தனர். கையில் கிடைத்த ஆண்களை எல்லாம் அடித்து நெறுக்கி, கைகால்களை முறித்து அரூர் வனச் சரக அலுவலகத்தில் கொண்டு போய் அடைத்தனர். எஞ்சிய ஆண்கள் தப்பி ஓடி சித்தேரி மலைக் காடுகளில் ஒளிந்து கொண்டனர். ஆதிவாசிகள் வளர்த்த கோழிகளையும் ஆடுகளையும் சுட்டுக் கறிசமைத்து விருந்து உண்பதும் பெண்களைக் கற்பழிப்பதுமாக மூன்று நாட்கள் வெறியாட்டம் போட்டுள்ளனர்.

தினவெடுத்துப்போய் ஊராட்சி ''ரேடியோ'' பெட்டி, ஊரின் ஒரே மாவுமில், 5 மின் மோட்டார்கள், 5 ஆயில் என்ஜின்கள், வீடுகள் ஆகியவற்றை அடித்து நாசப்படுத்தினர். பள்ளிப்பாடப் புத்தகங்கள், ''ரேசன் கார்டு''களைக் கொளுத்தினர். ரூ 15 லட்சம் மதிப்புடைய நவதானியங்கள், ''ரேடியோ'' பெட்டிகள், கோயில் உண்டி ஆகியவற்றை களவாடிச் சென்றனர்.

அரூர் வனச்சரக அலுவலகத்தில் அடைக்கப்பட்ட 94 பெண்களில் அழகானவர்களைத் தெரிவு செய்து கும்பல் கும்பலாக மீண்டும் மீண்டும் கற்பழித்தனர். ஆண்களும் பெண்களும் நிர்வாணப்படுத்தப்பட்டு ஒருவர் சிறுநீரை மற்றவர் குடிக்குமாறு நிர்பந்தித்தனர். தொடர்ந்து அடித்து உதைத்து, சாக்கடை வார்த்தைகளில் ஏசுவதில் பெண் போலீசாரும் பங்கு கொண்டனர். 189 பேர் மீது பல்வேறு பொய் வழக்குகள் போட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டனர். கிராமத்தில் கொள்ளையிட்ட பல பொருட்கள் தவிர எஞ்சியவற்றை சூறையாடிவிட்டனர். தானியங்களில் உப்பு, கண்ணாடித் தூள்களைக் கலந்து வைத்தனர். கிணற்று நீரில் தின்று தீர்த்த எச்சில் கறியையும், ஆட்டுத் தோல்களையும் வீசிக் குடிநீரைப் பாழ்படுத்தினர்.

இத்தனை கொடுமைகள், அட்டூழியங்களுக்கு பலியாகும் அளவுக்கு வாச்சாத்தி கிராம மக்கள் அப்படி என்ன குற்றமிழைத்துவிட்டார்கள்?

புலனாய்வு இதழியலில் சாதனை படைத்துவருவதாகப் பீற்றிக் கொள்ளும் பிரபல கிசுகிசுப் பத்திரிகையான ''ஜூனியர் விகடன்'' (1.7.92) வனத்துறை அதிகாரிகள் தந்த அறிக்கையை மிகவும் விசுவாசமாகப் பிரசுரித்திருக்கிறது. அதன் சாரம் பின்வருமாறு உள்ளது.

''சித்தேரி மலைப் பகுதியில் உள்ள 20 கிராமங்களின் மக்கள், நூற்றுக்கணக்கான வீரப்பன்களுக்காக சந்தன மரக்கடத்தல் தொழில் செய்து வருகின்றனர். காட்டிலாகா, அதிகாரிகள், போலீசார் எவரையும் கிராம எல்லைக்குள் அனுமதிப்பதில்லை, மீறிப் புகுந்தால் தாக்குவது என்று ஊர்க் கட்டுப்பாடு போட்டுள்ளனர். ஈட்டி, அரிவாள், கம்புகளோடு நாட்டு வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், வேட்டை நாய்கள் உட்பட பயங்கர ஆயுதபாணிகளாக இருக்கின்றனர்''.

''கிருஷ்ணகிரி கோட்ட வனத்துறை அதிகாரி நாதன் அரூர் பகுதியில் வழக்கமான ரோந்து போனபோது சந்தன மரம்கடத்திய மூன்று பேரைப் பிடித்தனர். சாப்பிட்டுத் துணிமாற்ற கிராமத்துக்கு விடப்பட்ட அவர்களைக் கைது செய்யப்போன 15 வனத்துறை அதிகாரிகளை வாச்சாத்தி மக்கள் பிடித்துவைத்துக் கொண்டு புஞ்சாயத்துப்பேசி மிரட்டி அனுப்பினர்.''

''அந்தக் கிராமத்தில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய சந்தன மரங்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக இரகசியத் தகவல்கள் வனத்தறை அதிகாரிகளுக்குக் கிடைத்தது. எனவே வாச்சாத்தி கிராமத்தை 'ரெய்டு' செய்வது எனத் திட்டமிட்டு, கோட்ட அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் திரட்டப்பட்டு, ஆண், பெண் போலீசாரோடு ஜூன் 19-ந் தேதி இரவு வாச்சாத்தி கிராமத்தை முற்றுகையிட்டனர். முதலில் போன குழுவைச் சுற்றிவளைத்து உருட்டுக் கட்டைகளால் தாக்கி பலரைப் படுகாயப்படுத்தி, உடைகளையும் கிழித்து கிராமத்திலேயே அடைத்து வைத்தனர். இரண்டாவதாக போலீசுப் படையுடன் போன அதிகாரி நாதன் அவர்களை மீட்டார். கிராமத்துத் தோட்டங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒன்னரைக் கோடி ரூபாய் மதிப்புடைய 60 டன் சந்தன மரங்களை மூன்றே நாட்களில் மீட்டார். 189 பேர் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன.''

பொது மக்களுக்கு எதிரான அட்டூழியங்களில் ஈடுபடும் போதெல்லாம் போலீசார் வழக்கமாகச் ஜோடிக்கும் கட்டுக் கதைதான் இது என்பது முதல் வாசிப்பிலேயே தெரிந்துவிடுகிறது.

திறமைசாலியான காட்டிலாகா அதிகாரி முதல் தடவை ரோந்து போனபோது சந்தன மரம் கடத்தியதாகப் பிடித்த மூன்று பேரை சாப்பிடவும் உடை மாற்றவும் கிராமத்துக்கு அனுப்பியதாகக் கூறுகிறார். இது நம்பக் கூடியதா? வாச்சாத்திக்கு ''ரெய்டு'' போன 45 பேர் கொண்ட முதல் குழுவினரிடம் இருந்து 10 நாட்டுத் துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு உருட்டுக் கட்டையால் கிராமத்தார் தாக்கியதாகக் கூறுகிறார். இவர்களிடம் நாட்டுத் துப்பாக்கிதான் இருக்குமா? அதைப் பறிக்கவரும் போது தற்காப்புக்காக் சுட்டதாகவே கூறவில்லை. நாட்டு வெடிகுண்டுகளும் துப்பாக்கிகளும் பிற ஆயுதங்களும் வைத்திருக்கும் வழக்கம் உள்ளவர்கள் எனச் சித்தரிக்கப்படும் ஆதிவாசிகள் இவர்களது நடவடிக்கைகளுக்கு எதிராகப் பயன்படுத்தவே இல்லை. இது மட்டும் எப்படி?

சந்தன மரம் கடத்திக் கோடிகோடியாக சம்பாதிப்பதாகக் கூறப்படும் இந்த ஆதிவாசிகள் சமீப காலம் வரை குடிசைகளிலேயே

**கோடிகோடியாக சந்தனம் மரம் கடத்தியதாகக் கூறப்படும் ஆதிவாசிகள் வீட்டு மண்பாண்டங்கள் நொறுக்கப்பட்டன.**





படிப்பகம்

www.padippakam.com

வாழ்ந்தனர். இப்போதுதான் ஆதிவாசி - தாழ்த்தப்பட்டோர் வாரியம் கட்டிக் கொடுத்த வீடுகளில் குடியேறினர். இதுவும் எப்படி நம்பமுடிகிறது? கோடிக்கணக்கில் சந்தன மரம் கடத்துவதாகக் கூறப்படும் இவர்களிடம் லஞ்சம் வாங்குவதற்கு வாய்ப்பு இருந்தும் அப்படி வனத்துறையின ரும், அரசியல் வாதிகளும் தலையிடவே இல்லையா? அப்படித் தொடர்பிருக்கும் பட்சத்தில் இவர்கள் இவ்வளவு அட்டூழியங்களுக்குப் பலியாவார்களா? ஜெயலலிதாவையே விலை பேசிவிட மாட்டார்களா?

அதிகாரிகள், வியாபாரிகள், அரசியல் வாதிகள் நேரடியாக கூட்டுச் சேர்ந்துவரும் சந்தன மரக் கடத்தலை மூடிமறைப்பதற்கு கணக்குக் காட்டும் வேலையாக அப்பாவிகளைப் பிடித்து உள்ளே தள்ளுகிறார்கள் என்று சந்தேகிக்க இடமில்லையா?

இதெல்லாம் ஒருபுறம் இருக்க உண்மையில் நடந்ததோ வேறு. ஒன்னரைக் கோடி ரூபாய் மதிப்புடைய சந்தன மரங்களை அரூர் வனச்சரக அதிகாரிகள் சட்டவிரோதமாக வெட்டி பின்னாளில் கடத்தி விற்பதற்காக வச்சாத்தி அருகே புதைத்து வைத்திருந்தனர். தற்செயலாய் அங்கு வந்த மொரப்பூர் சரக அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து வாச்சாத்தி ஆதிவாசிகள்மீது சந்தேகப்பட்டு அவர்களைக் கைது செய்ய முயன்றனர். அப்போது அரூர் வனச்சரக அதிகாரிகளின் கைவரிசைதான் இது என்று அம்பலப்பட்டுப் போனது. கடத்தல் பொருளை இழக்க வேண்டி நேர்ந்த ஆத்திரத்தோடு வாச்சாத்தி ஆதிவாசிகள் மீது அரூர் வனத்துறை அதிகாரிகள் பழிவாங்குவதற்காக நடத்தியதுதான் இந்தத் தாக்குதல்.

வீரப்பன் போன்ற மஃபியா கும்பலும் மந்திரிகள் உட்பட ஆளும் கட்சித் தலைவர்களும் காட்டிலாகா மற்றும் போலீசு அதிகாரிகளின் துணையோடு சந்தன மரங்களும் யானைத் தந்தங்களும் கடத்தி வருவது உலகம் அறிந்த செய்தி. இவர்களால் தங்களுக்கு வேலைசெய்து தரும்படி கிராம மக்கள் நிர்பந்திக்கப்படுகின்றனர்; வறுமையில் வாடும் மக்களில் ஒரு சிறுபிரிவு இவர்களுக்கு ஊழியஞ் செய்வதாகவும் இருக்கிறது. ஆனால் மலைப் பகுதிகளில் வாழும் கிராம மக்கள் அனைவர்மீதும் பலிபோட்டுத் தாக்குவது அட்டூழியம். இது தொடர்ந்து நடக்கிறது.

இதுபோன்ற சம்பவங்களும், தினந்தோறும் அதிகரித்துவரும் போலீசு நிலையக் கொட்டடிக் கொலைகள், கற்பழிப்புகளும் இந்த அரசு எந்திரம் முழுவதுமே சமூக விரோத கிரிமினல் - பாசிசமயமாவதையே காட்டுகின்றன. இந்தக் குற்றவாளிகளை சட்டபூர்வமான வழிகளில் தண்டிப்பதற்கான வாய்ப்பு எதுவும் கிடையாது என்பதையும் கூட இவை காட்டுகின்றன. எனவே உழைக்கும் மக்களும், அவர்களுக்குத் தலைமையேற்கும் அமைப்புகளும் நேரடியாக அதிகாரத்தை எடுத்துக் கொண்டு குற்றவாளிகளைத் தண்டிப்பதைத் தவிர வேறுவழியில்லை.

● ராசு

# கொலை வெறிபிடித்த பாசிசக் கரங்களுக்குள் மக்களை நேசித்த இன்னுமோர் மனிதன்!!

ஆம்! பொறியியலாளர் சேந்தன் புலிகளால் கைது! யார் இவர்?

வீண் ஆடம்பரங்களை கொண்டு தம்மை அறிமுகம் செய்யும் அற்பமான மனிதர்கள் வாழும் இந்த உலகில் எந்தவித வீணான ஆடம்பரங்களுமின்றி அடக்கமாக வாழ்ந்த ஓர் அற்புதப் பிறவி! மனித நேயமே மலடாகிப்போன எமது மண்ணில் மக்களை மனதார நேசித்த ஓர் மனித ஜீவன்.

மண்மீட்பு மண்மீட்பு என்ற பேரில், மறைந்து போன காட்டுமிராண்டித் தனங்களையெல்லாம் மீட்டெடுத்து மக்களை அழிக்கும் அரசியல் நிலவுகின்ற எமது மண்ணை உண்மையாக நேசித்த ஓர் உன்னதப் பிறவி.

விடுதலை, போராட்டம் என்ற பேரில் கோடிகோடியாக மக்களிடம் கொள்ளையிட்டு தாம்மட்டுமே சுகபோக வாழ்க்கையை அனுபவித்தபடி மக்களுக்கு கொலையையும், சித்திரவதைகளையும் மட்டுமே வழங்கும் வெறியர்கள் வாழும் மண்ணில், தனது உழைப்பு முழுவதையுமே தன் சக ஊழியர்களுடன் சமனாகப் பங்கிட்டு தானும் ஒரு சாதாரண தொழிலாளியாகவே வாழ்க்கை நடத்திய ஓர் அதிசய மனிதன். ஆம், மொத்தத்தில் இவர் உண்மை மனிதன்.

தமிழ் மண்ணில் குறிப்பாக வடக்கில் சீவல் தொழில் மூலம் கள்ளு இறக்குவதையே தம் ஒரே வருமானமாகக் கொண்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்விற்கு ஓர் மறைமுக ஆதாரசக்தியாக திரு. சேந்தன் அவர்கள் விளங்கினார் என்பது பலரும் அறியாத உண்மையாகும்.

எப்போதுமே வேற்றுனாட்டு தொழில்நுட்ப இயந்திரங்களை உபயோகிக்க பழகிப் போன எமது மக்களுக்கு தனது சொந்த அறிவையும் திறமையையும் பயன்படுத்தி எமது மண்ணின் மூலவளத்தையே பொன்னாக்கும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தவர் திரு. சேந்தன். திக்கம்,வரணி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் பனஞ்சாராய வடிசாலை இயந்திரங்கள் இவரின் சொந்த வடிவமைப்புக்களே! அவை இன்றுவரை வெற்றிகாரமாக இயங்குவதற்கும் இன்னும் பல இயந்திரங்களை வடிவமைப்பதற்கும் ஓய்வு ஒழிச்சலின்றி தன்சக ஊழியர்களுடன் கடுமையாக உழைத்தவர் திரு. சேந்தன்.

இந்த வடிசாலைகளை வெற்றிகரமாக தாங்களே நடத்துவதாக காட்டிக் கொள்ளும் புலிகள் இதிலிருந்து மட்டும் வருடத்திற்கு இருபது கோடி ரூபாக்களை இலாபமாக கொள்ளையிட்டு செல்கின்றனர் என்பது பலரும் அறியாத மிகக் கசப்பான உண்மையாகும்.

ஈரான், பிரான்சு, கனடா, இந்தியா போன்ற பல நாடுகளில் வேலை செய்த பின்னர் தனது சொந்த மண்ணில் செயல்படுவதே சரியானது என்ற இதயசுத்தியோடு நாடுதிரும்பிய இவர் யாழ்பாணத்தில் 'SKY LARK' என்னும் பொறியியற்சாலையை ஆரம்பித்து செயற்பட்டார். தற்போது அது 'EZHOVILLE' என்னும் பெயரில் இயங்கிவருகிறது. எப்போதும் எம் சொந்த மண்ணின் மூலவளங்களை வைத்தே தனது திட்டங்களை சிந்திக்கும் இவர் தன்னோடு தொழில் செய்த அனைவரையும் கூட அப்படிச் சிந்திப்பதற்குப் பழக்கினார்.

## ஆனால் இன்று புலிகளின் பட்டியலில் சேந்தன் ஒரு துரோகி!

எந்தவொரு கட்டத்திலும் தனது தனித்துவத்தையும் மனித மாண்பையும் இழந்துவிடாது கம்பீரத்துடன் சரியை சரியெனவும் தவறை தவறெனவும் நேருக்குநேர் சுட்டிக்காட்டிய நேர்மையுள்ளம் படைத்த இவரை இக் கொடியவர்கள் சந்தேகித்தது ஏன்?

எப்போதும் தங்களைவிட திறமையுள்ள தனித்துவமான ஆளுமையுள்ள எவரைக் கண்டாலும் சந்தேகித்து பீதியுற்று அவர்களை தீர்த்துக்கட்டும் செயற்பாட்டையே தமது கொள்கையாக் கொண்ட இக் கேடுகெட்ட கொடியவர்களுக்கு திரு. சேந்தனும் இன்று இரையாகி விட்டார்.

தமிழ்ப்புலமை பெற்ற திரு. பண்டிதர் வீரகத்தியின் மூத்த புதல்வரான இவர் மூன்று குழந்தைகளின் தந்தை, தனது கடுமையான உழைப்பினால் உடல்நலம் குன்றியவர். எந்த கடுமையான வேலைச் சுமைக்கு மத்தியிலும் தன் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது மனம்விட்டு பேசிமகிழும் ஒரு ஆழமான பாசமுள்ள தந்தை இவர்.

கடந்த சித்திரை மாதம் 14-ம் திகதி கற்சிலைமடுவில் வைத்து விசாரணைக்காக புலிகளால் கைது செய்யப்பட்டார். ஒன்றரை மாதங்களாகியும் விடுவிக்கப்படவோ எவருக்கும் காட்டப்படவோ இல்லை. இதுவரை அவரை விடுவிப்பது பற்றி தீர்க்கமாக புலிகளால் எதுவுமே கூறப்படவும் இல்லை. திரு. சேந்தன் அவர்களை அறிந்த, அவரை நேசித்த நெஞ்சிலே ஈரமுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து உரத்துக் கேட்கிறோம்.

புலிகளே எங்கள் சேந்தன் எங்கே!
உடனே அவரை விடுதலை செய்யுங்கள்!
அவரைப் போன்றே நீங்கள் அடைத்து வைத்திருக்கும்
ஆயிரக்கணக்கான மனச்சாட்சியின் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்.

*திரு. சேந்தன் அவர்களை அன்போடு நேசிக்கும் நண்பர்கள்* *01-06-92 ஈழம்*

படிப்பகம்

www.padippakam.com

# எம்.ஜி.ஆர். ஒரு புரட்டுத்தலைவர்!

## - ஒரு விசுவாசியின் வாக்குமூலம்

**முன்னாள் போலீசு பொது இயக்குனரான டி.ஜி.பி. மோகன்தாஸ் எழுதி வெளியிட்டுள்ள ''எம்.ஜி.ஆர்: மனிதனும் கட்டுக்கதையும்'' என்ற நூல், எம்.ஜி.ஆர் ஒரு பாசிஸ்டு, சேடிஸ்டுதான் என்பதை நிரூபிக்க மேலும் சில ஆதாரங்களைக் கொடுத்துள்ளது.**

ஜெயலலிதாவிடம் குறை காண்பவர்களில் மிகப் பெரும்பான்மையோரது குற்றச்சாட்டு ''அவர் எம்.ஜி.ஆரை இருட்டடிப்புச் செய்கிறார்; எம்.ஜி.ஆரின் புகழை மங்கச் செய்கிறார்; ஜெயலலிதாவின் இன்றைய நிலை, அதிகாரம், புகழ் எல்லாம் எம்.ஜி.ஆர் உருவாக்கிக் கொடுத்தவைதாம் என்பதை மறைக்க முயலுகிறார்; தனக்கென்று சொந்தச் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்; இதை நிரூபிப்பதற்காகத்தான் மதுரையில் மாநாடு கூட்டினார்'' என்று சொல்கின்றனர்.

''சுவரொட்டி, விளம்பரங்களில் எம்.ஜி.ஆர். படங்கள் போடப்படுவதில்லை; எம்.ஜி.ஆரின் மதிப்பைப் பெற்ற கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் ஒதுக்கப்படுகின்றனர். மதுரை மாநாட்டின் போது ஒரே ஒரு சிறிய எம்.ஜி.ஆர் ''கட்-அவுட்''தான் வைக்கப்பட்டது. ஜெயலலிதா பிறந்த நாளில் எம்.ஜி.ஆர் சமாதிக்கும் சிலைக்கும் போய் மரியாதை செலுத்தவில்லை; எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகள் வழி பேரன் திருமணத்திற்குப் போகவில்லை.'' இப்படி அடுக்கடுக்காக புகார்கள் கூறுகின்றனர்.

''இன்னும் ஒருபடி மேலே போய், ஜெயலலிதா ஆட்சியின் ஒவ்வொரு தவறுகளையும் சுட்டிக்காட்டும் போதும் எம்.ஜி.ஆராக இருந்தால் இப்படிச் செய்திருக்கமாட்டார்; தொண்டர்களை மதிக்கக் கூடியவர்'' என்கிற பாணியில் பேசுகின்றனர்.

பத்திரிகைகள், முக்கியமாக ஜெயாவை ஆதரித்து ஆட்சிக்குக் கொண்டு வந்தவைகூட இப்படித்தான் எழுதுகின்றன. கருணாநிதி, வீரமணி, ராமதாஸ், பிரபாகரன் போன்றவர்கள்கூட இந்தக் கருத்தையே பிரதிபலிக்கின்றார்கள்.

எம்.ஜி.ஆர் சாகும்வரை பாம்பும் கீரியுமாகக் கருணாநிதியுடன் அரசியல் நடத்தினார் என்பது எல்லோருக்கும் தெரியும்.




ஆனால் ஜெயலலிதா எதிர்க் கட்சிகளை இழிவாக நடத்தி ஒடுக்க முயலுவதைக் குறிப்பிடும்போது, ''ஆயிரம் இருந்தாலும் கருணாநிதியை எம்.ஜி.ஆர் மதிப்பும் மரியாதையோடும் நடத்தும் பெருந்தன்மை காட்டினார். எப்போதும் 'கலைஞர்' என்றுதான் குறிப்பிடுவார்; பெயர் சொல்லிக் கூட குறிப்பிட மாட்டார். அவரது குடும்பத்தினரது உடல்நலம் குறித்துப் பரிவோடு கலைஞரிடமே விசாரிப்பார்'' என்கிறார்கள். கருணாநிதியும் இதை உறுதி செய்து எம்.ஜி.ஆருடனான 40 ஆண்டுகால நட்பை அடிக்கடி நினைவு கூறுகிறார்

எம்.ஜி.ஆர் ஒரு பாசிஸ்டு, சேடிஸ்டு; கருணாநிதியின் ஆட்சி ஒரு முழு நிலவு என்றால் எம்.ஜி.ஆர் ஆட்சி ஒரு முழு இருட்டு; எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலம் 'பார்ப்பனர்களின் பொற்காலம்' என்றெல்லாம் எம்.ஜி.ஆர் வாழ்நாளில் எழுதினார் தி.க. வீரமணி. இப்போது தலை குப்புற மாறிப் பேசுகிறார். எம்.ஜி.ஆர் திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் இருந்து வழுவாதவர்; அவருக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது என்று இப்போது புளுகுகிறார். ஜெயலலிதாவின் குறைபாடுகளைப் பயபக்தியோடும், நன்றி விசுவாசத்தோடும் எடுத்துச் சொல்லும்போதும் கூட எம்.ஜி.ஆர். அப்படிச் செய்யவில்லை; இப்படிச் செய்யவில்லை என்று வீரமணி எழுதுகிறார்.

திராவிட இயக்க வாரிசுரிமை கோரிப் புதிதாகக் களத்தில் இறங்கியிருக்கிறரர் பா.ம.க. தலைவர் ராமதாஸ். இவரும் கூட கருணாநிதியைப் போல எம்.ஜி.ஆர். வன்னியர்களின் எதிரியல்ல. வன்னியர்களின் இட ஒதுக்கீடு கோரிக்கையை அக்கறையோடு கவனித்துத் தீர்க்க முயன்றார் என்று நற்சான்றிதழ் அளிக்கிறார், ராமதாஸ்.

விடுதலைப் புலிகளோ நன்றி விசுவாசத்தோடு எம்.ஜி.ஆரைப் புகழ்கின்றனர். எம்.ஜி.ஆர் மட்டும்தான் ஈழத்தமிழர் மீது உண்மையான பற்றும் பரிவும் காட்டினார்; மற்ற தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சுயநலத்தோடு, தமிழக அரசியலில் ஆதாயம் தேடிக் கொள்வதற்காக ஈழத்தமிழர் நலனைப் பரிகொடுத்தார்கள். எம்.ஜி.ஆரைத் தவிர தாங்கள் யாரையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறார்கள் புலிகள்.

''செத்தவன் எல்லாம் உத்தமன். அவனை விமர்சிப்பது நியாயமாகாது தர்மமாகாது'' என்கிற கேடுகெட்ட மரபு. எம்.ஜி.ஆர் ரசிகர்களின் ஆதரவைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சி - இவைதான் பத்திரிகைகளும், அரசியல் வாதிகளும் எம்.ஜி.ஆரைப் பற்றி இப்போது கூறி வருபவை.

நம் வாழ்நாளிலேயே நம் கண்முன்னே மிக மோசமான பொறுக்கி அரசியல் நாயகனை ஒழுக்கசீலனாக, உத்தமப் புருசனாக சித்தரிக்கிறார்கள். ''பாரத் ரத்னா'' முதற்கொண்டு பட்டங்கள் பல வழங்குவதும், நினைவகங்கள் அமைப்பதும், மாவட்டங்கள், கட்டிடங்கள், திட்டங்களுக்குப் பெயர் சூட்டுவதும் ஆளும் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளும் ஆதரிக்கின்றன. இப்படிச் செய்வது மிகப் பெரிய வரலாற்றுப் புரட்டாகும்.

இவர்கள் எல்லாம் கூறுவதைப்போல எம்.ஜி.ஆர் போற்றுதலுக்குரிய தலைவன் அல்ல என்பதற்குச் சில ஆதாரங்களைக் கொண்ட நூல் ஒன்றை எம்.ஜி.ஆரின் கண்ணும் காதும், கையுமாக இருந்து வேலை செய்த முன்னாள் போலீசுப் பொது இயக்குநர் டி.ஜி.பி. மோகன்தாஸ் எழுதி இப்போது வெளியிட்டுள்ளார்.

''எம்.ஜி.ஆர்.: மனிதனும் கட்டுக்கதையும்'' என்கிற அந்த நூலில் எம்.ஜி.ஆரைப் பற்றிய முழுமையான, சரியான மதிப்பீட்டை மோகன்தாஸ் எழுதியிருக்கிறார் என்று கூற முடியாது. அவருக்குத்

படிப்பகம்

www.padippakam.com

தெரிந்தவற்றில் கால்பங்கு உண்மைகளைக்கூட எழுதவில்லை. அதற்குக் காரணம் மோகன்தாஸ் இன்னமும் எம்.ஜி.ஆர் மீது வைத்திருக்கும் ஓரளவு நன்றி விசுவாசம்; எல்லாவற்றையும் சொன்னால் தானும் வம்பில் மாட்டிக் கொள்வோம் என்கிற பயம்.

எம்.ஜி.ஆர். - ஒழுக்கத்திலே உத்தம சீலன்; அறிவிலே சுத்தம் - சுயம்பிரகாசம்; நிர்வாகத்திலே திறமைசாலி இல்லையானாலும் நல்லாட்சி வழங்கியவர்; மனித நேய மாண்பு மிக்கவர்; வீரத்திலே அஞ்சா நெஞ்சன் இப்படி எம்.ஜி.ஆர் தன்னைக் காட்டிக் கொண்டதெல்லாம் சினிமாவைப் போலவே வெறும் வேஷம், கட்டுக்கதை.

எம்.ஜி.ஆர் - ஒரு பெண் பித்தன்; பெண்களுடன் கள்ள உறவு வைத்திருந்தவர்; சூழ்ச்சித்திறன் நிறைந்தவரே தவிர ஞானசூனியம் தான்; சுயநல வெறியர், விளம்பரப் பிரியர். இரட்டை வேடம் போடுபவர்; முரண்பாடுகளின் மூட்டை; தனது எதிரிகளை மட்டுமல்ல தனது கூட்டாளிகளையும் வைப்பாட்டிகளையுமே சந்தேகிக்கும் அற்ப மனிதர்; அடிப்படையில் ஒரு கோழை,தனது போலித் தோற்றத்தைக் காத்துக் கொள்வதிலேயே குறியாக வாழ்ந்தவர்.

இத்தனையும் எழுதி சான்றுகள் தரும் மோகன்தாஸ் இந்த இழிகுணாங்கள் அருவெறுக்கத்தக்கவை என்கிற கோணத்தில் எம்.ஜி.ஆரை மதிப்பீடு செய்யவில்லை. இவை மெச்சக்கூடியவைதாம் என்றே நன்றியுடன் எம்.ஜி.ஆரை மதிப்பீடு செய்துள்ளார்.

மோகன்தாஸின் நூலில் காணப்படும் தகவல்களில் சிலதாம் பின்வருபவை.

☆ எம்.ஜி.ஆர் சினிமா, அரசியல் நிர்வாகம், சொந்த வாழ்க்கை ஆகிய எல்லாவற்றிலுமே நடிகராகவே இருந்து இரட்டை வேடம் போட்டார். எல்லாவற்றிலுமே தனது கவர்ச்சி, சுயநலம் இரண்டிலுமே குறியாக இருந்தார். தனது இரகசியங்களைப் பாதுகாப்பதில், தன்னைத் தவிர வேறு யாரையும் நம்பாததில், தன்னைப் பற்றி ஒரு போலித் தோற்றத்தை உருவாக்கிக் காத்து வருவதில்தான் மிகமிக அக்கறை செலுத்தினார். தனது சுயநலனுக்குச் சிறுதடை ஏற்பட்டாலும் ஆத்திரமடைந்தார். அவர் ஓர் அதீதமான அளவு ஆணவக்காரர்; செருக்குடையவராக இருந்தார். சினிமா, அரசியல், நிர்வாகம் எல்லாவற்றிலுமே சூழ்ச்சித் திறமையோடு நடந்து கொண்டார்.

☆ எம்.ஜி.ஆர் அடிப்படையில் ஒரு காந்தீயவாதி; கடவுள் நம்பிக்கையுடையவர் அதாவது கொள்கையில் அவர் ஒரு காங்கிரசுக்காரர். அவருடைய திட்டத்தில் சுயநலமே முதன்மை இடம் பெற்றது. ஆகவே அன்றைய நிலையில் பகுத்தறிவு, இந்தி எதிர்ப்பு, பிரிவினைவாதக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்துவந்த தி.மு.க. ஒரு வளரும் சக்தி என்பதையும், காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்கிற மக்கள் விருப்பத்தையும் கண்ட எம்.ஜி.ஆர். தி.மு.க.-வில் இணைந்தார்.

☆ எம்.ஜி.ஆர் தன்னோடு நடித்த நடிகைகளை வைப்பாட்டிகளாக வைத்திருந்தார் என்பதை நாகரிகமான முறையில் மோகன்தாஸ் எழுதுகிறார். ஆனால் ஒரு சமயத்தில் ஒரு வைப்பாட்டிதான் வைத்திருந்தார்,அதை மறைக்கவும் முயலவில்லை என்பதை யோக்கியமான காரியமாக எழுதுகிறார். ஜெயலலிதாவும் அப்படிப்பட்ட வைப்பாட்டிதான் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடும் மோகன்தாஸ், ஜானகி மற்ற சக்களத்திகளை நட்புறவோடு ஏற்றுக்கொண்ட அதே சமயம் ஜெயலலிதாவை வெறுத்தார்; இருவருக்கும் இடையிலான சக்களத்திச் சண்டையை எம்.ஜி.ஆர் ரசித்தார் என்கிறார். தனது வைப்பாட்டிகள் தனக்கு மட்டுமே விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் குறியாக இருந்தார்.

☆ எம்.ஜி.ஆர் அரசியல் கோழைத்தனமும், கற்றுக்குட்டித்தனமும் நிறைந்தவர் என்பதற்குச் சில உதாரனங்கள் தருகிறார் மோகன்தாஸ். பிற்பட்ட சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பு நிர்ணயித்து உத்திரவு போட்ட எம்.ஜி.ஆர், போராட்ட அலை எழுந்ததும் அந்த உத்திரவை விலக்கிக் கொண்டதோடு, இட ஒதுக்கீட்டு அளவையும் உயர்த்தினார். அ.தி.மு.க.-வையும் தி.மு.க.-வையும் இணைக்கும் முயற்சியை பிஜுபட்நாயக் மேற்கொண்டுவிட்டுச் சென்ற சிலமணி நேரங்களிலேயே ''பல்டி'' அடித்து இணைப்புக்கு மறுத்துவிட்டார். தஞ்சை இடைத் தேர்தலில் இந்திராவை நிறுத்தி ஆதரிப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு அன்றைய பிரதமர் மொரார்ஜி கூப்பிட்டு மிரட்டியதும் பின்வாங்கிவிட்டார்.



# யார் இந்த மோகன்தாஸ்?

தன் நிழலைக்கூட நம்பாத பாசிஸ்டு எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் உரியவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மோகன்தாஸ், அவரது சாதிக்காரரும் ''இன''த்துக்காரருமாவார். எம்.ஜி.ஆரின் ''அதிகாரபூர்வமில்லாத'' உண்மையான, நிழல் முதலமைச்சராக அதிகாரம் படைத்திருந்தவர்தான் மோகன்தாஸ். ஆனால் இறுதிநாட்களில் எம்.ஜி.ஆரின் சந்தேகத்துக்குப் பலியாகித் துரத்தியடிக்கப்பட்டார்.

சந்தேகப் பிராணி எம்.ஜி.ஆருக்காக அவரது மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள் கட்சிக்காரர்களை மட்டுமல்ல, அவரது வைப்பாட்டிகளையும் உயர்நீதி மன்ற நீதிபதிகளையுமே வேவுபார்த்தவர்தான் மோகன்தாஸ். எம்.ஜி.ஆரின் சொத்துக்களை நிர்வகித்தவர்களைப் பொறுக்கி எடுத்து மேற்பார்வையிட்டவர். எம்.ஜி.ஆரின் பாசிசக் கட்டளைகளை ஏற்றுப் பல்வேறு மக்கள் இயக்கங்களை ஒடுக்கிய வர். குறிப்பாக வடாற்காடு, தர்மபுரி நக்சல்பாரிப் புரட்சியாளர்களை வால்டர் தேவாரத்தோடு சேர்ந்து படுகொலைகள் செய்வதற்குச் சதிசெய்து நிறைவேற்றியவர்.

ஒரே சமயத்தில் எம்.ஜி.ஆர், மத்திய உளவுப் படை, சி.ஐ.ஏ, சிங்கள உளவுப்படை ஆகியவற்றின் ''கைக்கூலியாக''ச் செயல்பட்டவர்தான் இந்த மோகன்தாஸ். ஈழப்போராளிகளின் ஆயுதங்களைக் களைவதற்கு, எம்.ஜி.ஆர் போட்ட உத்திரவைப் பயன்படுத்தியதோடு மோகன்தாஸ் அவர்களைப் புகைப்படங்களும் வீடியோக்களும் எடுத்ததால்தானே அவை சிங்கள உளவுப் படைக்குக் கிடைத்திருக்கின்றன? ஈழப் பிரச்சினையில் இந்திய உளவுப் படைகளின் பங்கு பற்றி எழுதும் இவர், ''ரா''வின் டி.ஐ.ஜி. உண்ணிக் கிருஷ்ணன் சி.ஐ.ஏ. ஏஜென்ட் எனக் கைது செய்யப்பட்டது பற்றியும், அவர் ஈழப் போராளிகள் பற்றிய இரகசியங்களை சி.ஐ.ஏ. மூலம் சிங்கள உளவுப் படைக்கு அளித்தார் என்பதையும் பற்றி வாய் திறக்கவில்லை. மோகன்தாஸின் சிங்கப்பூர் இரகசியப் பயணத்தைத் தொடர்ந்துதான் எம்.ஜி.ஆர் இவருடனான உறவை முறித்துக் கொண்டு துரத்தியடித்தார் - இவையெல்லாம் மோகன்தாஸ் பற்றிய மேற்கண்ட மதிப்பீட்டிற்கான காரணங்களாக உள்ளன.

எவ்வளவு விசுவாசத்தோடு நடந்து கொண்டும் எம்.ஜி.ஆர் தன்னைப் பழிவாங்கிவிட்டார் என்கிற கோபமும், எம்.ஜி.ஆரைவிட தான் அறிவாளி என்று நிலைநாட்டும் முயற்சியும், ஈழப் பிரச்சினையில் தான் எப்போதும் சரியாக இருந்ததாகக் காட்டிக் கொள்ளும் எத்தனிப்பும் இவரது நூலில் அப்பட்டமாகவே தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



☆ ஈழப் பிரச்சினையை இன்னொரு வங்கதேசப் பிரச்சினையாக்குவதற்குத் திட்டமிட்டு இந்திரா - ராஜீவ் ஆட்சியினர் செயல்பட்டனர். இதில் எம்.ஜி.ஆருக்கும் உடன்பாடு இருந்தது என்பது மோகன்தாஸ் பல தடவை மத்திய அரசின் கொள்கைக்கு ஆட்சேபம் தெரிவித்தபோதும் ஏற்க மறுத்ததில் இருந்து தெரிகிறது. ஈழப் போராளிகளுடன், குறிப்பாக பிரபாகரனுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொண்டு தேவையான பொழுது மத்திய அரசுக்கு எதிரான துருப்புச் சீட்டாக அதைப் பயன்படுத்த எம்.ஜி.ஆர் முயன்றார். ஆனால் எம்.ஜி.ஆர். உடல் நலம் குன்றியிருப்பது, அவருடைய மருத்துவத்துக்கு உதவியது, அவருடைய லஞ்ச - ஊழல் இரகசியங்கள் ஆகியவை காரணமாக மத்திய அரசு அதைப் பொருட்படுத்தவில்லை.

அதேசமயம் ராஜீவ் உத்திரவு போட்டதும், மோகன்தாஸுடன் சேர்ந்து சதிசெய்து போராளிகளை நிராயுதபாணிகளாக்கினார், எம்.ஜி.ஆர். பெங்களூரில் ஜெயவர்த்தனாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சமரசத்துக்கு வரும்படி பிரபாகரனை நிர்ப்பந்தித்தார். பேச்சுவார்த்தை முறிந்து போனதும் ஆத்திரமடைந்து, போராளிகளின் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பறிமுதல் செய்தார்; இந்தப் பறிமுதல் தனக்குத் தெரியாமல் நடந்தது என மத்திய அரசு கை விரிக்கவே, அதற்கும் ஆத்திரமடைந்து தகவல் தொடர்பு சாதனங்களோடு ஆயுதங்கள் அனைத்தையும் திருப்பித் தர உத்திரவு போட்டார். அதன் பிறகு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பிரபாகரனிடம் உடன்பாடு பெறவில்லை என்பதற்காக ஒரு வருத்தம் இருந்தாலும் இந்திய இராணுவத்தின் ஈழப் போரை எதிர்க்கவில்லை.

★ எம்.ஜி.ஆர். தனது கட்சித் தொண்டர்கள், எம்.எல்.ஏ.-க்கள், மந்திரிகள் முதற்கொண்டு யாரையும் மதித்ததும் கிடையாது, நம்பியதும் கிடையாது. அவர்கள் மீது எப்போதுமே சந்தேகத்தோடுதான் நடந்து கொண்டார். அவர்களின் பதவிகளைப் பறிப்பதும் கொடுப்பதும் என்று எப்போது வேண்டுமானாலும் பந்தாடினார். மோகன்தாஸைக் காட்டியே மிரட்டிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவர்கள் எப்போதும் தன் தயவிலேயே இருக்கும்படி செய்தார். நிர்வாகம் நிலைகுலைந்து போய் கோப்புகள் தேங்கிக் கிடப்பதை அறிந்தும் சினிமாவைப் பற்றி மந்திரிகளுடன் அரட்டை அடிப்பதும், தனது பழைய சினிமாக்களையே போட்டுப் போட்டுப் பார்த்து காலங்கழிப்பதிலும், விருந்துண்டு திளைப்பதிலும் காலத்தைப் போக்கினார்.

— இப்படிப்பட்ட இழிகுணங்கள் கொண்ட எம்.ஜி.ஆரின் புகழை இருட்டடிப்புச் செய்வதாகத்தான் பலரும் கூக்குரல் எழுப்புகின்றனர். எம்.ஜி.ஆரின் "உடன் கட்டை" எனத் தன்னைக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதாவோ, அந்த உறவை மூடி மறைப்பதற்காக இப்போது முயற்சிக்கிறார். ஆனால் அரசியலுக்கு மட்டுமல்ல மேற்கண்ட இழிகுணங்களுக்கும் தானே எம்.ஜி.ஆரின் வாரிசு என்பதை நடைமுறையில் நிரூபித்து வருகிறார்.

என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு சினிமாவில் புதிர் போட்டு விடை சொல்வதைப் போன்றதுதான் இது. ஒரு கோடு வரைந்து அதை அழிக்காமல் சிறியதாக்குவது எப்படி? அருகே ஒரு பெரிய கோடு போட்டால் அதோடு ஒப்பிடும்போது பழைய கோடு சிறியது தானே! அதே போலத்தான் கருணாநிதியோடு ஒப்பிடும்போது எம்.ஜி.ஆர் மோசமான ஆட்சியாளராக இருந்தார். இப்போது ஜெயலலிதாவோடு ஒப்பிடும்போது எம்.ஜி.ஆர் நல்லவராகத் தெரிகிறார். உண்மையில் எம்.ஜி.ஆரும் ஒரு பாசிஸ்டு, சேடிஸ்டுதான். அதை நிரூபிப்பதற்கு இந்த நூல் மேலும் சில ஆதாரங்களைத் தருகிறது.

○ ஆர்.கே.

# உறுதிகுன்றா தோழர் வழியில் புரட்சிப் பணியை தொடர்வோம்

நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் ரெங்கநாதன் - திருவெண்ணை நல்லூர் காரப்பட்டு கிராமத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணியில் செயல்பட்டவர். இறந்த பின்னும் சாதியக் கொடுமைக்கு எதிராக போராடியவர்! தோழர் பற்றி ஏற்கனவே புதிய ஜனநாயகத்தில் எழுதியுள்ளோம். கடந்த 3.7.92 அன்று தோழருடைய முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி காரப்பட்டு கிராமத்தில் ஒரு முத்திரை பதிக்கும் வண்ணம் இருந்தது.

மாட்டு வண்டியில் தோழர் ரங்கநாதன் முஷ்டி உயர்த்தியபடி உள்ள 'கட்-அவுட்'டும் அதற்குப் பின்னே சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் என வரிசையாக அணிவகுத்தும் இருந்த ஊர்வலம் காரப்பட்டிலிருந்து புறப்பட்டது. ராணுவ இசை முழங்க சென்ற ஊர்வலத்தில் சில தோழர்கள் வீர விளையாட்டு விளையாடி சென்றனர். ஊர்வலத்திற்கு தோழர் ஏழுமலை தலைமை தாங்கினார். தனியாலம்பட்டு, குமாரமங்கலம், அரசூர், இருவேல்பட்டு வழியாக வந்தபொழுது ஆங்காங்கே மக்கள் ஊர்வலத்தில் கலந்துக்கொண்டனர். ஊர்வலம் இரவு 7 மணக்கு தோழர் ரெங்கநாதனின் கல்லறையை அடைந்து பிறகு அங்கிருந்து பொதுக்கூட்டத் திடலை நோக்கி புறப்படும்பொழுது 500-க்கும் மேற்பட்டவர்கள் ஊர்வலத்தில் பங்கேற்றிருந்தனர். தோழர் ரெங்கநாதன் கல்லறையில் மங்கலம் வி.வி.மு. தோழர் சுப்பிரமணியன் தலைமையில் உறுதியேற்பும் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இடையில் அரசூரில் தோழர் ரெங்கநாதன் நினைவு நிழற்குடை திறக்கப்பட இருந்தது. ஆனால் இடத்திற்கு பின்னால் உள்ள நிலத்துக்குரிய ஒரு நடுத்தர விவசாயி மறுப்பு தெரிவித்ததால் அப்பணி முடியவில்லை. எனினும் அவ்விவசாயி உடன் சுமுகமாக பேசி கட்டி முடிப்பதில் உறுதியாக உள்ளோம் என்பதையும் தோழர் ரெங்கநாதனின் தியாகத்தையும் தோழர் காளியப்பன் விளக்கிப் பேசினார்.

தோழர் நாராயணன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஜெகதீசன் (புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி), சுப்பிரமணி (தொழிலாளர் பிரச்சாரக் குழு - நெய்வேலி), மருதையன் (மக்கள் கலை இலக்கியக் கழக மாநிலச் செயலர்) ஆகியோர் உரை நிகழ்த்தினர். "ஒருவர் புரட்சியாளராக மாறுவது வியப்பில்லை. ஆனால் கடைசி வரை புரட்சியாளராகவே இருப்பதுதான் பெரும் சாதனை" என்று மாவோ கூறியதை நினைவூட்டி தோழர் ரெங்கநாதனின் தியாகத்தையும் அரும்பணிகளையும் எளிமையாக - விரிவாக தோழர் மருதையன் தமது சிறப்புரையில் எடுத்தியம்பினார்.

இந்நிகழ்ச்சி பிற அரசியல் கட்சிகளின் முன்னணியாளர்கள் உட்பட பலருக்கு வியப்பைக் கொடுத்தது. மக்கள் கவனத்தை ஈர்த்து சிறந்த வரவேற்பை பெற்றது. "இந்தளவிற்கு எளிமையாகவும் சிறப்பாகவும் இருக்கும் என எதிர்பார்க்கவில்லை" என பலர் கூறியது குறிப்பிடத்தக்க ஒன்று. தகவல்:-

*வி.வி.மு., திருவெண்ணை நல்லூர்*

படிப்பகம்

www.padippakam.com

குஜராத்:

# இந்துவெறியர்களின் இரத்த யாத்திரை

இந்து வெறியர்களுக்கு மதக் கலவரங்கள் அரசியல் ஆதாயத்துக்கான முக்கிய துருப்புச்சீட்டு. இதர பிரச்சினைகளை முன்வைத்து மக்களை அணிதிரட்டுவதில் அவர்கள் தோல்வியடையும்போது, மத வெறித் தீயைப் பற்றவைக்க அவர்கள் தயங்குவதில்லை. போதாக்குறைக்கு அவர்களோடு பிழைப்புவாத ஓட்டுக் கட்சித் தலைவர்களும் போலீசும் கள்ளச் சாராய மாஃபியா குண்டர்களும் கைகோர்த்துக் கொண்டுவிட்ட பிறகு மதவெறித் தீயின் உக்கிரத்தைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. கடந்த ஜூலை மாதத் துவக்கத்தில் குஜராத் மாநிலத்தில் மூண்ட மதவெறித் தீ 40-க்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டது. 300-க்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர். பல லட்சக்கணக்கில் சொத்துக்கள் நாசமாயின. 1985-க்குப் பிறகு நடந்த மிகக் கோரமான கலவரம் இது என்று அரசியல் பார்வையாளர்கள் அறுதியிடுகின்றனர்.

குஜராத்தில் ஆண்டுதோறும் ஜெகன்னாத் ஆலயத்தை நோக்கி ரதயாத்திரைகள் நடப்பது வழக்கம். இந்து வெறியர்கள் இதைச் சாதமாக்கிக் கொண்டு, முஸ்லிம்கள் நிறைந்த காலுப்பூர், தாரியாப்பூர், ஷாப்பூர் முதலான பகுதிகளின் வழியாக யாத்திரை செல்வது, முஸ்லிம்களுக்கு எதிரான ஆத்திரமூட்டும் கோஷங்களை எழுப்புவது என்பதை நடைமுறையாகக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ரதயாத்திரையின் போது சிறுசிறு மோதல்கள் நடப்பதும் வழக்கம். "குஜராத்தை குட்டி பாகிஸ்தானாக்க முஸ்லிம்கள் முயற்சிக்கிறார்கள்; பாகிஸ்தானிலிருந்து போதை மருந்து கடத்தி வருகிறார்கள்; பாகிஸ்தானின் ஏஜண்டுகளாகச் செயல்படுகிறார்கள்" என்று ஆத்திரமூட்டும் அவதூறுப் பிரச்சாரம் செய்தும், முஸ்லிம்கள் நிறைந்த பகுதியில் ரதயாத்திரை செல்லும்போது பாதைகளில் கங்கை நீரைத் தெளித்து புனிதப்படுத்துவதாகக் கூறியும் இம்முறை மதவெறியைக் கிளறிவிட்டனர்.

வறட்சி நிலவும் சௌராஷ்டிரா வட்டாரத்தில் விவசாயிகளைத் திரட்டி பாரதீய ஜனதா நடத்திய போராட்டங்கள் தோல்வியடைந்துவிட்டன. அதன் பிறகு தனது மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி. மூலம் கல்லூரி முறைகேடுகளை எதிர்த்தும், இட ஒதுக்கீட்டு கொள்கையை எதிர்த்தும் பாரதீய ஜனதா நடத்திய போராட்டங்கள் பிசுபிசுத்துப் போய்விட்டன. அண்மையில் காங்கிரசுக்கு கட்சி மாறிய ஆளும் ஜனதா தள(ஜி) கட்சியின் அரசியல் விபச்சாரத்தை எதிர்த்து அது நடத்திய சிறைபுகும் போராட்டமும் தோல்வியடைந்துவிட்டது. எனவேதான் ரதயாத்திரையைச் சாதகமாக்கிக் கொண்டு அது கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஆதாயமடையத் துடித்தது. ஏனெனில் நகராட்சி, உள்ளூராட்சித் தேர்தல்கள் செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ளன.

மறுபுறம், குஜராத்தின் முடிசூடா மன்னர்களாக உள்ள இந்து, முஸ்லிம் மாஃபியா குண்டர்கள் மதவெறியூட்டி ஏற்கனவே குஜராத்தைப் பிளவுபடுத்திவிட்டனர். தமது பகைமையைத் தீர்த்துக் கொள்ளவும் எதிர்த்தரப்பை முடமாக்கவும் அவர்களுக்கு இன்னுமொரு மதக் கலவரம் அவசியமாக இருந்தது.

வதந்திகளும் ஊகங்களும் மக்களைப் பீதியூட்ட, வெறுப்பும் வெறியும் இரு சமூகத்தினரையும் கவ்விக் கொள்ள, கலவரம் பற்றிக் கொள்ள ஒரு சிறு தீப்பொறிதான் தேவையாக இருந்தது. ரதயாத்திரையின் போது எங்கிருந்தோ ஒரு கல் வந்து விழுந்ததாக வதந்தி பரவியதும் அதுவே கலவரம் மூளக் காரணமாக அமைந்துவிட்டது. 16,000 மாநில போலீசார், 12 கம்பெனி மத்திய ரிசர்வ் போலீசு, 102 கூரைகளில் தொலை நோக்கிக் கண்ணாடியுடன் ஆயுதப் போலீசு, 23 கண்காணிப்பு மேடைகள், ஒயர்லெஸ் வாகனங்கள், ஹெலிகாப்டர் ரோந்து, யாத்திரையில் பங்கேற்கும் வாகனங்களில் தீவிர சோதனை என பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும்கூட கலவரம் பற்றிக் கொண்டு 4 நாட்களுக்கு நீடித்தது.

பக்தர்களுக்கு பிரசாதங்களை வழங்குவதாகக் கூறிக்கொண்டு, லாரிகளில் கற்களையும் ஆயுதங்களையும் மறைத்துக் கொண்டு இந்து வெறியர்கள் ரத யாத்திரையில் ஊடுருவினர். அந்த வாகனங்களைச் சோதனையிடாமல் போலீசாரும் உடந்தையாகி நின்றனர். முஸ்லிம் குடியிருப்புகள் - கடைகள் மீது இந்து வெறியர்கள் அந்த 'பிரசாத' வண்டியிலிருந்து தாக்குதலை ஆரம்பித்ததும், ஏற்கனவே திட்டமிட்டபடி இந்து மாஃபியா குண்டர்கள் சுற்றுப்புற பாதைகளிலிருந்து தாக்குதலை தீவிரப்படுத்தினர். ஆசிட் பல்புகள், சோடா பாட்டில்கள், நாட்டு வெடிகுண்டுகளுடன் இந்து வெறியர்கள் தாக்கத் தொடங்கினர். கலவரம் மூண்டதும் போலீசு ஓடி ஒளிந்துக் கொண்டது. பெட்ரோல் ஊற்றி வாகனங்களும் கடைகளும் எரிக்கப்பட்டன. கத்திக்குத்துக்களும், கொலைகளும் சர்வசாதாரணமாக நடந்தன.

அறிவின் இடத்தை வெறி ஆக்கிரமித்துக் கொண்டது. ஆட்டோ ரிக்ஷாவில் பயணம் செய்து கொண்டிருந்த முஸ்லிம் குடும்பத்தினரை வழிமறித்து ரிக்ஷாவோடு உயிரோடு எரித்தனர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் பணியாற்றும் ஒரு முஸ்லிம் அதிகாரி அடித்துக் கொல்லப்பட்டு மூன்றாவது மாடியிலிருந்து தூக்கி வீசப்பட்டார். பெண்கள் - குழந்தைகள் என்றும் பாராமல் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டு வீதிகளில் வீசியெறியப்பட்டனர். கலவரம் மெதுவாக தணியத் துவங்கியதும் ரதயாத்திரைக்கு உரிய பாதுகாப்பு தரப்படவில்லை என்று பாரதீய ஜனதா கடையடைப்புப் போராட்டத்தை நடத்தியது. இதை முஸ்லிம்கள் எதிர்த்ததால் ஷாப்பூரில் மீண்டும் கலவரம் மூண்டு மூவர் பலியாகினர்.

கடைசியில், பாரதீய ஜனதா எதை எதிர்பார்த்ததோ, அதைச் சாதித்துக் கொண்டுவிட்டது. இதர கட்சிகளில் சிதறிக் கிடந்த இந்துக்களை தன்பக்கம் திரட்டிக் கொள்வதில் பாரதீய ஜனதா தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளதாக குஜராத்திய ஏடுகள் கூறுகின்றன. வழக்கம் போலவே எல்லா ஓட்டுக் கட்சிகளும் கலவரத்தைக் கண்டித்து மதச் சார்பின்மை ஒப்பாரி வைத்தன. ஆனால் தமக்கும் மதவெறி மாஃபியா கும்பலுக்கும் உள்ள கள்ள உறவை அறுத்தெறியவோ, இந்து வெறியர்களைப் பகிரங்கமாக எதிர்க்கவோ அவை ஒருபோதும் முன்வரவில்லை. அவ்வாறு ஏதாவது செய்தால் இந்து ஓட்டுக்களை இழக்க நேரிடும் என்று அவை அஞ்சுகின்றன. ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனமும், பெருகிவரும் இந்து வெறியர்களின் அட்டூழியங்களும் குஜராத்தை இன்னுமொரு உத்திரபிரதேசமாக வேகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

● *மனோகரன்*

கலவரத்தைத் தொடர்ந்து ஆயுதங்களுடன் இந்து வெறியர்கள் நடத்தும் கடையடைப்பு - கண்டன ஊர்வலம்: ஆத்திரமூட்டும் நடவடிக்கை.



படிப்பகம்

www.padippakam.com



## சுற்றுச்சூழல் - உயிரியல் மாநாடு

# ஆடுகள் மீது பழிபோடும் நரிகள்

பெருத்த ஆரவாரத்துடன் நடந்த சுற்றுச் சூழல் உயிரியல் மாநாடு கடைசியில் பெருந் தோல்வியில் முடிந்துவிட்டது. பல்வேறு பிரச்சினைகளில் பணக்கார ஏகாதிபத்திய நாடுகளும் ஏழை நாடுகளும் முரண்பட்டு நின்றதால் உடன்பாட்டுக்கு வர முடிய வில்லை. குறிப்பாக உயிரியல் சக்திமாற்றம் (Bio - diversity) காடுகளைக் காப்பது, சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான தொழில்நுட்பத்தை அனைத்து நாடுகளும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது முதலான ஒப்பந்தங்களில் ஏகாதி பத்திய நாடுகள் கையெழுத்திட மறுத்தன. உலகின் பொதுக் கருத்து, நிர்ப்பந்தம் காரண மாகவும், உலக நாடுகளிடம் அம்பலப்பட்டு தனிமைப்படுவதைத் தவிர்க்கவும் நீண்ட இழுபறிக்குப் பின்னரே இந்நாடுகள் ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டன. ஆனாலும், அமெரிக்க வல்லரசு உயிரியல் சக்திமாற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட பிடிவாதமாக மறுத்துவிட்டது.


ஒருசில ஒப்பந்தங்களில் அமெரிக்கா கையெழுத்திட மறுத்தாலும், பெரும்பா லான ஏகாதிபத்திய நாடுகள் கடைசி நேரத் தில் ஒப்பந்தத்தை ஏற்று கையெழுத்திட்ட தைக் காட்டி, இதுவே மாநாட்டிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக சுற்றுச் சூழல்வாதிகள் சித்தரிக்கிறார்கள். ஏகாதிபத் தியங்களைப் பணியவைத்து விட்டதாக ஏழைநாடுகள் பெருமைப்பட்டுக் கொள்கின் றன. ஆனால் இந்த ஒப்பந்தங்களால் உண் மையில் ஏகாதிபத்திய நாடுகள்தான் ஆதாய மடைந்துள்ளன. ஏழை நாடுகள் மீண்டும் வஞ்சிக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, உயிரியல் சக்திமாற்ற ஒப்பந்தம் என்பது மோசடியானதும், ஏழை நாடுகளை ஏகாதிபத்தியங்களுக்கு மீண்டும் அடிமைப்படுத்துவதாகும். உயிரியல் சக்தி மாற்றம் என்றால் என்ன? சுற்றுச்சூழல் நஞ் சாவதால் ஏற்படும் பாதிப்புகளை, இயற்கை வளங்களையும் உயிரியல் வளங்களையும் பாதுகாப்பதன் மூலம் ஈடுசெய்வதாகும்.

இத்தகைய இயற்கைவள மூலாதாரங் கள் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலேயே அதிகமாக உள் ளது. ஆனால் இத்தகைய இயற்கை வளத் தைப் பாதுகாக்கவும் விரிவுபடுத்துவதற்கு மான தொழில்நுட்பம் ஏகாதிபத்தியங்களி டம் உள்ளது. ஏழைநாடுகள் இத்தொழில் நுட்ப அறிவைப் பெற்றுவிடக்கூடாது என்ப தாலேயே உயிரியல் சக்திமாற்ற ஒப்பந்தத் தில் கையெழுத்திட ஏகாதிபத்திய நாடுகள் பிடிவாதம் செய்து பின்னர் ஏற்றுக் கொண டன. தற்போதைய ஒப்பந்தப்படி, ஏகாதிபத் திய நாடுகள் ஏழைநாடுகளுக்கு தொழில் நுட்ப அறிவைக் கொடுத்து உதவ வேண் டும். தோற்றத்தில் இது ஏகாதிபத்தியங்களுக் குப் பாதகமானதாக இருந்தாலும், உண்மை யில் இதன் மூலம் ஏழைநாடுகளின் விவசா யத் துறையில் ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்த இன்னுமொரு வாய்ப்பாகிவிட்டது.

ஏனெனில் உயிரியல் சக்திமாற்ற ஒப் பந்தத்தில் வெறுமனே காடுகள், அரிய விலங்கினங்களையும் பறவையினங்களை யும் பாதுகாப்பது பற்றித்தான் குறிப்பிடப்ப டுள்ளதே தவிர, விவசாயத்தையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதைப் பற்றி எது வுமே குறிப்பிடவில்லை. அதாவது, காடு கள், அரிய விலங்கினங்களைப் பாதுகாப்ப தற்கான பரஸ்பர தொழில்நுட்ப பரிமாற்றத் தைத்தான் ஏகாதிபத்திய நாடுகள் செய்யும். விவசாயம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான எந்த உதவியும் அவை செய்யாது. ஆனால் உயிரியல் சக்திமாற்றத் தில் முக்கிய பங்கு வகிப்பது விவசாயம் தான். விவசாயத் துறையை இந்த ஒப்பந்தத் தில் சேர்க்காததன் மூலம், வழக்கமான தமது கொள்ளையையும் ஆதிக்கத்தையும் தொடர ஏகாதிபத்தியங்கள் வழிவகை செய்து கொண்டுள்ளன.

அமெரிக்காவின் கோதுமை விவசா யத்தில் ஐந்தில் ஒரு பங்கு மெக்சிகோ நாட் டின் விதைகளைச் சார்ந்தே உள்ளது. உயிரி யல் சக்திமாற்ற ஒப்பந்தத்தில் விவசாயமும் சேர்க்கப்பட்டிருந்தால், அது மெக்சிகோ வுக்கு சாதகமாயிருக்கும். அதன் மூலம் மெக் சிகோவின் சுயசார்பும் ஓரளவு காப்பாற்றப் பட்டிருக்கும். அதே போல, நவீனரக விதை களை அறிமுகப்படுத்தி ஏழைநாடுகளின் விவசாயத்தையே தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்துக்கு இந்த ஒப்பந்தம் தடையாக அமைந்திருக்கும். ஆனால், புதிய வகை உணவுதானிய பயிரினங்களை அறிமுகப்ப டுத்தி அவற்றை உரிமைப்பதிவு செய்து கொள்வது, அவற்றைப் பயன்படுத்துவோரி டம் ''ராயல்டி'' கோருவது என்கிற டங்கல் திட்டத்தை செயல்படுத்தும் நோக்கத்துடன் தான் ஏகாதிபத்தியங்கள் உள்ளன. எனவே தான் உயிரியல் சக்திமாற்ற ஒப்பந்தத்தில் விவசாயத்தையும், கால்நடைகளையும் சேர்க்கவிடாமல் திட்டமிட்டே தடுத்துள் ளன. கடைசியில், ஏகாதிபத்தியங்களுக்கு எதிரானது என்று கூறப்படும் இந்த ஒப்பந் தம் பல் பிடுங்கப்பட்ட பாம்பாகிவிட்டது.




இதுபோல காடுகள் பராமரிப்பு பற்றிய ஒப்பந்தமும் குறிப்பான எந்த முடிவுமின்றி பொத்தாம் பொதுவாக உள்ளது. ஏகாதிபத் திய நாடுகள் பெருமளவில் வெளியிடும் கார்பன் - டை - ஆக்ஸைடு முதலான நச்சு வாயுக்களை உறிஞ்சி சுற்றுச் சூழலை தூய் மைப்படுத்துபவை வெப்பமண்டலக் காடு கள்தான். எனவே காடுகளை சர்வதேச உட மையாக்கி அனைத்து நாடுகளும் சேர்ந்து பாதுகாத்து வளர்ப்பது என்ற திட்டத்தை ஏகாதிபத்தியங்கள் முன்வைத்தன. இதன்மூ லம் தம்மால் ஏற்பட்ட பாதிப்பை மற்ற நாடு கள் சுமக்க வேண்டுமென்றன. ஆனால் மலேசியா, கியூபா போன்ற நாடுகள் இது சுயசார்பைப் பறிக்கும் நடவடிக்கை என்று கடுமையாக எதிர்த்தன. கடைசியில், காடுக ளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுப் பது என்ற பொதுவான முடிவுடன்தான் ஒப் பந்தம் போடப்பட்டது.

தொடர்ந்து அதிகரித்துவரும் வாகனப் பெருக்கத்தாலும், ஆலைகளாலும் கார்பன் டை ஆக்ஸைடு முதலான நச்சுவாயுக்கள் காற்று மண்டலத்தை ஆக்கிரமித்து சுற்றுச் சூழலை நஞ்சாக்குகின்றன. மேலும் பூமியை குடைபோலக் காத்துவரும் ஓசோன் வாயு மண்டலமும் இதனால் பாதிக்கப்பட்டு பூமி மேலும் வெப்பமடைந்து பருவநிலை பாதிக் கப்படுகிறது. இதைத் தடுத்து நிறுத்த குறிப் பான எந்த முடிவுமின்றியே பருவநிலை பாதுகாப்பு ஒப்பந்தம் போடப்பட்டது. கி.பி. 2005-ம் ஆண்டுக்குள் தமது நாட்டில் 20% அளவுக்கு கார்பன் டை ஆக்சைடு போன்ற நச்சுவாயுப் பெருக்கத்தைக் குறைக்க ஏகாதி பத்தியங்கள் ஒப்புக் கொண்டன. ஆனால் இதேபோல ஏழை நாடுகளும் செய்ய வேண் டுமென நிர்ப்பந்தித்தன. ஏறத்தாழ 50 ஆண்டு களுக்கும் மேலாக நச்சு வாயுக்களை வெளி யிடும் ஏகாதிபத்தியங்கள் அதில் 20% அள வைக் குறைப்பதால் அவற்றுக்கு பாதிப் பில்லை. ஆனால் ஏழைநாடுகளும் அவ் வாறு செய்தால் அதன் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, நிரந்தமாகப் பின்தங்க நேரி டும். ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த நேரி டும். இதை பல ஏழைநாடுகள் எதிர்த்ததால், எந்த முடிவுமின்றி இந்த ஒப்பந்தமும் பிசுபி சுத்துப் போனது.

வாகனங்களிலிருந்து கார்பன் டை ஆக் சைடு முதலான நச்சு வாயுக்களை பெருமள

படிப்பகம்


www.padippakam.com

வில் வெளியிடும் நாடுகள் மீது வரி விதிக்க வேண்டுமென ஏழைநாடுகள் கொண்டு வந்த திட்டத்தையும் ஏகாதிபத்திய நாடுகள் ஏற்கவில்லை. குறைவான அளவு கார்பன் டை ஆக்சைடை வெளியிடக்கூடிய, அதேசமயம் எரிபொருள் சிக்கனம் கொண்ட வாகனங்களைப் பயன்படுத்துவதால், சுற்றுச்சூழல் பெருமளவில் பாதிக்காது என்று அவை எதிர்த்தன. ஏனெனில் இத்தகைய கார்களைத் தயாரிப்பதில் ஜப்பானும் அமெரிக்காவும் முன்னணியில் உள்ளன. வரிவிதிப்பு திட்டம் நிறைவேறினால் அவற்றின் உற்பத்தியே பாதிக்கப்படும். மேலும், கார்களைக் குறைத்து பேருந்து, ரயில் போன்ற வெகுஜன போக்குவரத்து முறைகளுக்கு மாறவும் அவை தயாராக இல்லை. இந்நிலையில், கார்களைக் குறைக்காமல் காடுகளை வளர்க்கத் தீர்மானம் போடுவது மாபெரும் மோசடியாகும்.

இதுதவிர, அணு ஆயுதம், ரசாயன ஆயுதங்களைப் பெருக்கிக் குவிப்பதாலும் அவற்றின் கழிவுகளை ரகசியமாக கடலில் கொட்டுவதாலும் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, ஏகாதிபத்திய நாடுகள்தான் இவற்றை ரகசியமாக உற்பத்தி செய்துக் குவிக்கின்றன. இவற்றை ஒழிப்பது அல்லது குறைந்தபட்சம் கட்டுப்படுத்துவது பற்றியோ ரியோ மாநாட்டில் எந்த முடிவுமில்லை.

அடுத்ததாக, சுற்றுச் சூழல் பாதிப்பினால் நஞ்சாகிப் போயுள்ள உலகைச் சீரமைக்க ஏகாதிபத்திய நாடுகளை நிதி ஒதுக்கீடு செய்யக்கோரும் ஒப்பந்தம் இன்னுமொரு மோசடி. ஐ.நா. மன்றத்தின் பரிந்துரையின்படி தயாரிக்கப்பட்ட "நிகழ்ச்சி நிரல் 21" என்ற சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் ஏறத்தாழ 60,000 கோடி டாலர் தேவை. இன்றைய நிலையில் உடனடி பாதிப்புகளைச் சீரமைக்க குறைந்தபட்சம் 12,500 கோடி டாலராவது தேவை. ஆனால் மாநாட்டில் வெறும் 200 கோடி டாலர் மட்டுமே ஒதுக்க ஏகாதிபத்திய நாடுகள் ஒப்புக் கொண்டன.

மேலும் தனது ஏகாதிபத்திய ஒற்றைத் துருவ உலக மேலாதிக்க சந்தைப் பொருளாதாரத்திற்கு ஏற்ப உலக நாடுகளை மாற்றுவது என்ற நோக்கத்துடன்தான் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது. ஏகாதிபத்தியங்கள் ஒதுக்கீடு செய்யும் நிதியை ஐ.நா. மன்றத்தின் மூலமாக உலக வங்கி கட்டுப்படுத்தி நிர்வகிக்கும். சுற்றுச்சூழலால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு ஏழைநாட்டுக்கு இந்த நிதி கிடைக்க வேண்டுமானால், கட்டுப்பாடுகளை நீக்க ஏகாதிபத்திய கொள்ளைக்கு கதவை அகலத்திறக்குமாறு அந்நாட்டை உலக வங்கி நிர்ப்பந்திக்கும். அதன் விளைவாக ஏழை நாடுகளிடம் எஞ்சியிருக்கும் கொஞ்சநஞ்ச சுயசார்பும் பறிக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கமும் கொள்ளையும் மேலும் அதிகரிக்கும். சுருக்கமாகச் சொன்னால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி என்பது ஏகாதிபத்தியங்களுக்கு கிடைத்த இன்னுமொரு ஆதிக்க ஆயுதமாகிவிட்டது. கடந்த ஜூன் 4 முதல் 14-ந் தேதிவரை பிரேசில் நாட்டில் நடந்த புவி பாதுகாப்பு மாநாடு இதைத்தவிர வேறொன்றையும் சாதிக்கவில்லை.



இந்தியாவில் உள்ள அணைகளில் பாதிக்கும் மேலானவை மகாராஷ்டிராவில் இருந்தும் ஏறத்தாழ 40,000 கிராமங்கள் நீரின்றி வறட்சியால் தவிக்கின்றன. மகாராஷ்டிராவின் சர்க்கரை ஆலை அதிபர்கள் - நிலப்பிரபுக்களுக்கு மொத்த பாசன நீரில் 70% அளவுக்கு அரசு திருப்பி விடுவதாலேயே இந்தக் கோரமான நிலைமை. சுற்றுச்சூழல் மாநாட்டில் வாய்கிழியப் பேசிய இந்திய அரசின் யோக்கியதைக்கு இந்தச் சான்று ஒன்றே போதுமானது.

ரியோ நகரில் ஐ.நா. மன்றத்தின் சார்பில் உலக நாடுகளின் அரசுத் தலைவர்கள் பங்கேற்ற புவி பாதுகாப்பு மாநாடு நடந்த அதே நேரத்தில், ரியோ நகரிலுள்ள ப்ளேமென்கோ பூங்காவில் சுற்றுச்சூழல்வாதிகள் போட்டி மாநாடு ஒன்றை நடத்தினர். 167 நாடுகளைச் சேர்ந்த 8,000-க்கும் மேற்பட்ட அரசுசாரா அமைப்புகள் இதில் பங்கேற்றன. சுற்றுச்சூழல்வாதிகள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் முதல் பல்வேறு சமூக சேவை அமைப்புகளும், தென்னமெரிக்கப் பூர்வ குடிமக்களும் கலந்துகொண்ட இந்த மாநாடு, சுற்றுச்சூழல் விவகாரத்தை உலக அரங்கில் முன்னணிக்குக் கொண்டுவர பெரிதும் உதவிற்று. ஆனாலும் ஒருங்கிணைந்த முறையில் மாற்றுத் தீர்வு எதையும் அவர்களால் முன்வைக்க முடியவில்லை. சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு ஏகாதிபத்தியங்களைக் குற்றம் சாட்டும் அவர்கள், அதற்கு அடிப்படையான ஏகாதிபத்திய உற்பத்திமுறையை எதிர்க்கத் தவறி கற்பனையான தீர்வுகளையே முன்வைத்தனர். போதாக்குறைக்கு ஏகாதிபத்தியங்களால் ஊட்டி வளர்க்கப்படும் தன்னார்வக் குழுக்களும், தலாய்லாமா போன்ற கைக்கூலி மதகுருமார்களும் சன்னியாசிகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உருப்படியான தீர்வு ஏதும் காணமுடியாமல் குழப்பினர். உலக நாடுகள் சார்பில் நடந்த மாநாட்டைப் போலவே, அதற்கு இணையாக நடத்தப்பட்ட அரசுசாரா நிறுவனங்களின் மாநாடும் தோல்வியில் முடிந்துவிட்டது.


சுற்றுச்சூழல் பாதிப்பு எனும் பேரபாயம் இன்று உலகைக் கவ்விக் கொண்டுள்ள நிலையில் அதைத் தடுத்து நிறுத்த மாற்றுத் தீர்வுதான் என்ன? சுற்றுச்சூழலும் உயிரியல் சூழலும் நஞ்சாவதற்கு முதலாளித்துவ லாபவெறியும் போர்வெறியுமே பிரதான காரணம். கட்டுப்பாடற்ற கொள்ளையையும் ஆதிக்கத்தையும் நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்தியவாதிகளுக்கு சுற்றுச்சூழல் நஞ்சாவதைப் பற்றி அக்கறையில்லை. ஏனவே தான் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டால் எமது நாட்டில் பல ஆலைகளைமூட வேண்டிய நிலை ஏற்படும்; இதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது என்று கொக்கரித்தார் அமெரிக்க அதிபர் ரீகன். ஏகாதிபத்திய உற்பத்தி முறையை ஒழித்துக்கட்டாமல், காடுகளை வளர்க்க கவனம் செலுத்துவதன் மூலமோ, மாசு கட்டுப்பாட்டுக்கு கூடுதலாக நிதி ஒதுக்குவதன் மூலமோ சுற்றுச்சூழல் நஞ்சாவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஏகாதிபத்திய உற்பத்தி முறைக்கு நேரெதிரான, சுயசார்பை அடிப்படையாகக் கொண்ட தேசிய உற்பத்தியும், சோசலிச உற்பத்தி முறையும் மட்டுமே இதற்கு மாற்றுத் தீர்வாக முடியும். ஏனெனில் சோசலிச உற்பத்தியானது லாபவெறிக்கும் போர்வெறிக்கும் எதிரானது; மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டது; விஞ்ஞானபூர்வமானது. ஏகாதிபத்திய நாடுகளைப் போல அரசு அதிகாரம் லாப வெறிகொண்ட முதலாளிகளிடம் அல்லாமல், சோசலிச நாட்டில் உழைக்கும் மக்கள் கரங்களில் அதிகாரம் குவிக்கப்படுவதால் மோசடிக்கோ முறைகேடுகளுக்கோ இங்கே இடமில்லை. இத்தகைய சோசலிச உற்பத்தி முறையால் மட்டும்தான் சுற்றுசூழல் நஞ்சாவதைத் தடுத்து மக்கள் நலனையும் புவியையும் காக்க முடியும். எனவேதான் சுயசார்பான தேசிய உற்பத்தி கொண்ட நாடுகளை அச்சுறுத்தியும் பொருளாதாரத் தடை விதித்தும் போர் தொடுத்தும் ஏகாதிபத்தியங்கள் அடக்கி ஒடுக்குகின்றன. இந்நிலையில் சில தன்னார்வக் குழுக்களைப் போல, சுற்றுச்சூழல் பாதிப்பையும் ஏகாதிபத்தியங்களையும் தனியே பிரித்து தீர்வு காண முயற்சிப்பது உலக மக்களுக்கே எதிரானதும் மோசடியானதுமாகும். ஏகாதிபத்தியங்களை ஒழிக்காமல் சுற்றுச் சூழல் நஞ்சாவதைத் தடுக்க முடியாது. ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான சுயசார்பான தேசிய உற்பத்தியை நிறுவி வளர்க்காதவரை, ஏழைநாடுகள் மீது ஏகாதிபத்திய நரிகள் போடும் பழியையும், சுற்றுச்சூழல் பாதிப்பின் சுமையையும் தடுத்து நிறுத்த முடியாது.

● குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

''ராஜீவ் பிரதமராக இருந்தபோது ரஷிய உளவு நிறுவனமான கே.ஜி.பி. மூலமாக ரகசியமாக நிதியுதவி பெற்றார். ரஷிய வாத்தக நிறுவனங்களின் வழியாக இந்தத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது. இந்தத் தொகை அவரது கட்சிச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இந்த உதவிக்காக ராஜீவ் பெரும் நன்றியுடையவராக இருந்தார்'' என்று ரஷிய ஒன்றியத்தின் முன்னாள் கே.ஜி.பி. தலைவர் செபிரிகோவ் கூறியுள்ளார். அவரது வாக்குமூலத்தை ''இஸ்வெஸ்தியா'' என்ற ரஷிய பத்திரிகை அண்மையில் வெளியிட்டுள்ளது. இந்திய போலிக் கம்யூனிஸ்டுகளுக்கும் சரியான சாட்டையடி தான் இது.

ஆப்பிரிக்காவின் கிழக்கு கடலோர சிறிய நாடான சோமாலியா மக்கள், தீராத உள்நாட்டுப் போரினாலும் பஞ்சத்தாலும் நாள்தோறும் கொத்துக் கொத்தாக மடிந்து வருகின்றனர். இந்நிலையில் அந்நாட்டு மக்கள் அண்டை நாடுகளை நோக்கி அகதிகளாக ஓடுகின்றனர். ஆனால் அவர்களை ஏற்க பல நாடுகளும் மறுத்து வருகின்றன. எனவே பட்டினியால் பரிதவிக்கும் சோமாலிய மக்கள் 3 ஆயிரம் பேர் வேறுவழியின்றி துறைமுகத்தை முற்றுகையிட்டு ஒரு கப்பலைக் கடத்தி ஏமன் நாட்டுக்குச் சென்றனர். ஆனால் ஏமன் நாட்டு அரசு அவர்களை ஏற்க மறுத்து திருப்பியனுப்பியது. ஏற்கனவே பட்டினியால் துடித்து உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டிருந்த அகதிகள், நடுக் கடலில் சுட்டெரிக்கும் வெயில் தாளாமல் துடிதுடித்தனர். ஏற்கனவே உணவும் நீருமின்றி அரை மயக்க நிலையிலிருந்த மக்களை வெயிலும் சேர்ந்து வாட்டியதால் அவர்கள் கடலில் குதித்தனர். பசி மயக்கத்தோடு உடல் சோர்ந்து நடுக் கடலில் தத்தளித்து கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கி மாண்டு போயினர். கடந்த ஜூன் மாத இறுதியில் ஏமன் கடற்கரையில் ஆயிரக்கணக்கில் பிணங்கள் ஒதுங்கிய பின்னரே இந்தக் கோரச் சம்பவம் உலகிற்கு தெரிய வந்தது. யூகோஸ்லாவியாவின் உள்நாட்டுப் போரினால் அகதிகளாகிவிட்ட மக்களுக்கு அவசர கால உதவிகளைச் செய்யும் ஐ.நா. மன்றமும் ஏகாதிபத்திய நாடுகளும் அதில் கடுகளவு உதவியைக்கூட சோமாலிய மக்களுக்குச் செய்யவில்லை. காரணம், சோமாலியா ஓர் ஏழை நாடு; அதுவும் கறுப்பின மக்களைக் கொண்ட நாடு!

ஜனாதிபதி தேர்தலில் சாதிய அடிப்படையில் 'மார்க்சிஸ்டு'கள் சந்தர்ப்பவாத நிலைப்பாடு எடுத்து காங்கிரசு வேட்பாளரான சர்மாவை ஆதரித்து வெற்றிபெறச் செய்தனர். இதற்காக பிரதமர் நரசிம்மராவுடன் பேரம் நடத்திய மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு அதற்குப் பரிசாக தனது மகனும் தொழிலதிபருமான சந்தன் பாசுவுக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் வாரியத்தில் உறுப்பினர் பதவியைப் பெற்றுத் தந்துள்ளார். இந்த பேரத்தைப் பற்றி முதலாளித்துவ ஏடுகளே பரிகசிக்கத் தொடங்கியதும், விமானப் போக்குவரத்து மந்திரியான மாதவராவ் சிந்தியா தனது நண்பர் என்ற முறையில் சந்தன் பாசுவை சிபாரிசு செய்துள்ளதாக போலிக்கம்யூனிஸ்டுகள் பூசி மெழுகுகின்றனர். எப்படி இருக்கிறது 'மார்க்சிஸ்டு' முதல்வரின் வர்க்கப் பாசம்?



பிலாய் தொழிலாளர்களின் ரயில் மறியல் போராட்டம்

இத்தாலிய பன்னாட்டு நிறுவனமான ஸ்நாம்ப்ரொகெட்டியின் டெல்லி பிரதிநிதியாக இருப்பவர் குவாட்ரோச்சி. இவர் ராஜீவின் இத்தாலிய மனைவியான சோனியாவின் குடும்ப நண்பர். ராஜீவ் ஆட்சியில் தல்-வைஷெட் திட்டம், ஜெகதீஷ்பூர் குழாய் பாதை திட்டம் முதலான ஒப்பந்தங்கள் மூலம் ஸ்நாம் ப்ரொகெட்டி நிறுவனம் ஆதாயமடைந்தது. அதற்குப் பரிசாக, போபர்ஸ் கொள்ளையில் கிடைத்த கள்ளப் பணத்தை குவாட்ரோச்சி மூலமாக ராஜீவுக்கு சேர்க்க இந்த நிறுவனம் ஏற்பாடு செய்தது. அதன்படி ஸ்விஸ் வங்கியிலுள்ள குவாட்ரோச்சியின் ரகசிய கணக்கில் தொகை சேர்க்கப்பட்டது. வி.பி.சிங் ஆட்சிக் காலத்தில் சுவிஸ் அரசுக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் குவாட்ரோட்சியின் ரகசிய கணக்கையும் புலன் விசாரணை செய்ய கோரப்பட்டிருந்தது. அதன்படி அவரது கணக்கில் உள்ள ரூ.21 கோடிக்கு சுவிஸ் அதிகாரிகள் விளக்கம் கேட்டிருந்தனர். குவாட்ரோச்சி இதுவரை பதிலளிக்காததால் அந்தத் தொகை முடக்கப்பட்டது.

இப்போது, பனாமா நாட்டின் இரகசிய வங்கிகள் மூலம் குவாட்ரோச்சி கணக்கில் அந்தத் தொகை போடப்பட்டுள்ளது என்றும், இதுதவிர குவாட்ரோச்சிக்கு வேறுசில வங்கிகளில் ரகசிய கணக்கு உள்ளதென்றும் ''எக்ஸ்பிரஸ்'' நாளேட்டின் புலனாய்வு நிருபர் சித்ரா சுப்பிரமணியம் புதிய ஆதாரங்களை வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளார். போபர்ஸ் ஊழலைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டதாக நிம்மதிப் பெருமூச்சுவிட்ட நேரத்தில், ராஜீவ் மட்டுமின்றி அவரது இத்தாலிய உறவும் சம்பந்தப்பட்டிருப்பது அம்பலமாகி காங்கிரசுப் பெருச்சாளிகளை மீண்டும் போபர்ஸ் பூதம் அச்சுறுத்தக் கிளம்பிவிட்டது.

மத்தியப் பிரதேசத்தின் எஃகு நகரமான பிலாயில் கடந்த ஜூலை முதல் நாளன்று போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 24 தொழிலாளர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 10 மாதங்களுக்கு முன்பு சட்டிஸ்கார் முக்தி மோர்ச்சா எனும் தொழிற் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான சங்கர் குகா நியோகி சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அத்தொழிற் சங்கத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் இது. சட்டப்படியான குறைந்தபட்சக் கூலி, வேலை உத்திரவாதம் போனசு மற்றும் பிற கோரிக்கைகளை முன்வைத்து இத்தொழிற் சங்கத்தில் திரண்டுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஓராண்டுக்கும் மேலாக அமைதியான முறையில் தொடர்ந்து போராடி வருகின்றனர். கடந்த மே 25-ந் தேதியன்று பிலாய் உருக்காலைக்குச் செல்லும் சாலையை மறித்து போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். ஆனாலும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் ஜூன் 29 முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். ஜூலை முதல் நாளன்று பெண்கள், குழந்தைகள் உட்பட 5,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பிலாய் மின்நிலையம் அருகே ரயில்வே தண்டவாளத்தில் அமர்ந்து கோஷமிட்டவாறு மறியல் செய்த


படிப்பகம்

www.padippakam.com

# ஆப்பசைத்த குரங்கானான் ஆய்வாளர் கோதண்டராமன்

கடந்த 30.06.'92 இரவு ம.க.இ.க. தோழர்களான விசுவநாதன், ஜெயக்குமார் ஆகியோரை விசாரணைக்காக ஆய்வாளர் கோதண்டராமன் அழைப்பதாக கூறி இழுத்துச் சென்று கைதி அறையில் அடைத்து வைத்தது பொன்மலை போலீசு. மறுநாள் காலை வந்த ஆய்வாளர் கோதண்டராமன் கைதி அறைக்குள் இருந்த தோழர்களைப் பார்த்து ''இருங்கடா உங்களை வந்து கவனிச்சுக்கிறேன்'' என்று உறுமினான். பிறகு தலைமை காவலரிடம் ''இவனுங்களுக்கு சோறு எதுவும் போடாதே'', எவனாவது கொண்டுவந்தா அவனையும் புடிச்சு உள்ள போடு'' எனக்கூறி சென்றான். சாப்பாடு கொடுக்கச் சென்ற தோழரை வாசலிலேயே தடுத்து விரட்டினான் ஆய்வாளர் கோதண்டராமன். தகவல் கிடைத்து விசாரிக்கச் சென்ற ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் முருகானந்தத்திடம் திமிராக பேசினான் கோதண்டராமன். இவனிடம் பேசி பயனில்லை என சட்டவிரோதமாக காவலில் வைக்கப்பட்டிருக்கும் தோழர்களை உடனடியாக விடுவிக்கவில்லையெனில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என திருச்சி ம.க.இ.க. செயலாளர் தோழர் முத்து கோதண்டராமனுக்கு தந்தி கொடுத்தார். தந்தி கிடைத்தவுடன் ''ஏண்டா தந்தியா கொடுக்கறீங்க; என்னடா செஞ்சிடுவீங்க?'' ''நீங்க என்ன பெரிய மயிரா?'' என்று தோழர்களின் சாதியை இழிவாகப் பேசி, முகத்தில் துப்பி தாக்கினான் கோதண்டராமன்.

ஆவேசமடைந்த தோழர்கள் கோதண்டராமனின் அயோக்கியத்தனங்களை அம்பலப்படுத்தி ''இந்த அவமானத்திற்கு நிச்சயம் நீ பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்று, கோதண்டராமனை எச்சரித்திருக்கிறார்கள். தக்கவாறு அவனைக் ''கவனிக்க''வும் செய்தனர். தோழர்களின் ஆவேசத்தால் பொன்மலை போலீசு நிலையம் ஸ்தம்பிக்க கோதண்டராமனோ செயலிழந்து அவமானத்தால் சிறுத்து தனது அறைக்குள் சென்று ஒளிந்து கொண்டான். உடனே தலைமை காவலரை அழைத்து ''அவங்களை வெளியே அனுப்பு'' என்று கூற பின்னர் தோழர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாகவே ம.க.இ.க.-வின் பெயரைக் கேட்டாலே கோதண்டராமனுக்கு புத்தி பிசகிவிடும். 1988-ல் பொன்மலையில் விதவைப் பெண்ணின் சொத்துக்களை மிரட்டி அபகரிக்க கோதண்டராமன் செய்த முயற்சி ம.க.இ.க.-வின் தோழமை அமைப்பான தொழிலாளர் பிரச்சாரக் குழுவால் தடுக்கப்பட்டது. பின்னர் திருச்சி கோட்டை காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு 1989 பொதுத் தேர்தலின் போது ஓட்டுக் கட்சிகளுக்கு ஆதரவாக ம.க.இ.க.-வின் தேர்தல் புறக்கணிப்பு விளம்பரத் தட்டிகளை போலீசு கும்பலுடன் வந்து கிழித்து சேதப்படுத்தினான். இந்த ரவுடித்தனத்தை அம்பலப்படுத்தி நகரமெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளும், பொது மேடை விமர்சனங்களும் ஆய்வாளர் கோதண்டராமனின் மானத்தை கப்பலேற்றியது. தான் இனி இது போல செய்யவில்லை என்றும், தன்னைப் பற்றி பொதுக்கூட்டங்களில் பேச வேண்டாம் என்றும் தூது அனுப்பி கெஞ்சினான் கோதண்டராமன்.

பின்னர் வளைகுடா யுத்தத்தின் போது வைக்கப்பட்ட ஜார்ஜ்புஷ் கொடும்பாவி பொம்மையை இரவோடு இரவாக திருடி சென்ற கோதண்டராம வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது. தொடர்ந்து மதவெறிக்கு எதிராக திருச்சி தெப்பக்குளம் தபால் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது போக்குவரத்துக்கு இடையூறு என்று தோழர்களிடம் கோதண்டராமன் தகராறு செய்ய கியூ பிரிவு போலீசு தலையிட்டு ''தீர்க்கும்'' அளவுக்கு பிரச்சினை முற்றியது. தற்போது மீண்டும் பொன்மலைக்கு வந்திருக்கும் கோதண்டராமன் பொன்மலையில் ம.க.இ.க.-வை ஒழிக்கப் போவதாக கூறிவருகிறான். இதன் தொடர்ச்சிதான் தோழர்கள் விசுவநாதன், ஜெயக்குமார் தாக்கப்பட்டதாகும். உடனடியாக கோதண்டராமன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி திருச்சி நகரமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. தற்போது சட்டவிரோதமாக காவலில் வைத்தது, சாதியை இழிவாக பேசியது, மான நட்டத்திற்கு, சட்ட விரோதமாக வீட்டிற்குள் போலீசு நுழைக்கூடாது என நான்கு வழக்குகள் கோதண்டராமன் மீது போடப்பட்டுள்ளது. பொதுக்கூட்டம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



பிச்சைக்காரர்களிடம் கூட லஞ்சம் வாங்கத் தயங்காமல் கை நீட்டுபவன்தான் கோதண்டராமன். தினசரி தனது பை நிரம்பவில்லையெனில் இவனுக்கு தூக்கம் வராது. பை நிரம்பாத நாட்களில் இவனுக்கு கீழ் பணியாற்றும் காவலர்களிடம் கோதண்டராமன் பேசும் தரக்கறைவான வார்த்தைகள் எழுத முடியாதவை. தற்போது ம.க.இ.க. தோழர்களைத் தாக்கி அடக்க நினைத்து தலைவலி திருகுவலியான நிலையில் இருக்கிறான் கோதண்டராமன். அடக்குமுறைகளையே அடியுரமாகக் கொண்டு வளர்ந்து கிளம்பிய சூரப்புலி தேவாரத்தின் வாரிசுகளான கோதண்டராமன்கள் என்றைக்கும் இதை உணரப்போவதில்லை. இப்படிப்பட்டவர்களை ஒழித்துக்கட்டி இச்சமூக அமைப்பு முறையை மாற்றாமல் உழைக்கும் மக்களும் ஓயப்போவதில்லை.

தகவல்:- ***ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் பொன்மலை - திருச்சி.***

---

னர். இதனால் பம்பாய் - கல்கத்தா ரயில் போக்குவரத்து பாதிப்படைந்தது. ஆத்திரமடைந்த பாரதீய ஜனதா அரசு போலீசை ஏவியது. அன்று மழை காரணமாக போலீசார் வீசிய கண்ணீர் புகை குண்டுகள் செயலிழந்து போயின. உடனே போலீசார் முன்னறிவிப்பு ஏதுமின்றி கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 24 பேரை கொன்றனர்.

இப்படுகொலையை எதிர்த்து அனைத்து 'இடதுசாரி' தொழிற்சங்கங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கியதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.2,000 நட்ட ஈடு கொடுத்துவிட்டு, விசாரணை நாடகமாடுகிறது பாரதீய ஜனதா அரசு. மறுபுறம் பிலாய் வட்டார முதலாளிகளுடன் ம.பி. அமைச்சர்கள் ரகசியமாக விருந்துண்டு களிக்கின்றனர். பாரதீய ஜனதா அரசு நேற்று பஸ்தார் பழங்குடி மக்களைக் கொன்றொழித்தது. இன்று தொழிலாளர்களைச் சுட்டுக் கொல்கிறது. நாளை....?

ஏழை நாடுகளைக் கொண்ட இந்திய துணைக் கண்டத்திலிருந்து இளங்குழந்தைகளைக் கடத்துவது என்பது அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த ஜூன் மாத இறுதியில் 10 வயதுக்குட்பட்ட 15 குழந்தைகள் துபாய்க்கு கடத்தப்பட்டபோது மீட்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் வங்க தேசத்தைச் சேர்ந்த குழந்தைகள். அரபு நாடுகளில் நடக்கும் ஒட்டகப் பந்தயங்களில் ஒட்டகங்களின் முதுகில் குழந்தைகளை வைத்து கட்டிவிட்டால், குழந்தைகள் வீறிட்டு அலறும் போது ஒட்டகங்கள் பீதியில் வேகமாக ஓடுமாம். அரபு ஷேக்குகளின் வக்கிரமான இந்த விளையாட்டுக்காக இக்குழந்தைகள் கடத்தப்பட்டனர். மற்றொரு கடத்தல் இன்னும் வக்கிரமானது கல்கத்தாவைச் சேர்ந்த 14 வயதான பாத்திமா எனும் சிறுமியை 50 வயதான கிழவர் ஒருவர் இஸ்லாமிய முறைப்படி 'திருமணம்' செய்து கொண்டு ஆப்கான் நாட்டுக்கு சிறுமியை கடத்திச் சென்றபோது பிடிபட்டார். கடந்த ஜூன் 21 அன்று விமானத்தில் பாத்திமா அழுது அதிகாரிகளிடம் முறையிட்டபோது மீட்கப்பட்டார். ஓராண்டுக்கு முன்பு அமீனா என்கிற ஆந்திர சிறுமி; இன்று கல்கத்தாவின் பாத்திமா என கடத்தல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை சிறுமிகள் வாயடைக்கப்பட்டு கடத்தப்பட்டார்களோ தெரியவில்லை

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா கும்பலின் ஓராண்டு வேதனை ஆட்சி
# புரட்சிகர அமைப்புகளின் பிரச்சார இயக்கம்

பாசிச - பார்ப்பன ஜெயா கும்பல் மதுரையில் வீரவரலாறு கூறும் வெற்றி மாநாடு நடத்தியது. புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் ஜெயா ஆட்சியின் ஓராண்டு வேதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடத்தின. திராவிட இயக்கங்களை அடக்கி ஒடுக்கிய வரலாறே ஜெயாவின் வீரவரலாறு என்பதையும் புலிகள் அமைப்பை அடக்கி ஒடுக்கியதும் சாராய உடையார், மல்லையா கொள்ளைக்கு சீமைச்சாராய கடைகளை 'பார்' உடன் திறந்ததும், ஊழலில் பங்களா - எஸ்டேட் வாங்கியதும் ஆடம்பர, வக்கிர வாழ்க்கைக்கும் விழாவுக்கும் அரசு பணம் பலகோடிகளை விரயமாக்கியதுமே ஜெயாவின் ஓராண்டுகால சாதனை என்பதையும் இப்பொதுக்கூட்டங்கள் பறைசாற்றின.

திருச்சி - பொன்மலை ரயில்வே ஓர்க்கர்ஸ் யூனியன் சார்பில் பொன்மலையில் 23.6.92 அன்று நடந்தப் பொதுக்கூட்டத்தில் தோழர் முருகானந்தம் தலைமைதாங்க திருச்சி ம.க.இ.க. தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றினார். மைய அரசின் புதிய பொருளாதார - தொழிற் கொள்கையால் ரயில்வே தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகும் அபாயத்தை தோழர் முருகானந்தம் விளக்கிப் பேசினார். விலைவாசி உயர்வு, கண்துடைப்பு பட்ஜெட், கவர்ச்சி திட்டங்கள், எம்.எல்.ஏ. அராஜகம், சட்டசபை ரவுடித்தனம், தடா - என்.எஸ்.ஏ. போன்ற அடக்குமுறைகள், பத்திரிகைகள் மீதான தாக்குதல்கள் என ஜெயா தந்த ஓராண்டு வேதனையை விளக்கி தோழர் தமிழ்மணி பேசினார். 750 பேர் அளவில் தொழிலாளர்கள் திரண்டு ஆதரவளித்தனர். பொதுக்கூட விளம்பர தட்டியை பொன்மலை போலீசு அகற்றச் சொல்லி பலவந்தப்படுத்தியதும் அம்பலப்படுத்தப்பட்டது. கூட்ட இறுதியில் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

லால்குடி வட்டம் (திருச்சி), புள்ளம்பாடி ஒன்றியம், பெருவளப்பூர் கிராமத்தில் 30.6.92 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி கிளை தொடக்க விழாவும் 'ஜெ' ஆட்சியின் ஓராண்டு வேதனை விளக்கப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கிளை அமைப்பாளர் தோழர் மணி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். தோழர் பொம்மன் (வி.வி.மு. துறையூர் வட்டம்) கொடியேற்றி அமைப்பின்தேவை பற்றி பேசினார். சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசின் கொலை - கற்பழிப்பு தொடர்பாக தோழர் முருகானந்தம் (ர.ஒ.யூ) அம்பலப்படுத்தி பேசினார். 'ஜெ' ஆட்சியின் ஓராண்டு 'சாதனை' - வேதனையை விளக்கி தோழர் தமிழ்மணி (ம.க.இ.க.) சிறப்புரையாற்றினார். இறுதியில் நடந்த கலை நிகழ்ச்சி வரை 750 பேர் திரண்டு ஆதரவளித்தனர். இதில் 300-க்கும் மேற்பட்ட பெண்கள் திரண்டு வந்து ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் ம.க.இ.க. நான்கு இடங்களில் பொதுக்கூட்டம் நடத்தியது. 30.6.92-ல் வில்லிவாக்கம் பட்டமேட்டிலும், 11.7.92-ல் சேத்துப்பட்டிலும், 13.7.92-ல் சைதையிலும் 16.7.92-ல் ஆவடியிலும் நடந்த பொதுக்கூட்டங்களில் ம.க.இ.க.-வின் மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். 'ஜெ'-யின் வீர வரலாறு பிற ஓட்டுக் கட்சிகள் கூறுவது போல் 'கவர்ச்சி' வரலாறு அல்ல; திராவிட இயக்கங்களை வீழ்த்திய வரலாறுதான் எனவும் பார்ப்பனீயத்தை மீண்டும் நிலைநாட்டியதுதான் ஜெயாவின் சாதனை எனவும் விளக்கினார். கூட்டந்தோறும் 200 முதல் 300 பேர் வரை கூடி பேச்சைக் கேட்டனர்.




தி.க., தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளின் ஆதரவாளர்கள்; முன்னணியாளர்கள் பலர் இறுதிவரை கூடிநின்று கேட்டு நமது கருத்துக்களை ஆமோதித்தனர். கூட்டம் முடிந்த பின் பொதுமக்கள் ஜெயலலிதாவின் மீதும் கருணாநிதி, வீரமணி மீதும் வெறுப்பைக் கொட்டி பேசிச் சென்றனர்.

கோவையில் 'ஜெ' ஆட்சியின் ஓராண்டு வேதனையை விளக்கி தெருமுனைக் கூட்டங்கள், ஆலைவாயில் கூட்டங்கள் வாயிலாக பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. ம.க.இ.க. தோழர்கள் முழக்க அட்டைகள், கொடி சகிதமாக பீளமேடு, சவுரிபாளையம், உப்பிலிபாளையம், வரதாசபுரம் ஆகிய பகுதிகளில் பல இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொண்டனர். தோழர்கள் பாடல்பாடி, பேசி பிரச்சாரம் செய்ததை மக்கள் வரவேற்றனர். ஒவ்வொரு இடத்திலும் 20 பேர் முதல் 100 பேர் வரை கூடி பிரச்சாரத்தைக் கேட்டதோடு டீ, குளிர்பானங்கள் வாங்கிக் கொடுத்தும் ஊக்கமூட்டினார்கள். அ.தி.மு.க-வைச் சேர்ந்தவர்களே ஆதரித்து ஒத்துழைப்புக் கொடுத்தனர்.

மேலும் 5 பஞ்சாலைகளிலும் ஒரு இஞ்சினியரிங் தொழிற்சாலையிலும் நகரத்தில் ஒரு பஞ்சாலையிலிலும் வாயில் கூட்டம் நடத்தப்பட்டது. சோமசுந்த ரா ஆலையில் கூட்டம் நடத்த இருந்தபொழுது, தோழமை அமைப்பான தொழிலாளர் பிரச்சாரக் குழு தோழர்கள் முன்னதாகக் கூடி முழக்க அட்டைகளுடன் நின்றனர். உளவு அறிந்து 30-க்கும் மேற்பட்ட போலீசு வந்து பீதியூட்டி அனுமதியில்லை என தகராறு செய்தது. பிறகு தொ.பி.கு. தோழர் சேகரையும், ம.க.இ.க. தோழர் நசீம் இக்மத்தையும் கைது செய்து பி3 போலீசு நிலையம் கொண்டு சென்றனர். கைதாகி வேனில் ஏற்றியபோது தோழர்கள் இருவரும் ஜெயா ஆட்சியின் பேச்சுரிமை பறிப்பையும் போலீசின் அராஜகத்தையும் கண்டித்து முழக்கமிட்டனர். பின்னர் மற்ற தோழர்கள் தொழிலாளர்கள் ஆலை முடிந்து வெளியே வந்தபோது கைது செய்தியைக்கூறி தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்தனர். இது இந்த ஆட்சியின் கோரமுகத்தை மேலும் தொழிலாளர்களுக்கு படம் பிடித்துக் காட்டியது. தோழர்கள் மீது 151 ஏ, 71 ஏ ஆகிய இரு வழக்குகள்


படிப்பகம்

www.padippakam.com

போடப்பட்டுள்ளன. ஜெயலலிதா கோவை யில் மருத்துவமனை ஒன்று திறக்க வந்து போகும் வரை தோழர்களை பிணையில் விடமறுத்து போலீசு அடாவடித்தனம் செய்தது.

பள்ளிப்பாளையம் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி சார்பாக ஜெயாவின் ஓராண்டு சாதனை - மக்கள் பட்ட வேதனையை விளக்கி 7 இடங்களில் தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர்கள் தர்மராஜ், தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். பகுதி மக்கள் அனைத்து இடங்களிலும் திரளாக கூடியதோடு குளிர் பானங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்து ஆதரவு தந்தனர். தோழர்களுடன் சேர்ந்து முழக்கமிடவும் செய்தனர்.

**பென்னாகரம்:** விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக ஓராண்டு 'ஜெ' ஆட்சியின் வேதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடத்த அனுமதிகோரி விண்ணப்பிக்கப்பட்டது. மேலும் தெருமுனை பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது. பென்னாகரம் பேருந்து நிலையத்தில் 28-7-92 அன்று தெருமுனை பிரச்சாரம் செய்து கொண்டிருந்த 7 தோழர்களை, தடையை மீறி கூட்டம் போட முயன்றதாக கூறி போலீசு சைது செய்தது. அப்பொழுது போலீசை அம்பலப்படுத்தி தோழர்கள் கூடியிருந்த மக்களிடம் பேசிவிட்டு பிறகு முழக்கமிட்டபடியே போலீசு நிலையம் வரை சென்றனர். தோழர்கள்மீது மூன்று பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன.

தற்போது பிணையில் வெளி வந்த தோழர்கள் அதே இடத்தில் பொதுக் கூட்டம் நடத்த முயற்சி எடுத்து வருகின்றனர்.

### 'பார்' கடைகளுக்கு எதிராக பெண்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி தெப்பக்குளம் அஞ்சலகம் எதிரில் விலைவாசி எதிர்ப்பு பெண்கள் போராட்டக் குழு சார்பாக 'பார்' கடைகளுக்கு எதிராக 29.6.92 அன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. திருமதி ஜெயா தலைமை ஏற்க வாணி உரையாற்றினார். குழந்தைகளுடன் சுமார் 25 பெண்கள் கூடி ஒருமணி நேரம் நடத்திய ஆர்ப்பாட்டம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

திருச்சியில் ம.க.இ.க; 'பார்' கடைகள் திறந்ததைக் கண்டித்து வரைபட கார்ட்டூன் சுவரொட்டிகளை நகரெங்கும் ஒட்டியது. பெரிய அளவில் வைக்கப்பட்ட 2 தட்டிகளை போலீசு திருடிச் சென்றுவிட்டது.

இதுதவிர கடந்த ஜூன் மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டதற்கு எதிராக தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ம.க.இ.க. பு.மா.இ.மு., வி.வி.மு. சார்பாக சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. புலிகள் மீதான தடை, ஜனநாயக, புரட்சிகர, தமிழின சக்திகளை அடக்கி ஒடுக்குவதற்கான முகாந்திரமே - முன்னோட்டமே என்றும் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரியும் சுவரொட்டி முழக்கம் முழங்கியது. ●

# நெருப்போடு மோதும் இந்துவெறி கொசுக்கள்

கேரளா - இடுக்கி மாவட்டத்தில் - வண்டிப்பெரியாறுக்கு அருகில் உள்ளது வல்லக்கடவு. ராம்பகதூர் தாகூர் எனும் பீகாரைச் சேர்ந்த பெரும் தரகு முதலாளியின் ஆர்.பி.டி. டீ எஸ்டேட்டில் வேலைபார்க்கும் பெரும்பான்மைத் தொழிலாளர்களையும், கூலி விவசாயிகளையும் கொண்ட மலைப் பிரதேசம்! எஸ்டேட் தொழிலாளர்கள் மத்தியில் நீண்டகாலமாக செயல்பட்டு வந்த போலிக் கம்யூனிஸ்டுகளின் யூனியனான சி.ஐ.டி.யூ.-வை பின்னுக்குத் தள்ளிவிட்டு, பாரதீய ஜனதாவின் பி.எம்.எஸ் (பாரதீய மஸ்தூர் சங்கம்) என்ற சங்கம் முன்னணிக்கு வந்துவிட்டது. சி.ஐ.டி.யூ. உட்பட பல்வேறு யூனியன்களின் துரோகத்தனத்தால் வெறுப்படைந்து வெளியேறியவர்களே, பி.எம்.எஸ்.-ன் இன்றைய உறுப்பினர்கள்.

'பாரத மாதா', 'நாம் இந்துக்கள்', 'கட்டுப்பாடு உள்ள கட்சி' என்றெல்லாம் பீற்றிக் கொள்ளும் பாரதீய ஜனதாவின் இளைய புத்திரர்களான பி.எம்.எஸ்.காரர்கள் நடைமுறையில் அடி, உதை, மிரட்டல், கொலை போன்ற ரவுடியிசத்தையே கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். கடந்த காலத்தில் வல்லக்கடவு மற்றும் 8,9 டிவிசன்களில் இவர்களின் செயல்பாடுகளை கவனித்தாலே எளிதாகப் புரியும்.

ஆர்.பி.டி எஸ்டேட்டின் வல்லக்கடவ 8-வது டிவிசனில் வேலை பார்க்கும் தொழிலாளியான கருணாநிதி மற்றும் வண்டிப்பெரியாறில் டிரைவராக இருக்கும் சுரே ஆகியோர் இப் பகுதியின் பி.எம்.எஸ். யூனியனின் முன்னணியாளர்கள். அதாவது ரவுடிகள்! மாற்று யூனியன் தொழிலாளர்கள் மற்றும் பி.எம்.எஸ்.-ஐ விமரிசிப்பவர்களை பகிரங்கமாக கும்பல் சேர்ந்து தாக்குவது, பயங்கர ஆயுதங்களுடன் அடித்து உதைப்பது; இதன்மூலம் பொதுமக்களை பீதியூட்டியே, தங்களை இப் பகுதியின் மன்னர்களாக அறிவித்துக் கொண்டுள்ளனர். கருணாநிதி, சுரே என்ற பெயர்களைக் கேட்டாலே இப்பகுதி வாழ் மக்கள், ஏதோ சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரனின் பெயரைக் கேட்பதைப்போல அலறுகிறார்கள்.

இவ்விரு ரவுடிகளின் நேரடியான தாக்குதலுக்கு பலியானவர்களும், மறைமுகமான பாதிப்பிற்கு உள்ளானவர்களும், நமது புதிய ஜனநாயகத்தின் துணிச்சலான அரசியல் நடைமுறைகளால் ஈர்க்கப்பட்டு இளைஞர்கள் சிலர் இணைந்து 'புதிய ஜனநாயக வாசகர் வட்டம்' என்ற பெயரில் கடந்த சில மாதங்களாக செயல்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் இப்பகுதியில் ''தடா'' வழக்கு நிதி வசூலிக்கும்போது, பி.எம்.எஸ். ஐச் சேர்ந்த ராமர் என்பவன் சாராய போதையில் வந்து தோழர்களிடம் தகராறு செய்துள்ளான். தோழர்கள் அமைதியாக திரும்பிவிட்டனர். பின் இரவு 7 மணிக்கு தோழர் பிரசாத் வீட்டிற்கு சென்று கலாட்டா செய்ததோடு வீட்டிற்குள் புகுந்து, படுத்திருந்தவரை காலைப் பிடித்து இழுத்து கீழே போட்டான். ஆனால், போதையில் இருக்கிறார் என்பதால், தோழர் அவரை வீட்டிற்கு கொண்டு போய் விட்டுவிட்டு வந்திருக்கிறார். இதற்குப் பிறகு, அருகிலுள்ள தோழர் ஜேம்ஸ் வீட்டிற்கு சென்று 'பி.எம்.எஸ்.காரர்களை கொல்வதற்குதான் நக்சல்பாரி கட்சியை உருவாக்குகிறீர்கள். தைரியமிருந்தால் என்னை வந்து கொல்' என்று கத்திக்கொண்டே வீட்டுக் கதவை தட்டியுள்ளான். தோழர் போதையிலிருக்கிறான் என்பதால் அமைதியாக இருந்துள்ளார். இறுதியில் வீட்டிலுள்ள பெண்களைப் பற்றி ஆபாசமாக பேசவே, ராமரை அடித்து தள்ளிவிட்டிருக்கிறார்!

மறுநாள் காலையில் செய்தியறிந்த பி.எம்.எஸ்.காரர்கள், பகல் முழுவதும் திட்டமிட்டு, இரவு நேரத்தில் கருணாநிதி, சுரே தலைமையிலான 13 பேர் கொண்ட கும்பல் ஒன்று, தோழர் ஜேம்ஸ் வீட்டிற்கு வந்து 'ஏன் ராமரை அடித்தாய்?' என்று விசாரித்துள்ளது. 'நான்தான் அடித்தேன். ஆனால் ஏன் அடித்தேன் என்பதை அவனிடமே கேளுங்கள்' என்று தோழர் கூறியுள்ளார். உடனே வெறிகொண்ட கும்பல் ஆபாசமாக கண்டபடி தோழரையும், அமைப்பையும் பேசத் தொடங்கிவிட்டது. 'பி.எம்.எஸ்.காரனை தொட்டால் தலையை சீவிவிடுவோம்' 'நக்சல்பாரியின் கொடியை ஏற்றுபவன் கையை வெட்டிவிடுவேன்' 'எங்களை எதிர்த்து எவனும் இங்கே வாலாட்ட முடியாது - ஜாக்கிரதை!' என்றெல்லாம் மிரட்டிவிட்டுச் சென்றுவிட்டனர். இதன் பிறகும் நமது தோழர்களை 'அடிக்கப் போகிறோம்' என்று உறவினர்கள் மூலம் எச்சரிக்கை விட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

இந்த சலசலப்புகளுக்கும், மிரட்டலுக்கும் பயப்படாமல், ஊக்கமுடன் செயல்படும் தோழர்களின் மன உறுதியை கண்டு நடுங்கிய இக்கும்பல் - தற்போது 'நக்சல்பாரி கட்சியை வளர்க்கிறார்கள் - புலிகளின் ஆதரவாளர்கள்' என்று போலீசில் புகார் செய்து, கொல்லைப்புற வழியாக மிரட்டத் தொடங்கியுள்ளனர். வண்டிப் பெரியார் போலீசும் தொடர்ந்து 5 முறை தோழர்கள் கிருஷ்ணன், வேலாயுதன், சாமி ஆகியோரை விசாரித்து பீதியூட்டிவிட்டுச் சென்றுள்ளது. பகுதித் தோழர்கள் தங்களின் உறுதியான செயல்பாடுகளினாலும் மக்களின் ஆதரவினாலும் ரவுடியிசத்திற்கு தக்க பதிலடி கொடுக்க உள்ளனர்.

*தகவல்:- பு.ஜ. வாசகர் வட்டம், பீர்மேடு தாலுகா - கேரளா*

படிப்பகம்

www.padippakam.com

## தீன்பிஹா விவகாரம்:


# பாதையை மறிக்கும் இந்துவெறி நந்திகள்

மேற்கு வங்க எல்லையிலுள்ள தீன்பிஹா இடைவழிப் பகுதியை இந்திய அரசு கடந்த ஜூன் 26 அன்று வங்க தேசத்துக்கு 999 ஆண்டுகால குத்தகைக்கு அளித்துள்ளது. நாட்டின் சுயாதிபத்தியத்தைக் கைவிடும் நடவடிக்கை என்று இம் முடிவை எதிர்த்து பாரதீய ஜனதாவும் சில பிராந்திய கட்சிகளும் தொடர்ச்சியான போராட்டத்தில் இறங்கியுள்ளன. இடைவழிப் பாதை திறக்கப்பட்ட ஜூன் 26 அன்று மறியல் - ஆர்ப்பாட்டத்தில் இறங்கியோர் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் மாண்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

தீன்பிஹா என்பது மே.வங்கத்தின் கூச்பிகார் மாவட்டத்தின் எல்லையிலுள்ள வங்கதேசத்தை ஒட்டிய சிறிய நிலப் பகுதியாகும். இதனை அடுத்துள்ள குச்சிலிபாரி, தாபிராட் ஆகிய இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராமங்களோடு இந்தியாவின் எல்லை முடிவடைகிறது.

தீன்பிஹாவின் தெற்கேயும் வடக்கேயும் வங்க தேசத்துக்குச் சொந்தமான, முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட டாகாகிராம், பான்பாரி ஆகிய கிராமங்கள் உள்ளன. 5 கி.மீ. இடைவெளியில் இக்கிராமங்கள் அருகருகே அமைந்திருந்தாலும், அப்பகுதிவாழ் மக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாது. முப்புறமும் இந்திய நிலப் பகுதியால் சூழப்பட்டு தனித் தீவாக உள்ள டாகாகிராம் மக்கள் தங்கள் தாய் நாட்டுடன் தொடர்பு கொள்ளக்கூட பாதை கிடையாது. தெற்கே தீஸ்தா எனும் கங்கை கிளை ஆற்றைக் கடந்தால்தான் வங்க தேசத்துடன் தொடர்பு கொள்ள முடியும். தீஸ்தா ஆற்றை ஒட்டி சதுப்பு நிலக்காடுகள் பரவிக் கிடப்பதால் கோடை காலத்தில்கூட காட்டைக் கடப்பது சிரமம். மழைக் காலத்திலோ ஆற்றில் வெள்ளம் பெருகிவிடும். இந் நிலையில் தமது தாய்நாட்டுடன் குறைந்தபட்சம் தொடர்பு கொள்ளுவதற்கு அவர்களுக்குள்ள ஒரே பாதை தீன்பீஹாதான்.

காலனிய ஆட்சியாளர்கள் மத அடிப்படையில் இந்தியா பாகிஸ்தான் என பிரிவினை செய்ததால் ஏற்பட்ட பிரச்சினை இது




இதனால் முஸ்லிம்களைக் கொண்ட டாகாகிராம் வங்க தேசத்துடன் சேர்க்கப்பட்டு போக்குவரத்து வழியின்றி நீண்ட காலமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அருகிலுள்ள கிராமத்தில் தமது உறவினர் இருந்தாலும் உடனடியாக சந்திக்க முடியாமல் டாகாகிராம் மக்கள் வேதனைப்பட்டனர். வங்க தேச அரசும் (அன்றைய கிழக்கு பாகிஸ்தான்) தீன்பிஹா இடைவழிப் பாதையை போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு இந்தியாவிடம் நீண்ட காலமாக கோரிவந்தது.

பாகிஸ்தானைத் துண்டாடி வங்க தேசத்தை உருவாக்கிய பிறகு அன்றைய இந்திரா அரசு தனது விசுவாச வங்க தேச அரசுடன் 1974-ல் ஒரு ஒப்பந்தம் போட்டது. தீன்பிஹாவை வங்கதேசத்துக்கு நீண்டகால குத்தகைக்கு அளிப்பது, வங்க தேசத்திலிருந்து இந்தியாவுக்கு ஓடிவரும் சாக்மா அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, கங்கை நதிநீர் பங்கீடு முதலான அம்சங்களைக் கொண்டதாக அது இருந்தது. ஆனால் வங்க தேசத்தில் இந்திய விசுவாச அதிபர் முஜிபுர் ரஹ்மான் சுட்டுக் கொல்லப்பட்டு, ராணுவ சர்வாதிகாரிகள் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்ததால் இந்த ஒப்பந்தத்தை இந்தியா கிடப்பில் போட்டது. 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஒப்பந்தத்தின் ஒரு அம்சமான தீன்பிஹாவை குத்தகைக்கு அளிப்பதை மட்டும் இப்போது நிறைவேற்றியுள்ளது.

ஆனால் இந்திய துண்டு நிலப் பகுதியை முஸ்லிம் நாட்டுக்கு குத்தகைக்கு அளிப்பதா என்ற இந்துவெறி காரணமாகவும், இப்பகுதியில் ஓட்டுப் பொறுக்கும் உள்நோக்கத்தோடும் பாரதீய ஜனதா இதை எதிர்த்து தீவிரமாகப் போராடி வருகிறது. இப் பகுதியில் பாரதீய ஜனதாவுக்கு வேரோ விழுதோ இல்லாததால் வெளியிலிருந்து ஆட்களை இறக்குமதி செய்து ''அபிமன்யுவாஹினி'', ''துர்காவாஹினி'' எனும் இளைஞர் - மகளிர் அமைப்புகளை திடீரென உருவாக்கியும், எல்லைப்புற மாவட்டங்களில் ஒரு நாள் கடையடைப்புப் போராட்டம் நடத்தியும் இந்து வெறியைக் கிளறிவிட்டு ஆதாயமடையத் துடிக்கிறது.

மே.வங்க ஆளும் இடதுசாரி கூட்டணியிலுள்ள பார்வர்டு பிளாக் கட்சிக்கோ கூச்பிகார் மாவட்டம் முக்கியமான ஓட்டு வங்கி. இதனாலேயே இப்பகுதியில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ-வும் முன்னாள் மந்திரியுமான கமல்குஹா இப் பகுதிவாழ் மக்களைத் திரட்டிப் போராடி வருகிறார். கூட்டணி அரசின் முடிவை எதிர்த்து அவர் செயல்படுவதால் கூட்டணி முறிந்துவிடுமோ என்ற பீதியில் பார்வர்டு பிளாக் அவரைக் கட்சியிலிருந்தே நீக்கிவிட்டது. இது தவிர சுசி (SUCI) கட்சியும், காங்கிரசு - ஜனதாதள கட்சிகளின் அதிருப்தி கோஷ்டிகளும் ஓட்டு வங்கியை இழந்து விடாதிருக்கப் போராட்டத்தை ஆதரிக்கின்றன.


178 மீட்டர் நீளமும் 85 மீட்டர் அகலமும் கொண்ட தீன்பிஹா இடைவழிப் பாதை தினமும் 6 மணி நேர போக்குவரத்துக்கே வங்க தேச மக்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் நாற்புறமும் இந்தியக் கொடி பறக்க எல்லைப் பாதுகாப்புப் படையின் காவலும் போடப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தியாவின் சுயாதிபத்திய உரிமையே பறிபோய்விட்டதாகவும், குச்சிலிபாரி கிராமம் இந்தியாவிடமிருந்து துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் வீண் வதந்திகளைக் கிளப்பி இக்கட்சிகள் பீதியூட்டி வருகின்றன. காஷ்மீரிலிருந்து இந்துக்களைப் பீதியூட்டி வெளியேற்றி சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கியது போல குச்சிலிபாரியிலிருந்தும் பாரதீய ஜனதா இந்துக்களை வெளியேற்றி வருகிறது.

பாரதீய ஜனதாவின் வாதப்படி, ஒரு இடைவழிப் பாதையை அண்டை நாட்டின் போக்குவரத்துக்கு அனுமதிப்பது சுயாதிபத்திய உரிமைக்கு எதிரானது என்றால், சூயஸ் கால்வாயையும், பனாமா கால்வாயையும் சர்வதேச போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதும் குற்றமாகிவிடும். ஆனால், இது வேறு விவகாரம் என்று அவர்கள் பூசிமெழுகுகிறார்கள். நாட்டின் ஒரு சிறு துண்டுப் பகுதியைக்கூட அண்டை நாட்டினர் பயன்படுத்த அனுமதிக்க மாட்டேன் என்கிற குறுகிய தேசிய வெறியின் வெளிப்பாடுதான் இது. அதற்கு முட்டுக் கொடுக்க இந்துவெறியையும் அது கிளறிவிடுகிறது. அதன் குறுகிய தேசியவெறி - மதவெறியூட்டலுக்கு நாட்டு மக்கள் பலியாகிவிடக் கூடாது. அதன் இந்துவெறி எத்தணிப்புகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய தருணமிது.

● குமார்.

படிப்பகம்

www.padippakam.com



# பாசிச ஜெயலலிதா ஆட்சியில் பெருகிவரும் போலீசு கொலைகள்!

பாசிச - பார்ப்பன ஜெயா ஆட்சிக்கு வந்தபின் போலீசின் கொட்டடிக் கொலைகளும் கிரிமினல் நடவடிக்கைகளும், ரௌடிகளின் அட்டகாசங்களும் பெருகி தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு மோசமாகி உள்ளதை கடந்த இதழில் அம்பலப்படுத்தினோம். இதோ மேலும் சில ஆதாரங்கள்! சிதம்பரம் - அண்ணாமலை நகர் போலீசு நிலையத்தின் கொலை - கற்பழிப்பு சம்பவத்திற்குப் பிறகு தமிழகத்தில் நடந்த லாக்கப் கொலைகள் இவை:

முதுகுளத்தூர் தாலுகாவில் உள்ள ஏர்வாடியைச் சேர்ந்த ராமு என்பவரது மனைவி பஞ்சவர்ணத்தின் நகை களவு போனது தொடர்பாக சந்தேகப்பட்டு அப்பாவியான முத்துச்சாமியை 10.7.92 அன்று போலீசு இழுத்து வந்தது. போலீசு நிலையத்தில் குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி அடித்து சித்திரவதை செய்தே கொன்றனர். பிறகு தூக்கு மாட்டிக் கொண்டதாக ஜோடித்தனர். முத்துச்சாமியின் மனைவியை அழைத்துவந்து தற்கொலைதான் என்பதற்கு உடன்பாடாக கையெழுத்தும் வாங்கியது போலீசு.

முத்துச்சாமி இறந்த செய்தி ஊரில் பரவியதும் வெகுண்டெழுந்த பொதுமக்கள் 2,000 பேருக்குமேல் திரண்டு போலீசு நிலையத்தை முற்றுகையிட்டனர். போலீசை திட்டி ஆவேசமாக குரலெழுப்பினர். போக்குவரத்து நின்றுபோனது. இராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி. ஜாபர் சேட் வந்து விசாரணைக்கு உத்தரவிடுகிறேன் என்றுகூறி சமாதானப்படுத்திய பின்னரே மக்கள் கலைந்தனர். முத்துச்சாமியை கொன்ற அன்று போலீசார் தூக்குமாட்டுவதற்காக கயிறு வாங்கிச் சென்றதையும், தூக்கில் தொங்கி முத்துச்சாமியின் பிறப்புறுப்பு வீங்கியிருந்ததையும் பொதுமக்கள் பலர் பார்த்துள்ளனர்.

இக்கொலையைக் கண்டித்து 17.7.92 அன்று அனைத்துக்கட்சி சார்பாக ஆர்ப்பாட்டமும் பொதுக்கூட்டமும் நடந்தது. ''முத்துச்சாமி அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்; எங்கள் கட்சிக்காரர்களையே இப்படி செய்யலாமா?'' என பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. கட்சிக்காரர்கள் புலம்பினர்!

★

தமிழகத்தில் பரபரப்பாக பேசப்பட்ட இன்னொரு சம்பவம்: குத்தாலம் போலீசு கலியபெருமாள் என்ற இளைஞரை களவு வழக்கு தொடர்பாக கைது செய்து அடித்து வதைத்தே கொன்று போட்டது. இதையும் தற்கொலை என்றே போலீசு ஜோடித்தது. பகுதி மக்கள் பெருமளவிற்குத் திரண்டு போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு தாக்கினர். மக்கள் தாக்குதலிருந்து தப்பிக்க முடியாத போலீசு துப்பாக்கியால் சுட்டு பயமுறுத்தியும் மக்கள் கலையாமல் தாக்குதல் தொடுத்தனர். இரண்டு பேருந்துகளை கொளுத்தினர். ஆயுதப்படை போலீசு கும்பல் வந்து மக்களை கட்டுப்படுத்தியது. கலியபெருமாள் பா.ம.க.-வைச் சேர்ந்தவர். அக்கட்சியினர் விசாரணை கோரி போராடி வருகின்றனர். இவ்வளவும் நடந்ததற்குப் பிறகே வேறுவழியின்றி திருச்சி டி.ஐ.ஜி. காசிம் குத்தாலம் போலீசார் சிலரை தற்காலிக நீக்கம் மட்டுமே செய்து உரிய நடவடிக்கை எடுத்துவிட்டதாக விளம்பரப்படுத்திக் கொண்டார்.

## ஒரு வாசகரின் குமுறல்!

போலீசு அராஜகம் பற்றி ஜூலை 1-15 '92 புதிய ஜனநாயகத்தில் எழுதியிருந்தீர்கள். அதுபோல் எங்கள் பகுதி பட்டுக்கோட்டையில் (பாசிச ஜெயா' ஆட்சியிலே) அதிகரித்துள்ள போலீசு அராஜகம் பற்றி குறிப்பிடுகிறேன்.

பட்டுக்கோட்டை வட்டம், அணைக்காடு கிராமத்தில் உள்ள லூக் என்பவன் ஒரு சிறிய ரவுடி! வழிப்பறி, சாராயம் விற்பனை செய்துவந்தான். இவன் மீது பல வழக்குகளும் 7 முறை பிடிவாரண்ட்டுகளும் போடப்பட்டன. மூன்று முறை போலீசின் பிடியிலிருந்து சாமார்த்தியமாக தப்பினான். பிறகு நாளடைவில் போலீசுக்காரர்கள் அவனுடன் குடிப்பது, ஓட்டல்களில் சாப்பிடுவது என பழகினர். போலீசின் நம்பகமான உதவியாளன் ஆனான், லூக்! 8 மாதத்திற்கு முன்பு 'வாரண்ட்' இருக்கும் போதே கடைவீதிகளில் சுதந்திரமாக சுற்றித் திரிந்தான்.

ஆனால் தற்போது மகாராணி சில்க் பேலஸ் மற்றும் விஜயா டிரான்ஸ்போர்ட் முதலாளியான வீரபத்திரன் என்பவருக்கும் லூக்கிற்கும் இடையே தகராறு ஏற்பட்டது. லூக்கை கவனிக்கச் சொல்லி வீரபத்திரன் போலீசிற்கும் பணம் கொடுக்கவே போலீசு லூக்கை இழுத்து வந்து பட்டுக்கோட்டை மணிக்கூண்டில் உள்ள போலீசு பீட்டில் ஜட்டியுடன் கட்டிப் போட்டது. பொதுமக்கள் அதிகம் நடமாடும் அந்த இடத்தில் அவனை பலமாக தாக்கியதோடு முக்கிய தெரு வழியாக அடித்து இழுத்தும் சென்றது. 17 18.7.92 ஆகிய இரு நாட்கள் பலமுறை அடித்து இழுத்து ஊர்வலம் போல் நடத்தி பேருந்து நிலையத்தில் இன்ஸ்பெக்டர் காலில் விழவைத்தனர். லூக் ஒரு அயோக்கியன்; அடிப்பது தவறல்ல. ஆனால் பொது இடத்தில் தாக்கி மக்களை பீதியூட்டுவதும் வாரண்ட் இருந்தும் ஒரு வருடம் விட்டு விட்டு ஒரு முதலாளியின் பணத்திற்காக அவனை தாக்கியதும் போலீசின் அயோக்கியத்தனமல்லவா?

மேலும் பட்டுக்கோட்டை முக்கிய சாலைகளில் டெலிபோன் - தொலைபேசி துறையினர் தமது வேலைக்காக பள்ளம் தோண்டி வைத்திருந்தனர். இதனால் சாலை ஓரத்தில் சைக்கிள்களை நிறுத்த முடியாமல் அவதிபட்ட பொதுமக்கள் பள்ளத்தைத் தாண்டி கொஞ்சம் சாலையில் நிறுத்தினர். ஆனால் போக்குவரத்து போலீசு இன்ஸ்பெக்டர் கண்மூடித்தனமாக திடீரென்று வந்து எல்லா சைக்கிளையும் லாரியில் அள்ளிப் போட்டுக் கொண்டு சென்றனர். அப்பொழுது ஒரு வயதானவர் சைக்கிளை அள்ளும் போலீசு மீது தெரியாமல் இடித்துவிட்டதற்காக அவரை இரக்கமின்றி அடித்தனர்.

பட்டுக்கோட்டை வி.என்.எஸ். சத்திரம் என்ற இடத்தில் சிறப்பு பிரிவு போலீசு கும்பல் தங்கியுள்ளது. இவர்களது வேலையே தெருவில் போகிற பெண்களை கிண்டல் செய்வதுதான். இதுவன்றி விபச்சாரிகளுடன் தொடர்பு வைத்து கொண்டும் திரிகின்றனர்.


- T.S.குணா.

படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, saidapet, Madras - 600 015

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344



சென்னையிலுள்ள ஆர்.வெங்கட்ராமனின் சொந்த பங்களா; உள்ளே: அரசு தந்துள்ள பொதிகை பங்களா.

# இதுதான் இன்றைய இந்தியா

ஜனாதிபதி பதவிக்காலம் முடிந்து திரும்பிய ஆர்.வெங்கட்ராமனுக்கு தமிழக அரசு சென்னையில் ஒதுக்கிக் கொடுத்துள்ள 'பொதிகை' பங்களா இது. சொந்த ஊர் பட்டுக்கோட்டையில் பண்ணை வீடுகளும் சென்னையில் இரு பங்களாக்கள் இருந்தும் ஆர்.வி., சிறிதும் கூச்சிநாச்சமின்றி அரசு பங்களாவிற்கு குடிவந்துள்ளார். டில்லியிலிருந்து திரும்பும் ஆர்.வி.க்கு என சென்னை கோட்டூர் புரத்தில் உள்ள அவரது பங்களாவை 75 லட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசு புதுப்பித்தது. ஆனால், அதை வாடகைக்கு விட்டுவிட்டு தனக்கு ராசியான(?) பொதிகை பங்களாவை ஆர்.வி. குறிப்பிட்டு கேட்கவும், அதிலிருந்த அமைச்சர் அரங்கநாயகத்தை உடன் காலி செய்ய வைத்து 1 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்து நவீனப்படுத்திக் கொடுத்துள்ளது தமிழக அரசு. 'பொதிகை'யைச் சுற்றி பிரத்தியேக போலீசு பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. எதற்காக இந்த உபசரிப்பு? ஆர்.வி., ஜனாதிபதியாக இருந்ததால் அல்ல; காங்கிரசு கட்சிக்கு விசுவாசமான ஒரு தலைவனாக செயல்பட்டதாலும், தமிழகத்தில் ஜானகி, கருணாநிதி ஆட்சிகளை கலைத்து, தொடர்ந்து 'ஜெ' ஆட்சிக்கு பக்கபலமாக இருந்ததாலுமே இந்த நன்றிக் கடன்!



இதோ கால்களில் மிதிப்பட்டுவிடக்கூடாது என அஞ்சி ஒடுங்கி, கூனிக் குறுகி சுவரோடு சுவராக ஒட்டி படுத்து உறங்குகிறார்களே இவர்கள் மூட்டை தூக்குபவர்கள், ரிக்ஷா - கைவண்டி இழுப்பவர்கள், நடைபாதை வாசிகள், கூலி உழைப்பாளிகள்! உழைத்த அலுப்பு தீருவதற்காக - மீண்டும் உழைப்பதற்காக சற்றே கண்ணயர்கிறார்கள். திடீரென மழை வந்தாலோ, இடியென போலீசின் லத்தி விழுந்தாலோ சுருட்டி வாரிக்கொண்டு ஓடவும் தயாராய் இருக்க வேண்டும் என்பதால் கோழித் தூக்கம்தான் தூங்குகிறார்கள்! சென்னை சேரிக் குடிசைகள் எல்லாம் நிரம்பிய பிறகு நகரத்திற்கு பிழைப்புத் தேடி வரும் திரள்திரளான மக்கள் ஒண்டுவதற்கு பேருந்து - ரயில் நிழற்குடை, சுரங்கப்பாதை, கோயில் - குளம், மடம், மரத்தடியை விட்டால் வேறு வழியில்லை. ''நகர் அழகை கெடுக்கும் அசிங்கங்கள்'', ''சுகாதாரத்தை மாசாக்கும் எச்சில்கள்'' என முத்திரை குத்தப்பட்டு விரட்டி அலைக்கழிக்கப்படுகிறார்கள்!

ஜனாதிபதி மாளிகையின் சுகபோகங்களில் மிதந்ததைத் தவிர - அடிக்கடி வெளிநாடுகளுக்கு அரசு பயணமென ஊர்ச்சுற்றியதைத் தவிர - மாதாமாதம் சங்கராச்சாரி காலில் விழுந்ததைத் தவிர - மக்கள் விரோத, பாசிச, கறுப்புச் சட்டங்களுக்கு 'ரப்பர் ஸ்டாம்பாக' செயல்பட்டதைத் தவிர ஜனாதிபதி பதவியில் ஆர்.வி. அப்படி என்ன கிழித்து விட்டார்?! இவருக்கு களைப்புத் தீர ஓய்வெடுக்க அரசு பங்களாவாம்! உழைத்து களைத்த பாமர மக்களுக்கோ ஒண்ட பங்களா நிழல்கூட சொந்தமில்லையாம்! இதை சகித்துக் கொண்டு இப்படியே வாழத்தான் போகிறோமா?

படிப்பகம்